நன்றி - நூலகத்திட்டம்


SARINIHAR


සරිනිහර්

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 187 டிசெ. 21 - ஜன. 12 2000 விலை ரூபா 10. 00.




## பரிசுகள்



நாடாளுமன்ற உறுப்பினர் மீண்டும் ஒரு முறை வந்தார்
கிராமத்தில் வாக்குச் சேகரிக்க

இந்தமுறை கிராமமக்கள்
தங்கள் காதுகளையும் கண்களையும் கழற்றி
அவருக்குப் பரிசாகக் கொடுத்தனர்

அவர்கள் கோரினர்
இவற்றை எடுத்துச் செல்லுங்கள்,
நாடாளுமன்றத்தில் இவற்றை மாட்டி வையுங்கள்
அப்போது எங்களால் உங்களைப் பார்க்கமுடியும்
நீங்களும் உங்கள் கட்சியும்
எங்களை இந்தச் சேற்றிலிருந்து கைதூக்கி விடுவதற்காக
நடத்தும் சண்டையை எங்களால் கேட்கமுடியும்
நாடாளுமன்ற உறுப்பினர் நன்றி கூறினார்
ஆனால் அந்த அற்புதமான பரிசுகளைத்
தனது சட்டைப் பைக்குள் வைத்துவிட்டு மறந்துவிட்டார்

அந்த ஏழைக் கிராமமோ
குருட்டுக் கிராமமாகி விட்டது
செவிட்டுக் கிராமமாகிவிட்டது
கால்நடைக் கிராமமாகி விட்டது
கிராம மக்களோ சேற்றில் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

அவர்கள் இன்னமும் சாகவில்லை என்றால்
வாழ்ந்து கொண்டுதான் இருக்கவேண்டும்
நாடாளுமன்ற உறுப்பினர் போலவே.

**கோஸ்டிஸ் பாப்பகோங்கோஸ்**

(KOSTIS PAPPAKONGOS)



நன்றி: அவ்வப்போது பறித்த அக்கரைப்பூக்கள்.

அடுத்த இதழ் ஜனவரி 13ல்

நன்றி - நூலகத்திட்டம்



# ஆவிகள் சந்திரிகாவுக்கு வாக்களிக்கலாம்

'எதிர்வரும் டிசம்பர் 21ம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் இறந்துபோனவர்களின் ஆவிகளும் வாக்களிக்கலாம் என நம்பப்படுகிறது' என சண்டே லீடர் பத்திரிகையில் எதிர்வரும் தேர்தல் பற்றி குறிப்பிட்ட பத்திரிகையாளரான ஃபெலிகன் குணவர்த்தன என்பவர் நகைச்சுவையாகக் குறிப்பிட்டுள்ளார். இதுபற்றி அவர் விளக்கம் தருகையில் பின்வரும் தகவல்களை எமக்கு அறியத்தருகிறார்.

1998ல் தயாரிக்கப்பட்ட வாக்களார் பட்டியலில் 255,000ம் அதிகமான பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் இறந்துபோய் விட்டதாகத் தெரிய வந்துள்ளது. ஆயினும் இவ்வாறு இறந்து போனவர்களின் பெயர்களை அகற்றி, பதிவுகள் இன்னும் புதிதாக்கப்படவில்லை. அதனால் எதிர்வரும் தேர்தலில் இறந்து போனவர்களின் வாக்குகளையும் ஆள்மாறாட்டம் செய்து பாவிப்பதற்கான அடுக்குகளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் செய்வதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதுபற்றி தேர்தல் பதிவாளர் நாயகம் மிகுந்த ரத்நாயக்காவிடம் கேட்டபோது அவர், இவ்வாறு இறந்து போனவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குமாறு தமக்கு உத்தரவு கிடைக்கவில்லை என்று கூறியதோடு இவற்றை இனி அகற்றுவதென்பது தேர்தல் நடைபெறவுள்ள இக்குறுகிய காலத்தில் சாத்தியமில்லை என்றும் கூறினார்.

மேலும் அவர் இதுபற்றித் தெரிவிக்கையில், இவ்வாறு இறந்தவர்களின் பெயர்களை நீக்குவதாய் இருந்தால், தேர்தல் திணைக்களம் தமக்கு ஒரு மாதத்திற்கு முன்னரே அறிவித்திருக்க வேண்டும் என்று கூறினார். மேலும் தேர்தல் திணைக்களத்தில் வேலை செய்யும் பெயர் குறிப்பிடப்பட விரும்பாத உத்தியோகத்தர்கள் இதுபற்றித் தெரிவிக்கையில் திடீரென தேர்தல் நடைபெறப்போவது பற்றி ஜனாதிபதி அறிவித்தால் தமக்கு இவற்றை சீராக்குவதற்கான அவகாசம் இருக்கவில்லை என்றும், ஆகவே தற்போது தேர்தல் திணைக்களம் 1998ல் தயாரிக்கப்பட்ட திருத்தப்படாத பட்டியலையே பாவிக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளதென்றும் கூறினர்.

ஆனால் வேடிக்கை என்ன வெனில், இவ்வாறு தேர்தல் பட்டியலில் உள்ள இறந்து போனவர்களின் பெயர் விபரப் பட்டியலை, தமக்குத்தருமாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னணி ஆதரவாளர்கள் இறப்பு பிறப்பு பதிவாளர்களைக் கேட்டிருப்பதாக யு.என்.பி பாராளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் சேனரத்ன பத்திரிகைகளுக்கு தகவல் கொடுத்துள்ளார். இதன் பின்னணி என்னவெனில் இறந்து போனவர்களின் வாக்காளர் அட்டைகள் அக்குடும்பங்களுக்கு தபாலில் அனுப்பப்படாமல் பார்த்துக்-கொள்வதோடு அவற்றை பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் ஆள்மாறாட்டம் செய்து வாக்களிக்க இது வழிவகுக்கும்.

# மீட்பர்களின் நடவடிக்கை

1996ம் ஆண்டு ஏப்ரல் மாதம் படையினர் யாழ்ப்பாணக் குடா நாட்டைக் கைப்பற்றிய பின்னர், படையினரால் கொல்லப்பட்ட பொது மக்களின் விபரம் சரிநிகர் 154, 156 இதழ்களில் "மீட்பர்கள் செய்த கொலைகள்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்தன. இதில் 1998ற்குப் பின் இடம்பெற்ற சம்பவங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இதில் ஊரடங்கு வேளையில் நடமாடியபோது சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் விபரமும், வன்னியில் இருந்து யாழ். திரும்பியபோது கடலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் விபரமும், தமிழ்க் கட்சிகள் எனப்படும் இயக்கங்களால் கொல்லப்பட்டவர்களின் விபரமும் சேர்க்கப்படவில்லை.

| திகதி | பெயர் | முகவரி | சம்பவம் |
|---|---|---|---|
| 10.10.98 | அந்தோனிப்பிள்ளை ராசமான்சிங் | பளை | துப்பாக்கிச் சூடு. |
| 19.10.98 | சித்திரன் இராசகோபால் | கோப்பாய் | துப்பாக்கிச் சூடு. |
| 26.10.98 | --- | --- | பண்ணைக்கடலில் துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் சடலம் மீட்பு. |
| 27.10.98 | இராஜரட்ணம் உதயகுமார் | நாயன் மார்கட்டு | படையினரால் அடித்துக் கொலை. |
| 05.11.98 | --- | பளை | துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் வயோதிபரின் சடலம் மீட்பு. |
| 26.11.98 | நாகலிங்கம் | கோப்பாய் | மிதி வெடியில் காயமடைந்து பின் மரணம். |
| 07.12.98 | அமிர்தன் அமில்டன் | கிளாலி | படையினர் வெறியாட்டம். துப்பாக்கிச் சூடு. (03 மாதக் குழந்தை) |
| 28.01.99 | ஞானப்பிரகாசம் அலோசியஸ் (கிறிஸ்தவ மத குரு) | முத்திரைச் சந்தை | ஹெலி தாக்குதல். (குருநகரில்). |
| 30.01.99 | செல்லத்துரை தயாளரூபன் | இமையாணன் | துப்பாக்கிச் சூடு. |
| 18.02.99 | சின்னத்தம்பி செல்வராசா | மட்டுவில் | துப்பாக்கிச் சூடு. |
| 24.02.99 | ஆசீர்வாதம் திவ்வியநாதன் | -- | துப்பாக்கிச் சூடு. |
| 24.04.99 | அற்புதன் கலிஸ்ரா | பளை | துப்பாக்கிச் சூடு. |
| | அற்புதன் ஜெயக்குமார் | பளை | துப்பாக்கிச் சூடு. |
| 25.04.99 | செல்லத்துரை ஜெகன் | உரும்பிராய் | கோப்பாயில் இடம்பெற்ற கிரனைட் தாக்குதலையடுத்துப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மரணம். |
| 03.06.99 | வல்லிபுரம் சிவஞானம் | கொடிகாமம் | தேங்காய் பிடுங்கச் சென்றபோது படையினரின் சூட்டுக்குப்பலி. |
| 23.06.99 | -- | மட்டுவில் மீசாலை | 05 சடலங்கள் கேரதீவுக் கடலில் கரையொதுங்கின. |
| 25.06.99 | --- | மட்டுவில், மீசாலை | 03 சடலங்கள் கேரதீவுக் கடலில் கரையொதுங்கின. இவர்கள் வன்னி செல்வதற்காகப் பூநகரி கடற்கரைக்குச் சென்றபோது படையினரின் சூட்டுக்குப் பலியானோர். |
| 10.07.99 | சந்திரன் சுரேஷ் | அச்செழு | ஷெல்லை எடுத்துக் குத்திப்பார்த்தபோது அது வெடித்து மரணம். |
| 28.11.99 | --- | மீசாலை | இளைஞர் ஒருவர் படையினரின் சூட்டுக்குப் பலி . |

## சந்திரிகாவின் மார்க்கோஸ் ஜனநாயகம்

பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோசின் ஜனநாயகம் பிரசித்தமானது. 'கள்ள வோட்' போடுவதில் உலகத்தில் அவருக்கு இணையான அரசியல்வாதிகள் யாரும் இல்லை என்கிற அளவுக்கு பிரசித்தமானவர் அவர்.

கள்ளவோட் விவகாரத்தில் நம்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் கூட பிரசித்தமானவர் தான்.

ஆயினும் அவரது கள்ளவோட் செயலில் ஒருவகையான நேர்த்தி இருந்தது என்று சொல்வார்கள். முக்கியமாக அவர் கள்ளவாக்குப் போடும் செயலைச் செய்யும் போது தனக்கு மட்டும் போடாமல், எதிராளிக்கும் போடுவிப்பாராம். இதனால் தான் ஜனாதிபதி தேர்தலில் அவருடன் போட்டியிட்ட குமார் பொன்னம்பலத்திற்கு எதிர்பார்க்கவே முடியாத வாக்குச் சாவடிகளிலும் ஒரு சில வாக்குகளாவது விழுந்தது என்பார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் தன்னுடன் போட்டியிட்ட சு.க. வேட்பாளர் கொப்பேகடுவ அவர்களின் வாக்கையே, அவர் வாக்குச் சாவடிக்குப் போகுமுன்பாகவே போடவைத்துக் காட்டியவர் ஜே.ஆர். என்பார்கள்.

ஜே.ஆர்., மார்க்கோஸ் ஆகியோரின் கள்ளவாக்கு விளையாட்டை விளக்கும் ஒரு 'ஜோக்' கூட வழக்கில் உண்டு.

ஒருமுறை அமெரிக்க ஜனாதிபதி றேகன், ஜே.ஆர். ஜயவர்த்தன, மார்க்கோஸ் ஆகிய மூவரும் ஒரு விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்தார்களாம். திடீரென எஞ்சின் கோளாறு ஏற்படவே, விமானி பயணிகளில் ஒருவர் கீழே குதித்தால் ஒழிய விமானத்தையோ, விமானத்தில் உள்ள நால்வரையுமோ காப்பாற்ற முடியாது. ஒருவர் தியாகம் செய்வதன் மூலம் விமானி உட்பட ஏனையோரை காப்பாற்ற முடியும். விமானி குதிக்கத் தயாராக இருந்தார். ஆனால், அவர் குதித்தால் யார் விமானத்தை ஓட்டுவது? எனவே அவர் குதிக்க முடியாது. யார் குதிப்பது என்ற பிரச்சினை எழுந்தது.

"நாங்கள் மூவரும் ஜனநாயக பாரம்பரியத்தில் வந்தவர்கள். யார் குதிப்பது என்பதை ஜனநாயக முறைப்படி தீர்மானிப்போம். வாக்கெடுப்பு நடாத்தி அதிகுறைந்த வாக்குபெறுபவர் குதிப்பது என்று முடிவு செய்வோம்" என்று ஆலோசனை கொடுத்தார் ஜே.ஆர்.

விமானியை தேர்தல் அதிகாரியாக வைத்து தேர்தல் நடந்தது.

வாக்குகள் எண்ணப்பட்டன.

ஜனாதிபதி றேகன் பெற்ற வாக்குகள் - 01

ஜே.ஆர். பெற்ற வாக்குகள் - 03

மார்க்கோஸ் பெற்ற வாக்குகள் - 333

அமெரிக்க ஜனநாயகத்தை உயர்த்திப் பிடிப்பதாக இந்த ஜோக் இருந்தாலும் இதில் சொல்லப்பட்டவை அனைத்தும் உண்மையே!

சந்திரிகாவின் ஜனநாயகம் ஜே.ஆரை மிஞ்சிய, மார்க்கோஸ் ஜனநாயகமே என்பதை மேலுள்ள வாக்குச்சீட்டு எண்ணிக்கையைப் பார்ப்பவர்கள் புரிந்து கொள்வார்கள்.

மூன்று லட்சம் வாக்களர்கள் உள்ள யாழ்ப்பாணத்திற்கு ஆறுலட்சம் வாக்குச்சீட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டதைப் பார்க்கையில் இந்த உண்மை தெளிவாக விளங்கும்.

### 2

அரசியலில் எதுவும் நடக்கும் என்பார்கள்.

கமிசன் நியமித்து 'கள்ளன்' என்று நிரூபித்து அவர் அவரது கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கு படாதபாடுபட்டு முயன்று வெற்றி பெற்ற பொ.ஐ.மு. அரசாங்கத்தில் முன்னாள் அமைச்சர் விஜயபால மெண்டிஸ் சேர்ந்து கொள்வார்: பொ.ஐ.மு விருந்துபசாரம் செய்து வரவேற்றுச் சேர்த்துக்கொள்ளும்.

எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்கள் முப்பதியிரண்டு பேர் படுகொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்ட அதிர்ச்சியூட்டும் சம்பவத்தை அம்பலத்துக்கு கொண்டு வந்த பொ.ஐ.மு. அரசாங்கத்தின் விருப்பத்திற்குரிய புதிய விருந்தாளியாக, இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக இருந்தவர் என்று நம்பப்படும் நந்தா மத்தியூ என்ற ஐ.தே.க எம்.பி. சேர்ந்து கொள்வார்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படும் வரை தொண்டமான் அவர்களது மறைவு வரை பொ.ஐ.மு. மலையைப் பிரட்டுவது என்றும், ஐ.தே.க படுகொலைக் கூடாரம் என்றும் கூறிக்கொண்டிருந்த மலையக மக்கள் முன்னணிக்கு திடீரென ஐ.தே.க தலைவர் மக்கள் துயர் துடைக்கும் தலைவராகத் தோன்றுவார். சந்திரசேகரன் பொ.ஐ.முவிலிருந்து விலகி ஐ.தே.கவில் சேர்வார்.

நிச்சயம் வெல்ல மாட்டார் என்ற காரணத்திற்காக நாம் வாசுதேவாவுக்கு ஆதரவு தரவில்லையென்றும், ரணிலை ஆதரிக்கப் போகிறோம் என்றும் ரெலோ அறிக்கை விடும். இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் பச்சை இனவாதிகள் என்று கூறிவந்த குமார் பொன்னம்பலத்திற்கு 'தமிழ் மக்கள் ரணிலை ஆதரிப்பதில் தப்பில்லை' என்று தோன்றும்

ஆனாலும் நிச்சியம் நடக்காது என்றும், சொல்வதற்கு சில விடயங்கள் உண்டு.

அவை தான் தமிழ்க்கட்சிகள் ஒருவரையும் பந்தம் பிடிக்காமல் சுயமாக தனித்துவமாக நிற்கும்.

மக்களின் உண்மையான தேவைகளை அரசியல்வாதிகள் பேசுவார்கள். ஜனாதிபதியாக வருபவர் இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பார்.

### 3

1989க்கு முந்திய பதினேழு ஆண்டு காலம் படுகொலை, பாலியல் வன்முறை, அதிகார துஷ்பிரயோகம், ஊழல் என்பன மலிந்த காலம் என்று சொன்னார்கள். இன்றும் அப்படிச் சொல்கிறார் ஜனாதிபதி சந்திரிகா. தன்னுடைய ஆட்சிக் காலத்தினால் தான் இவற்றுக்கெல்லாம் முடிவு கட்டப்பட்டது என்று வானொலி, தொலைக்காட்சி, மற்றும் பிரச்சார மேடைகளில் பீற்றித் திரிகிறார் அவர்.

நடுவீதியில் பெண்ணின் உடைகளை கிழித்தெறிந்தது, இலஞ்ச ஊழல் திணைக்கள ஆணையாளர்களை பதவி விலகுமாறு கோரியது, திணைக்கள தலைவர் நெலும் கமகேயை பதவியிலிருந்து தூக்கி எறிந்தது, பத்திரிகையாளர்களை கடத்திச் சென்றது, அவர்களது வாகனங்களுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தது, கொலை செய்தது, ஏன் அண்மையில் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார போஸ்டர்களை ஒட்டிக் கொண்டிருந்த ஜே.வி.பி. தொண்டர்களை தாக்கியது. அவர்களில் ஒருவரின் விரல் நகத்தைப் பிய்த்தெடுத்தது... என்று தொடரும் செயல்கள் அந்தப் 17 ஆண்டுகால காட்டாட்சிக்கு கொஞ்சமேனும் சளைத்தவை அல்ல என்று நிரூபிக்கின்றன.

அப்படியானால் அம்மா சொல்வது பொய்யா என்ன?

பொய் அல்ல, ஐ.தே.க காட்டாட்சியை முடிவுக்கு கொண்டு வந்தது அவர் என்பது உண்மை தான்.

ஆனால், அவர் அப்படி முடித்து வைத்தது, பொ.ஐ.மு. காட்டாட்சியைத் தொடக்கவே என்பதை அவர் சொல்லவில்லை.

அதை அவர் சொல்லித் தான் தெரியவேண்டுமா என்ன?

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ்ப்பாணம்: திரும்பி வரும் புலிகள்

சிறிலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் பலத்த ஒரு தாக்குதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. இதனால் அவர்கள் ஆனையிறவு முகாமை மிகவும் பலப்படுத்தியுள்ளதுடன் நன்கு பயிற்றப்பட்ட காலாட்படை அணிகளைக் கொண்டு வந்து அங்கு குவித்தும் உள்ளனர். ஆயினும் புலிகள் தமது ஓயாத அவைகள் 3 இன் ஒரு தந்திரோபாய அம்சமாக யாழ் குடாநாட்டிற்குள் நுழைந்து விட்டார்கள்.
ஆனையிறவு எல்லாக் காலகட்டங்களிலும் பாவிக்கப்படக் கூடிய குடாநாட்டிற்குரிய நுழைவாயிலாக பாரம்பரியமாக இருந்து வருகிறது.
ஆயினும், பழைய கண்டி வீதி போடப்படுவதற்கு முன்பு வடக்கு கிழக்குக்கான பாதையாக பிரதானமாக கடலேரிகளும் தண்ணீர்



பள்ளங்களும் நிறைந்த கரையோரப் பாதையே இருந்து வந்தது.
எழுபதுகளின் பிற்பகுதி வரை புதிய கண்டி வீதி திறக்கப்பட்டு நீண்ட காலமாகியும் இந்தக் கரையோரப் பாதையே முல்லைத்தீவின் கிழக்குப் பகுதிக்குச் செல்வதற்கான குறுக்குப் பாதையாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இலங்கை அரசாங்கத்தின் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் இதனூடாகவே நகர்ந்து கரப்புக்குந்தி, கரிப்பட்ட முறிப்பு ஆகியவற்றைக் கைப்பற்றியது. இயக்கச்சி சந்தியில் இந்த கரையோரப் பாதை தென்கிழக்குப் பக்கமாகப் பிரிந்து கரையோரமாக உள்ள கட்டைக்காட்டு நோக்கி செல்கிறது. இவ்விடயத்தில் அது ஒரு குறுகிய ஒடுக்கமாக உள்ள நிலப்பரப்பு வழியாக தெற்கு நோக்கி சென்று குடாநாட்டில் விழுகிறது. இந்த இடம் தான் சுண்டிக்குளம். பருத்தித்துறைக்கும் - கட்டைக்காடு சுண்டிக்குளத்துக்கும் இடையில் வெற்றிலைக்கேணி, ஆழியவளை கொடுக்கிளாய், வேம்படி, வத்திராணன், மருதங்கேணி, தாளையடி, செம்பியன்பற்று, யமுனை, குடாரப்பு, நாகர்கோவில், அம்பன், குடத்தனை, மணற்காடு, வல்லிபும் ஆகிய கரையோரக் கிராமங்கள் இருக்கின்றன. புலிகள் சுண்டிக்குளம் மருதங்கேணி கரையோரப் பாதையூடாக குடாநாட்டுக்குள் நுழைந்துள்ளார்கள்
குடாநாட்டின் யுத்த தந்திர பக்கவாயில் இப்போது புலிகளிடம் போயுள்ளது. இது புலிகளுக்கு தமது மரபுப் போர் படைகளை யாழ் நோக்கி நகர்த்த மிகவும் வசதியானது.
1998 இல் கிளிநொச்சியை வீழ்த்திய போது கடைப்பிடித்ததைப் போல ஆனையிறவுக்கு முன்பாக அதிகளவு படைகளைக் குவிக்காமல் புலிகள் இந்த தந்திரோபாய வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். மருதங்கேணியில் உள்ள இராணுவ முகாமைத் தாக்கியபடி அவர்கள் மேலும் முன்னேறியுள்ளார்கள். புலிகளால் தாம் கைப்பற்றிய பிரதேசங்களைப் பாதுகாக்க முடியுமானால் அவர்களது ஓயாத அலைகள் 3ற்கு மிகவும் சாதகமாக அவை அமையும். அவர்களால் இன்னும் ஆழமாக பருத்தித்துறையை நோக்கி நகர்ந்து மேற்கு நோக்கி நகர்வதன் மூலம் கண்டி றோட்டில் பளைக்கும் ஆனையிறவுக்கும் இடையில் ஏறலாம். இந்த நடவடிக்கை தென்மராட்சியில் உள்ள படையினருக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும். இப்போது ஆனையிறவு முகாமைச் சுற்றியுள்ள படைகள் புலிகளின் எறிகணை வீச்சுக்குள் வந்துள்ளன. இதேவேளை படையினர் யாழ் குடாநாட்டில் தெற்கு கரையோரமாக வந்த புலிகளை தாக்குவதில் கவனம் செலுத்துமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தாளையடி மருதங்கேணி சந்தியைப் போன்ற இடங்களில் உள்ள காவலரண்களை அழிக்கும் செயல்களில் அவர்கள் ஈடுபடக்கூடும் என்பதே இதற்குக் காரணமாகும். தவிரவும் கடலேரியூடாக யாழ் நகரிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ள தனங்கிளப்புக்கும் புலிகள் வந்து விட்டிருக்கிறார்கள்.
தனங்கிளப்பு யாழ்ப்பாணத்திற்கு எதிரான இன்னொரு முனையாக அமையப் போகிறதா?
புலிகள் இன்னும் தமது அணிகளை குவித்து சாவகச்சேரிக்கான பிரதான வீதிக்கு நெருக்கடி கொடுப்பார்களா? இராணுவத்தின் படைத்தளங்களை இயங்கவிடாது செய்யும் நோக்கத்துடன்.
இராணுவம் விழிக்கிறதா? ஒரே நேரத்தில் பல முனைகளில் புலிகளின் மரபுப் போர் விரிவடைந்து செல்கிறது. இப்போது இயக்கச்சியும் இதை அண்டிய பகுதிகளும் புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுத்த வண்ணம் உள்ளன என்று இராணுவ உயர்மட்டம் திகைத்துப் போய் உள்ளது முகாமுக்கான குடிநீர் வழங்கலை செய்யும் பகுதியும் இதனுள் அடங்கும். முகாமில் கிட்டத்தட்ட 10,000 துருப்புகள் இந்த நீரில் தங்கியுள்ளன. இயக்கச்சியும் புலிகளால் பிடிக்கப்படுமானால் ஆனையிறவு புலிகளின் முற்றுகையின் கீழ் வந்துவிடும்.
அரசாங்கம் இதை மறுத்தாலும் நேற்று வரையான உண்மை நிலை இதுதான். இந்த யுத்தத்தில் புலிகளின் நோக்கம் தெளிவானது. வெற்றிலைக்கேணியையும் கட்டைக்காட்டையும் எடுத்ததன் மூலம் அவர்கள் அவர்களது தளத்துக்கான உயிரோட்டமான பாதையை முதல் கட்டத்திலேயே உடைத்து விட்டார்கள். புலிகளால் கிளாலியில் யாழ் பாதை முழுமையாக துண்டிக்கப்பட்டிருந்த போது இந்தப் பகுதி தான் கிழக்குப் பக்கமாக கடற்படகுகளால் வளங்களை மேற்கொள்ள உதவும் பகுதியாக இருந்ததாலேயே இது உயிரோட்டமான பாதையாகக் கொள்ளப்படுகின்றது.
தளத்துக்குத் தேவையான வளங்களையும் தேவைகளையும் விமான மூலமாக முழுமையாகச் செய்துவிட முடியாது.
1991 இல் புலிகள் ஆனையிறவை முற்றுகையிட்டனர். இது ஒரு படையணிகளால் மேற்கொள்ளப்பட்டன. இந்த யுத்தத்தில் சில ஆட்டிலெறிகளும் ஆமர் வாகனங்களும் பாவிக்கப்பட்டன. 500க்கு மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டனர்.
வெற்றிலைக்கேணி கட்டைக்காடு மார்க்கமாக வந்த இராணுவத்தினர் ஒப்ரேசன் பலவேக மூலமாக இம்முற்றுகை முறையடிக்கப்பட்டது. ஆனால் இன்று அது பல்வேறு ஆதரவு அணிகளாலும் சூழப்பட்டிருக்கிறது. இதனால் தான் புலிகள் முதலிலேயே இந்தக் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி கரையைப் பிடித்து விட்டனர். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறி நான்கு வருடங்களின் பின் அங்கு திரும்பவும் வந்துள்ளார்கள் புலிகள்'.

**எஸ் ஆர் எம்.**

# ஆனையிறவு: அச்சுறுத்தலுக்குள்ளா?

ஆனையிறவு முன்னரங்கப் பாதுகாப்பு வலயத்தின் மீதும் வெற்றிலைக்கேணி நோக்கி மும் முனைகளிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட புலிகளின் தாக்குதலுடன் "ஓயாத அலைகள் 03" நடவடிக்கையின் 03ம் கட்டம், கடந்த 11ம் திகதி சனிக்கிழமை அதிகாலை 04.30க்கு ஆரம்பமானது. இதற்கு முன்னர் புலிகள் மேற்கொண்ட ஒட்டுசுட்டான் தாக்குதல், பலாவோடை, பாலம்பிட்டித் தாக்குதலைப் போன்று வெற்றிலைக்கேணி, புல்லாவெளி மற்றும் கட்டைக்காடு பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்ளல் புலிகளுக்கு அவ்வளவு கடினமாகதாக இருக்கவில்லை.

அதிகாலை காலை 04.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட புலிகளின் தாக்குதலினால் ஆனையிறவு இராணுவ முகாம் தொகுதியின், வட கிழக்குத் திசையில் அமைந்துள்ள புல்லாவெளி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பிரதேசங்களை அன்று பகல் பொழுதில் கைப்பற்றிக்கொள்ளப் புலிகளால் முடிந்தது. ஆனையிறவு முன்னரங்கப் பாதுகாப்பு வலயம், புல்லாவெளி மற்றும் வெற்றிலைக்கேணி நோக்கி ஒரே தடவையில் மேற்கொள்ளப்பட்ட புலிகளின் தாக்குதல்களை, ஓரளவுக்காயினும் தாக்குப் பிடிக்கக் கூயதாகவிருந்தது. புல்லாவெளி பிரதேசத்திற்குக் கீழ்ப் புறமாக அமைந்துள்ள, ஆனையிறவு இராணுவ முகாம் தொகுதியின் முன்னரங்கக் காவல் வலயங்கள் மீது மட்டுமே புலிகளின் தாக்குதல் ஆரம்பமானவுடன் ஆனையிறவு முன்னரங்கப் பாதுகாப்பு வலயத்திலிருந்த படையினர் பின்வாங்க வேண்டியேற்பட்டாலும், உதவிக்கு வரவழைக்கப்பட்ட படையணிகளின் தாக்குதலின் உதவியோடு, இரண்டாவது பாதுகாப்பு வலயத்திலிருந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடிந்தது. எனினும், வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, புல்லாவெளி ஆகிய பிரதேசங்களில் இருந்த படையினருக்குப் பின்வாங்குவதை விட வேறு வழியிருக்கவில்லை. சனி மாலை யுத்த நிலைமை சற்றுத் தணிந்திருந்தது. இரவில் பீரங்கித் தாக்குதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மட்டும் மேற்கொள்ளப்பட்டது.

மீண்டும் 12ம் திகதி, சாவகச்சேரி நோக்கிப் பீரங்கித் தாக்குதலை ஆரம்பித்தனர். சாவகச்சேரி மீது 12ம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் காரணமாகப் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டனர், 08 பேர் காயமடைந்தனர். நடராஜா இராஜேஸ்வரி (52), கந்தையா யோகலிங்கம் (56) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

**மக்களை வெளியேறுமாறு புலிகளின் வானொலி கோரிக்கை.**

13ம் திகதி திங்கள் காலை சாவகச்சேரி, மானிப்பாய், தென்மராட்சி இராணுவ முகாம்களுக்கு அண்மையில் உள்ள மக்களை வெளியேறிச் செல்லுமாறு புலிகளின் வானொலி அறிவித் திருந்தது. இந்தப் பிரதேசங்களிலிருந்து ஏற்கெனவே மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். அத்துடன் சாவகச்சேரி, தம்புத்தோட்டம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலுக்கு உள்ளாவது, இராணுவ முகாமின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்ததால் முகாம்களை வேறிடங்களுக்கு மாற்ற வேண்டிய நிலை படைகளுக்கு ஏற்பட்டது. கடந்த 15ம் திகதி புதன் வரை புலிகளால் சாவகச்சேரி பிரதேசத்திற்கு 20 பீரங்கித் தாக்குதல்கள் மட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்தச் சந்தர்ப்பத்தில் அனைத்து மக்களும் சாவகச்சேரியிலிருந்து வெளியேறியிருந்ததுடன், அங்கு அமைந்திருந்த ஈ. பி. டி. பி. அலுவலகத்துக்கு அண்மையிலும், ஈ. பி. ஆர். எல். எப். காரியாலயத்திற்கு அண்மையிலும் விழுந்த ஷெல் தாக்குதலின் காரணமாக அந்த அலுவலகங்கள் இரண்டும் சின்னாபின்னமாகின. எவ்வாறாயினும், 15ம் திகதி புதன் அன்று ஆனையிறவு, சாவகச்சேரி மற்றும் வெற்றிலைக்கேணிக்கு மேல் புறமாக உள்ள பிரதேசங்களில், இரு சாராருக்கும் எதிராகப் பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வந்ததாக வட பகுதித் தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் புலிகளின் தாக்குதலினால் நவீனரக யுத்த டாங்கிகள் இரண்டு அழிக்கப்பட்டதாக உத்தியோகப் பற்றற்ற இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. புலிகளின் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் ஆனையிறவு முகாம் காவல் முன்னரங்கப் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்ற மோதல்களில் 200 புலிகளை படுகொலை செய்ய முடிந்ததாக நடவடிக்கை தலைமையகம் அறிவித்திருந்த போதும், புலிகள் 11ம் திகதி மாலை வெளியிட்ட அறிக்கைகள் இவற்றை மறுத்திருந்தன. புலிகளின் லண்டன் அலுவலகம் வெளியிட்ட அந்த அறிக்கையின்படி அத்தாக்குதலில் 15 புலிகளே இறந்துள்ளதாக தெரிவித்திருந்தனர்.

இராணுவத் தலைமையகம் இவ்வாறு தெரிவித்தது.

கடந்த 12ம் திகதி நடவடிக்கை தலைமைச் செயலகம் வெளியிட்ட அறிக்கையின்படி இராணுவவீரர்கள் 8 பேர் கொல்லப்பட்டும் 101வர் காயமடைந்துமுள்ளனர். 13ம் திகதி மேலும் 10 பேர் இறந்தும் 28 பேர் காயமடைந்துமுள்ளனர். வெற்றிலைக்கேணி பிரதேசத்தில் இராணுவத்தினரின் சடலங்கள் நூற்றுக்கணக்கில் காணப்படுவதாகவும், ஆயுதங்கள் பலவற்றை கைப்பற்றிக்கொள்ள முடிந்ததாகவும் 13ம் திகதி இரவு "புலிகளின் குரல்" வானொலி அறிவித்திருந்தது. உத்தியோகப்பற்றற்ற பாதுகாப்பு தரப்புகளின் செய்திகளின்படி கிட்டத்தட்ட 60 இராணுவத்தினர் இதுவரையில் கொல்லப்பட்டுள்ளனர் என கூறப்படுகின்றது.

வெற்றிலைக்கேணி கடல் எல்லையில் இருந்த கடற்படையினரும் இவற்றில் அடங்குவர்.

கடந்த 11ம் திகதி "ஓயாத அலைகள் 3" என்ற பெயரில் ஆரம்பமான புலிகளின் தாக்குதல் "ஜயசிக்குறு" மற்றும் "ரிவிபல" நடவடிக்கைகளினால் விடுவிக்கப் பட்ட பிரதேசங்களை கைப்பற்றிக் கொண்டு ஓமந்தை மற்றும் கஜபாபுர பிரதேசம் வரை, "ரணகோஷ" மூலம் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தை கைப்பற்றிக்கொண்டு மடு பிரதேசம் வரையில் புலிகளினால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டுள்ளன. வெற்றிலைக்கேணி பிரதேசம் கைப்பற்றப் பட்டதுடன் இராணுவத்திற்கு "பலவேகய" நடவடிக்கையினால் விடுவிக்கப்பட்ட பிரதேசம் இழக்கப்பட்டது. குறிப்பாக 11ம் திகதி காலை ஆரம்பிக்கப்பட்ட இத்தாக்குதலில் காணக்கூடிய விஷேடதன்மை, ஆனையிறவு முகாம் தொடக்கம் படையணிகள் முன்னோக்கி வர முடியாத வகையில் ஆனையிறவு இராணுவ முகாம் நோக்கியும் புல்லாவெளி பிரதேசத்திற்கு தொடர்ச்சியாக பீரங்கி தாக்குதலும், புலிகளின் 500 பேர் அடங்கிய குழு சிறிய ரக ஆயுதங்களினால் தாக்கிக் கொண்டிருந்த போது மேலதிக குழுக்கள் இரண்டு, வெற்றிலைக்கேணி பிரதேசத்திற்குள் பாரிய தாக்குதலை மேற்கொண்டு பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டதாகும்.

**சாவகச்சேரி அபாயத்தில்**

புலிகள் அமைப்பின் பீரங்கித் தாக்குதல் தற்போது சாவகச்சேரி பிரதேசத்தில் மேற்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன், இத்தாக்குதல்கள், வெற்றிலைக்கேணியின் கிழக்குப் பகுதியில் 10 கி.மீ அப்பாலிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தன. வெற்றிலைக்கேணி, கடல் பரப்பில் அமைந்துள்ள பிரதேசம் படகுத்துறையும் கூடிய பிரதேசமாகையால் இந்தப் பிரதேசத்தை கைப்பற்றியமையானது புலிகளுக்கு தந்திரோபாயரீதியில் இலாபம் ஏற்பட்டுள்ளது. அதாவது, மன்னார் விடத்தல்தீவு கடல் எல்லை புலிகளின் கீழ் இருப்பதை விட சாதகமான நிலைமையாகும். ஏனெனில், கைப்பற்றலுடன் பலாலி இராணுவ முகாம் நோக்கியும் யாழில் குறிப்பிடத்தக்க நிலைகள் பலவற்றுக்கும் எதிராக தாக்குதலை மேற்கொள்ள கிடைத்துள்ள சாதகமான நிலைமையாகும்.

**உபாயம் என்ன?**

ஒரு முறை புலிகள் விடத்தல் தீவுக்கு கொண்டுவந்த மல்டி பெரல் ரொக்கட் லோஞ்சரைப் பயன்படுத்தி தள்ளாடி இராணுவ முகாம் மீது தாக்குதல் மேற்கொண்டனர். வெற்றிலைக்கேணி நோக்கி நிலைப்படுத்தப்படக்கூடிய இவ்வாறான ஆயுதத்தினால் அல்லது பீரங்கியினால் யாழ் எல்லை நோக்கி கூட தாக்குதலை மேற்கொளளும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. யாழ் குருநகர், வலிகாமம், மானிப்பாய் ஆகிய பிரதேசங்களில் இருந்து மக்களை வெளியேறுமாறு புலிகள் கூறியிருப்பது, இதற்கான சமிக்ஞையாக இருக்கலாம். எவ்வாறாயினும் இதன்படி "ஓயாத அலைகள் 3" ஆரம்பிக்கப்பட்டு சில தினங்கள் கடந்தபின் வவுனியா மக்கள் அப்பிரதேசங்களிலிருந்து வெளியேறுமாறு அறிவித்தமை போன்ற சந்தர்ப்பம் ஏற்படுத்தலும் இடம்பெறலாம். வவுனியாவிலிருந்து மக்களை வெளியேறுமாறு கூறி பாதுகாப்பு தரப்பினரின் அவதானத்தை வேறு பக்கம் செலுத்தி வன்னிக்கு மேற்குப்புறம் அமைந்துள்ள மடு பிரதேசம் மீது புலிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதுவும் அவ்வாறானதொரு திட்டமாக இருக்கலாம். எவ்வாறாயினும், வெற்றிலைக்கேணி பிரதேசத்தை புலிகள் கைப்பற்றியுள்ளது யாழ் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலான படியால் மிக அண்மையில் அங்கு இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்க வாய்ப்புள்ளது. இந்த "ஓயாத அலைகள் 3" விதியின் விளையாட்டா எனக் கருதக் காரணம், ஜனாதிபதித் தேர்தல் மிக அண்மையில் இருக்கும் போது இந்த தாக்குதல் மேற்கொள்ளப் பட்டமையாகும். கடந்த வாரங்களில், பல வருடங்களாகப் பல தேர்தல்களுக்குச் சாதகமான நிலைமையைப் பெறக்கூடியதாக அரசாங்கம் விடுவித்த பிரதேசங்கள் நாட்டின் பிரதான தேர்தலான ஜனாதிபதித் தேர்தல் சந்தர்ப்பங்களில் காட்டிக்கொள்ளப் பிரபாகரனால் முடிந்துள்ளது.

**நன்றி: யுக்திய**

நன்றி - நூலகத்திட்டம்



கடந்த வாரம் சண்டே ரைம்ஸ் இதழில் வெளியான சிலிங்கோ குறுாப் கொம்பனிகளின் தலைவரான லலித் கொத்தலாவல அவர்களது நேர்காணலை இங்கு தருகிறோம். சமாதானம் நிலவ வேண்டும் என்ற விருப்புடன் அரசியல் தலைமைகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியவர்களில் இவரும் ஒருவர். இலங்கையின் தொழிற்றுறை சம்பந்தமான அரச செயற்பாடுகள் குறித்த அவரது அவதானங்களில் ஒன்றாக சண்டே ரைம்ஸ் இவ்வாறு எழுதுகிறது:

இலங்கையின் அரசியல் மயப்படுத்தலால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம் என்று அவரிடம் கேட்டபோது, அவர் பின்வருமாறு கூறினார்.

"இலங்கையில் ஒருவர் க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியெய்தா விட்டாலும் ஜனாதிபதியாகலாம். ஆனால், ஒரு பஸ் சாரதி க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியெய்தாவிட்டால் அப்பதவிக்கு வரமுடியாது. மேலும் விபத்தின்போது சனங்கள் கொல்லப்பட்டால் பஸ் சாரதி மறியலுக்கு செல்ல வேண்டும். அத்தோடு 55வயதுக்குப்பின்னர் அவர் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், ஜனாதிபதிப் பதவியில் இருப்பவருக்கு இந்தவித ஓய்வுக்கான வயதெல்லைகள் இல்லை, பொறுப்பில்லை, வழக்குகள் இல்லை, இது ஒரு ஆச்சரியம் இல்லையா?"

**செலான் வங்கியின் பங்கீட்டுப் பெறுமதி சென்ற வருடம் 140 ரூபாவிலிருந்து 14.50 ரூபாவுக்கு வீழ்ச்சியடைந்தது பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன?**

நாங்கள் மட்டும் தனியாக அல்ல எல்லா வங்கிகளும் பாதிப்படைந்தன. பங்குச் சந்தைக்கும் கொம்பனிகளுக்கும் இடையே பெரிய வித்தியாசம் உண்டு. ஆனால், சந்தை வீழ்ச்சியடையும்போது அது வர்த்தகத்தையும் பாதிக்கிறது என்பதில் உண்மையில்லை. நான் ஒருபோதும் பங்குகள் வாங்கி விற்பவன் அல்ல.



**பங்கு சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டதா? அப்படியானால் எப்போதிருந்து?**

பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டது. அந்த வீழ்ச்சி இந்த அரசாங்கத்தின் வருகைக்குப்பின்னரே ஏற்பட்டது. சென்ற அரசாங்கத்தின் காலத்தில் அது ஏற்றம் அடைந்திருந்தது. அதற்கான காரணங்களும் இருந்தன.

**அது என்ன?**

இணைக்கக்கூடியதாக இருந்தது. இப்பொழுது நாங்கள் விடுதலைப்புலிகளோடு சமாதானப் பேச்சுவார்த்தைக்காக முயன்றுகொண்டிருக்கிறோம். நான் ரணிலோடும், சந்திரிகாவோடும் கதைத்து விடுதலைப் புலிகளோடு கதைப்பதற்கு அனுமதிப் பெறவேண்டும். இந்தத்தேர்தல் முடிந்ததும் அதில் நான் ஈடுபடுவேன்.

**இரண்டு அரசாங்கத்தின்போதும் இருந்த பொருளாதார நிலைபற்றி நீங்கள் ஒப்—பிடமுடியுமா? அப்படியாயின் அவற்றிடையே இருந்த வித்தியாசம் பற்றித் தங்கள் கருத்து?**

முந்திய அரசாங்கம் பலமாய்

# "இலங்கையில் எல்லா அரசாங்கங்களும் பொருளாதாரத்தைத் தவறாகவே வழிநடாத்திச் சென்றுள்ளன"

**– சிலிங்கோ குறுாப் கொம்பனிகளின் தலைவர் லலித் கொத்தலாவல**

**இந்த விஷயங்களில் மாற்றம் ஏற்படுவதற்கு நீங்கள் உங்கள் செல்வாக்கைப் பாவித்தால் என்ன?**

எங்களிடம் அவற்றைச் செய்வதற்கான அதிகாரம் இல்லை. அப்படி நாம் இவைபற்றி கதைக்க முற்பட்டால் எமது தலைகளுக்குப் பாதுகாப்பில்லை. இத்தகைய முயற்சியில் நாம் ஈடுபட்டால், நீங்கள் நினைக்கிறீர்களா இவர்கள் எம்மோடு குரோதம் பராட்டாமல் இந்த வேலைகளைச் செய்யவிடுவார்கள் என்று?

**சிலர் சொல்கிறார்கள். கடந்த ஐந்தாண்டுகளில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக. சிலர் அபிவிருத்தி அடைந்துள்ளாதாக சொல்கிறார்கள். இதில் எது சரியானது என்பீர்கள்?**

இரண்டும் சரி, திறந்த பொருளாதாரத்தில் தலையிடுவது என்பது ஒரு அரசாங்கத்துக்கு கஷ்டமான செயலே. அதற்கு இவ்விஷயத்தில் வழிகாட்ட முடியுமேயொழிய அதைக்கட்டுப்படுத்த முடியாது. என்னைப் பொறுத்தவரை இலங்கையில் எல்லா அரசாங்கங்களும் பொருளாதாரத்தை தவறாகவே வழிநடத்திச் சென்றுள்ளன.

**அண்மைக்காலத்தில் தங்கள் வியாபாரம் தொடர்பாக இந்த அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு என்ன?**

மிகக் குறைவே.

**ஏன் அப்படி?**

நான் என்னுடைய காலிலேயே நிற்க முயன்றேன். அரசாங்கம் எனக்கு மட்டுமல்லாது ஏனைய வியாபாரிகளுக்கும் வரிச்சலுகை அளித்து வழிநடத்தியது.

**வியாபாரிகள் இதனால் உண்மையில் எதனைப் பெற்றார்கள்?**

எங்களுக்கு முதலீட்டு ஒழுங்குமுறைகளும், நிவாரணமும் கொடுக்கப்பட்டன. இது எதனையும் மாற்றிவிடவில்லை. இவை முன்னைய அரசு நமக்களித்தவை மாதிரியே உள்ளன.

யுத்தத்தால் பீடிக்கப்பட்ட நாட்டில் அந்நிய முதலீடு மிக அபூர்வம்.

**ஆனால். ஐ.தே.கவின் ஆட்சிக்காலத்திலும் யுத்தம் இருந்தது தானே இருக்கிறது?**

ஆனால், அவர்கள் பொருளாதாரத்தை நன்கு கவனித்தார்கள்.

**நமது அரசியல்வாதிகள் குறைபாடு என்னவென்று கருதுகிறீர்கள்?**

ஹோசிமின், மண்டேலா, மார்ட்டின் லூதர்கிங், மாஓ ஆகியோர் மக்களைக் கவர்ந்திழுக்கும் சக்திமிக்க தலைவர்கள். அவர்கள் இரும்பு முஷ்டி உடையவர்கள். மண்டேலாவுக்கு லஞ்சம் கொடுக்கவில்லையா? ஆனால், அவர் லஞ்சம் வாங்கவில்லை. அத்தகைய தலைவர்களே நமக்கு வேண்டும். அரசியல்வாதிகளே இந்தத்தீவை அபிவிருத்தியடையச் செய்ய வேண்டும் என்பதையும் அவர்களே எங்கள் உதவியைக் கோர வேண்டும் என்பதையும் நான் வலியுறுத்துவேன். அத்தகையவர்களுக்கு நான் உதவியை வழங்கத் தயாராய் உள்ளேன்.

**நீங்கள் ஏன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முயற்சி எடுத்தீர்கள்?**

நாங்கள் சிங்களவர்கள். எங்களுடைய சிறுபராயத்தில் துட்டகைமுனு பற்றிய கதைகள் சொல்லப்பட்டன. இந்த யுத்தத்தை எவ்வளவு காலமாகத்தான் இழுத்துக்கொண்டு போவது? பிரபாகரன் எங்களுடைய சிலிங்கோ கட்டிடத்தை தகர்க்க முயன்றார். அதில் பல பேர் கொல்லப்பட்டனர். ஆனால், நாங்கள் எம்வேற்றுமைகளை விட்டு ஒருவரோடு ஒருவர் அன்பில் இணைய வேண்டும். அதை அடைய நான் முயற்சித்தேன்.

**அதில் வெற்றி கண்டீர்களா?**

ஓரளவு. என்னால் ஐ.தே.கவையும், பொ.ஐ.முவையும் ஓரளவு

இருந்தது. எந்த விஷயத்திலும் "ஆம்" அல்லது "இல்லை" என்று முன்னைய அரசு 24 மணித்தியாலத்திற்குள் பதில் அளிக்கக்கூடியதாய் இருந்தது. ஐ.தே.க. அரசாங்கம் செலான் வங்கியின் 90 கிளைகளைத் திறப்பதற்கு உதவி தந்தது. அத்தோடு எங்களது எந்த ஆலோசனைகளுக்கும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கிடையில் பதில் கிடைக்கும்.

**அது எப்போது நடந்தது?**

பிரேமதாசாவின் காலத்தில். ஏன் ஜே.ஆர்.,விஜேயேதுங்க காலத்திலும் சரி, ரணிலுடைய காலத்திலும் சரி, நிலைமை பிழையாய் இருக்கவில்லை. நான் இந்த அரசாங்கத்தை தாழ்த்துவதாக எண்ணக கூடாது. இது அவர்களின் பலவீனம்.

**ஒரு கடிதம் அனுப்பினால் அதற்கு பதில் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்று நீங்கள் சொல்வது எதைக் குறிப்பிட்டு?**

அதாவது இந்த அரசு உடனுக்குடன் தீர்வு எடுப்பதில் பலவீனமாய் உள்ளது. இங்கே சிவப்பு நாடா விவகாரமே அதிகம். இவர்களிடமிருந்து ஒரு மாதத்திற்குப் பின்னர் பதில் கிடைப்பதற்குள் நாம் மீண்டும் முன்னர் எழுதிய கடிதம் பற்றி கேட்டு எழுதவேண்டியிருந்தது.

**உங்களது அரசியல் நிலைப்பாடு என்ன?** இது பற்றி சொல்வது கஷ்டம் இரு தலைவர்களும் உண்மையானவர்கள். அவர்களது கட்சி ஆட்சிகளின் தகுதியைப்பற்றி நாம் அறிய வேண்டும். இரு கட்சிகயின் தலைவர்களும் எமக்கு ஒரு நல்ல வைப்புத்தான். ஆனால், பலவீனம் எல்லாம் அவர்களுக்கு கீழ் உள்ளவர்களில் தான் உண்டு. இதை அவர்களால் சீராக்க முடியும் என நான் நம்புகிறேன்.

**முன்னைய காலத்தில் பணப்புழக்கம் அதிகமாய் இருந்தது என்பது மக்கள் அபிப்பிராயம். அது பற்றி தங்கள் கருத்து?**

அதை அரசாங்கம் ஒப்புக் கொள்வதில்லை. இதை மக்கள் தேர்தலில் வாக்களிப்பின் மூலம் தீர்மானிப்பார்கள்.

# காட்டுமிராண்டித் தனமான சுவரொட்டிப் பிரச்சாரம்

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலுக்காக பிரதான அரசியல் கட்சிகளான பொ.ஐ.முவும், ஐ.தே.கவும் தத்தமது வீரப் பிரதாபங்களையும் எதிர்த்தரப்பின் தவறுகளையும் போட்டி போட்டுக் கொண்டு மாறி மாறி அம்பலப்படுத்தி வருகின்றன. எதிர்ப் பிரச்சார சுவரொட்டிகளை ஒட்டிவிடுகின்றன. இங்கு ஐ.தே.கவின் கடந்தகால அட்டூழியங்களை அம்பலப் படுத்தும் வகையில் பொ.ஐ.முவால் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டியொன்று அனைவரின் கவனத்தையும் சுண்டுவதாயுள்ளது. அச்சுவரொட்டியை நின்று திரும்பிப் பார்க்காதவர்கள் யாருமில்லை எனக் கூறலாம். குறிப்பாக இளம் ஆண்கள் அதன் முன் கூடி நிற்பதையும், தமக்குள் கதைத்துக் கொள்வதையும் காண முடிகிறது. ஐ.தே.க. அரசாங்கத்தின் கொடுங்கோல் ஆட்சியை நினைவூட்டும் அச்சுவரொட் டியில் இளம் பெண்கள் சிலர் குரூரமான சித்திரவதைக்குள்ளாகி படுகொலை செய்யப்பட்டு நிர்வாணமாக விடப்பட்டிருக்கும் படத்தை அச்சுவரொட்டி சித்திரிக்கின்றது. அதைப் பார்த்ததும் மனச்சாட்சியுள்ள எவரது மனமும் ஆத்திரத்தாலும், வேதனையாலும் கொதித்தெழும். ஆனால், அதன் மறுபுறம், பெண்கள் இத்தனை குரூரமான துன்புறுத்தலுக்கும் இழிவுபடுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கும் நிலையை படம் பிடித்து அதைப் பகிரங்கமாக வீதிகளில் ஒட்டியிருக்கும் செயல் நமது ஆத்திரத்தை மேலும் கிளறி விடுவதாகவே உள்ளது. பெண்கள் அனுபவித்த துயரத்தை, வலியை,


செய்து நிர்வாணமாக ஆற்றில் வீசி எறிந்தது.

1977,1981,1983களில் தமிழர் இனப்படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்ட ஜே.ஆர். தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம் தமிழ் பெண்களை பாலியல் வன்புணர்ச்சிக்குள்ளாக்கி படுகொலை செய்ததன் மூலம் தனது இனப் பகைமையை, ஆணாதிக்க இன மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயன்றது.

1987 - 1989 காலப் பகுதியில் பிரேமதாச தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம் ஜே.வி.பி. மீதான அடக்குமுறையைக் காரணமாகக் கொண்டு சிங்களப் பெண்களை மனிதகுலமே அச்சமுறும் வகையிலான குரூரப்பாலியல் சித்திரவதை, வன்புணர்ச்சி, அவமானப் படுத்தல்களுக்குள்ளாக்கி படுகொலை செய்தது.

1987ல் [illegible] செய்து கொண[illegible]ர். தலைமையி[illegible] சிறீலங்கா அரசு இந்திய படையை வரவழைத்ததன் மூலம் தமிழ் பெண்கள் உட்பட சிங்கள, முஸ்லிம் பெண்கள் மீதான இந்தியப் படையின் அட்டூழியங்களுக்கு உடந்தையாயிருந்தது.

1990ல் மீள தமிழர் .மீது போர்ப் பிரகடனம் செய்த பிரேமதாச (அவரைத் தொடர்ந்து வந்த ரணில் தலைமையிலான) ஐ.தே.க அரசாங்கம் தனது அரச படையைக் கொண்டும் குண்டர் படையைக் கொண்டும் தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் சித்திரவதையிலும் வன்புணர்ச்சியிலுமீடுபட்டது.



வெறுப்பை, கொடுமையை... தனது அரசியலுக்காக உபயோகித்துக் கொள்ளும் பொ.ஐ.முவின் செயல் காட்டுமிராண்டித்தனமானது. தன்மானமுள்ள எந்தப் பெண்ணும் மனித நேயமுள்ள எந்த ஆணும் இதை அங்கீகரிக்க மாட்டார்கள். துன்புறுத்தலுக்குள்ளாகி படுகொலைக்குள்ளான பெண்களை தனது பங்கிற்கு மேலும் இழிவு படுத்தலுக்குள்ளாக்கிடும் ஆணாதிக்க வக்கிரத்தனத்தையே இச்சுவரொட்டி வெளிப்படுத்துகிறது.

இங்கு நமக்கு ஒரு கேள்வி எழுகிறது. நமது சகோதரிகளின் நிர்வாணத்தை பிரச்சாரப்படுத்துபவர்கள் தமது பெண் பிள்ளைகளும், சகோதரிகளும் இத்தகைய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தால் அத்துயரத்தை படம் பிடித்து இது போல் நாடுபூராவும் தெருத் தெருவாக ஒட்டுவார்களா? அடக்கப்பட்ட மக்களின் பெண் மக்களை தமது அரசியல் நலன்களுக்காக எப்படியும் பயன்படுத்திக் கொள்ளலாம் எனும் அதிகாரத் திமிரைத்தான் இது வெளிப்படுத்துகிறது.

பெண்கள் சித்திரவதைக்குள்ளாக்கி கொலை செய்யப்படுவதும், நிர்வாண நிலையில் படம் பிடித்து உலளவியல் பிரச்சாரப்படுத்துவதும், இந்த அரசிற்கு ஒன்றும் புதியதல்ல. சிறீலங்கா அரசிற்கெதிராக பெண்கள் அரசியல் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கிய காலம் தொட்டு பெண்கள் மீது பாலியல் சித்திரவதைகளும், படுகொலையும் இந்த அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1971இல் ஜே.வி.பி. அமைப்புப் பெண்கள் அரசிற்கெதிராக கிளர்ச்சிப் போராட்டத்தில் ஈடுபட்டபோது சிறிமாவோ தலைமையிலான அன்றைய ஸ்ரீ.ல.சு.-க.கூட்டரசாங்கம் பெண்களை அவமானப்படுத்தியும் சித்திரவதைகள் செய்தும் வன்புணர்ச்சிக்குள்ளாக்கி படுகொலை

1994இல் ஆட்சிக்கு வந்த சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு. அரசு தமிழர் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை தீவிரப்படுத்தியதுடன் அரச படையினதும் ஊர்காவல் படைகளினதும் அடாவடித்தனம், தமிழ்ப் பிரதேசத்தில் அதிகரித்துள்ளது. தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் சித்திரவதை, துன்புறுத்தல், வன்புணர்ச்சி, படுகொலை அதிகரித்து வருகிறது.

காலத்திற்குக் காலம் சிறீலங்காவில் நடைபெறும் தேர்தலின்போது எதிர்த்தரப்புப் பெண்களை மாறி மாறி அரசியல் கட்சிகள் அவமதிப்பதும், துன்புறுத்துவதும் வழமையாயுள்ளது. வடமேல் மாகாண சபைக்கான தேர்தலின் போது ஐ.தே.க சார்புக் குடும்பத்து இளம் பெண்ணை பொ.ஐ.முவைச் சார்ந்தவர்கள் நிர்வாணமாக வீதிவழியாகக் கொண்டு சென்றனர்.

இவ்வாறு அரசானது பெண்கள் மீது எப்பொழுதும் பாசிசப் போக்கை வெளிப்படுத்துவதாகவே இருந்து வருகிறது. இந்த அரச இயந்திரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி எந்த கட்சி ஆட்சியமைத்தாலும் காலங்காலமாக இவ்வரசயந்திரம் பெண்களுக்கெதிராக மேற்கொண்டுவரும் அடக்குமுறை வடிவங்களை அவற்றால் இலகுவில் மாற்றிவிட முடியாது. அதேபோல் பெண்களை துன்புறுத்துவதில் கைதேர்ந்த பொ.ஐ.முவும், ஐ.தே.கவும் ஆட்சிக்கு வருவதென்பது இந்நாட்டில் பெண்களுக்குத் தொடர்ந்தும் சவக்குழி வெட்டப்படப் போவதையே குறிக்கும். உடனடி இலக்காக இவ்விரு கட்சிகளையும் நிராகரிப்பதும், நீண்ட காலத்தில் இவ்வாணாதிக்க அரச இயந்திரத்தைத் தகர்ப்பதுமே அச்சுறுத்தலற்ற வாழ்வை விரும்பும் பெண்களின் தெரிவாயிருக்க வேண்டும்.

- துஷ்யந்தி

நன்றி - நூலகத்திட்டம்



# புலிகளின் சவாலை எதிர்கொள்ளப் போகும் அடுத்த ஜனாதிபதி யார்?





"அரசாங்கம், அரசியல் ரீதியான ஆதரவுப் பலத்தில் மட்டுமல்லாமல், ஜனநாயக நடைமுறைகட்கு மாறான வேறு வழிகளிலும் நம்பிக்கை வைத்திருப்பதாகத் தெரிகிறது. எனவே, வெற்றி யார் பக்கம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாமல் இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கு இன்னும் சில நாட்களே உள்ளன.

இந்த நிலையில், வடக்கில், நடந்து கொண்டு இருக்கும் யுத்தச் செய்திகள் எதுவும் மக்கள் கைக்குப் போய் விடக் கூடாது என்பதில் அரசு மிகவும் அவதானமாக இருந்து வருகிறது. அண்மையில் தொடங்கி, மூன்றாவது வாரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் ஆனையிறவு முகாமைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் நடைபெறும் தாக்குதல்கள் தொடர்பான தகவல்களை, அரசாங்கம் மூடி மறைத்து வருகிறது. மிகவும் கடுமையான சண்டை அங்கு நடைபெற்ற போதும், இராணுவத் தரப்பு அழிவுகளை, மிகவும் சொற்பமானவையாகவும், புலிகள் தரப்பு இழப்புகளைப் பிரமாண்டமாகவும் காட்டுவதில் அரசாங்கத்தின் அக்கறை அண்மையில் இராணுவத் தலைமையகத்தில் கூட்டப்பட்டிருந்த மாநாட்டின் போது தெளிவாகத் தெரிந்தது.

இந்த மாநாட்டில், இராணுவத் தலைமையகத்தின் அதிகாரிகள் குழுத் தலைவர், மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவும், இைாணுவப் பேச்சாளர் சுனில் தென்னக்கோனும் உரையாற்றினார்கள்.

ஆனையிறவுச் சண்டையில், சண்டைகள் ஓயவில்லை என்றும், 28 இராணுவத்தினர் பலியானதாகவும் அறிவித்த அவர்கள், புலிகள் தரப்பில் கிட்டத்தட்ட 500 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவித்தனர். புலிகள், மக்கள் வாழும் பகுதி, இராணுவம் உள்ள பகுதி என்று பாராமல் கண்டபடி ஷெல் அடிப்பதாகவும், புலிகளின் வானொலியில் அவர்களில் 112 பேர் இறந்துள்ளதாகத் தெரிவித்ததாகவும் தெரிவித்தனர்.

ஆயினும், புலிகள் இந்தத் தகவலை, மறுத்ததுடன், 16ம் திகதி வரையான அவர்களது அறிவிப்பின்படி, 60 பேரே கொல்லப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கின்றனர்.

புலிகளைப் பொறுத்தவரை, இந்தத் தாக்குதல் மூலம் அரசாங்கத்தை அரசியல் ரீதியாகப் பலவீனப்படுத்துவதே அவர்களது பிரதான நோக்கமாக இருப்பதாகத் தெரியவருகிறது. ஆனையிறவு முகாமைக் கைப்பற்றுவது, அதைக் கைப்பற்றித் தக்க வைத்துக் கொள்வது என்பது புலிகளுக்கும் இராணுவ ரீதியில் அவ்வளவு பயனுள்ள ஒன்றாகக் கொள்ள முடியாது. ஆனையிறவு இராணுவ முகாமைத் தனிமைப்படுத்தக் கூடியளவுக்கு அதைச் சுற்றியுள்ள வெற்றிலைக்கேணி, புல்லாவெளி, மருதன்கேணி ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவ முன்னரங்குகளைப் பின் வாங்கச் செய்வதால், அவர்களது, வன்னியிலிருந்து யாழ்ப்பாண நகரை நோக்கிய பயணத்திற்கான வாய்ப்பு அதிகரிக்கும் என்பதும், யாழ்ப்பாணத்தில் தேர்தலுக்கு முன்பாகத் தமது ஊடுருவலை வெளிப்படையாகச் செய்வதுமே அவர்களது நோக்கமாக இருக்க வேண்டும் என்பது வெளிப்படை.

ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கி அழிப்பது என்பது பாரிய ஆளணி இழப்புகளை எதிர்நோக்கி மேற்கொள்ள வேண்டிய ஒரு தாக்குதலாக இருக்கும் என்பதால், புலிகள் அதைத் தவிர்த்து யாழ்ப்பாண நகர் நோக்கி நகருவதையே தமது இலக்காகக் கொள்வர் என்றே ஊகிக்கலாம்.

எனவே, இதுவரை நடந்த தாக்குதலில் அரசு குறிப்பிடும் அளவு இழப்புகளைப் புலிகள் எதிர்நோக்கியிருக்க வாய்ப்பு இல்லை என்றே தோன்றுகிறது.

புலிகள், அரசாங்கத்தை அரசியல் ரீதியாகத் தோல்வியுறச் செய்யுமளவுக்கான இராணுவ செயற்பாட்டில் இறங்குவதை யாழ்ப்பாண நகருக்குள் நுழைவதன் மூலம் சாதிக்க முடியும் என்று கருதி இருக்கக் கூடும்.

எவ்வாறாயினும், யுத்தம் தீவிரமான ஒரு நிலையில் இருக்கையில் தான், ஜனாதிபதித் தேர்தல் நடக்கிறது. தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைக்காக இராணுவத்தினரும் பங்குபற்றுவதற்காகத் தெற்கு நோக்கித் தருவிக்கப்படக் கூடிய ஒரு நிலையிருப்பதால் முடியுமான அளவுக்குத் தமது அசைவுக்கான வசதிகளை ஏற்படுத்தக் கூடிய தாக்குதலிலேயே அவர்களது கவனம் குவிக்கப்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது.

இந்த நிலைமூலம், யாழ்ப்பாண நகரில் ஒரு சிறிதளவு பகுதியையாவது புலிகள் தமது கைக்குள் போட்டுக் கொள்வார்கள் என்றால், அரசாங்கத்தின் யுத்த சாதனைகளில் பெரும்பகுதியை முறியடித்து விட்ட ஒரு நிலை தோன்றும். இந்த நிலை புதிதாக வரப்போகும் ஜனாதிபதியை - அது சந்திரிகாவேயானாலும், கூட- இறங்கி வந்து தம்முடன் பேசவைக்கக் கூடிய நிர்ப்பந்தத்தினை உருவாக்கும்.

புலிகளைப் பொறுத்தளவில், அவர்களது தலைவரது மாவீரர் தினப் பேச்சுத் தெளிவாகவே புலிகள், சந்திரிகா மீண்டும் வருவதை விரும்பவில்லை என்பதைக் காட்டியுள்ளது. அதற்கேற்ற விதத்தில் முடிந்தளவுக்குச் சந்திரிகாவின் தோல்விக்கான அளவுக்காவது அவர்கள் இராணுவ வெற்றிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முயல்கின்றனர்.

மறுபுறத்தில், அவர்கள் நேரடியாகச் சொல்லாவிட்டாலும், ரணிலின் வெற்றி மூலம் ஒரு ஆட்சி மாற்ற வாய்ப்பு ஏற்படும் என்பதால் அவர்கள் அதையே விரும்புவது போலத் தெரிகிறது. ஆட்சி மாற்றம் எப்போதும் ஒரு இடைக்கால சமாதான நிலைமையையும், பேச்சவார்த்தைக்கான சூழலையும் உருவாக்கும் என்பதால், இத் தேர்தலில் மறைமுக ஆதரவை அவருக்கு வழங்கி வருவதாக ஊகிக்க முடிகிறது. ரணில், மட்டக்களப்புக்கு பிரச்சாரம் செய்யப் போனதும், மட்டக்களப்பிலே, ரணிலின் பெரிய கட்டவுட் வைக்கப்பட்டிருப்பதுவும், கிழக்கு மாகாணப் புலிகள் மறைமுகமாக, ஐ. தே. க. ஆட்சி உருவாவதைத் தாம் விரும்புவதாகக் காட்டிக் கொள்வதும் புலிகளின் விருப்பைத் தெளிவுபடுத்தியுள்ளன. ரணில் விக்ரமசிங்ஹ வெற்றி பெற்றால் உடனடியாகப் புலிகளுடன் பேசுவேன் என்ற அறிவித்திருப்பது ஒரு முக்கியமான விடயம்.

ஆனால் அரசாங்கம், அரசியல் ரீதியான ஆதரவுப் பலத்தில் மட்டுமல்லாமல், ஜனநாயக நடைமுறைகட்கு மாறான வேறு வழிகளிலும் நம்பிக்கை வைத்திருப்பதாகத் தெரிகிறது.

எனவே, வெற்றி யார் பக்கம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாமல் இருக்கிறது.

அபிப்பிராய வாக்கெடுப்புகள், ரணிலின் பக்கத்தை உயர்த்திக் காட்டினாலும் நடைமுறை அப்படித்தான் இருக்கும் என்று சொல்வதற்கில்லை. வட மேல் மாகாணத் தேர்தல் நடைமுறை கையாளப்படுமானால், வெற்றி புலிகள் விரும்புபவருக்குக் கிடைக்காமலே கூடப் போய்விடலாம்.

அப்படியான ஒரு நிலை வந்தாலும், நிலைமையை எப்போதும் சாதகமாகக் கொண்டிருக்க இன்றைய தாக்குதல்கள் அவர்களுக்கு அவசியமானவையாக உள்ளன.

ஆனால் இவை எல்லாவற்றிற்கும் மேலாக, புலிகளின் எதிர்பார்ப்பு என்ன, வெல்லப் போவது யார் ? என்ற விடயங்களுக்கு மேலாக, வெல்லப் போகிறவர் முன்னுள்ள சவால்கள் முக்கிய அக்கறைக்குரியவை.

புத்தாயிரம் ஆண்டுக்கு நாட்டை வழி நடாத்த வேண்டிய பொறுப்புள்ள அவர் முன் முக்கியமான சவால்களாக விரிந்து கிடப்பவை மூன்று விடயங்கள்.

முதலாவதாக, இராணுவ ரீதியிலும், படைக் கல ரீதியிலும் பாரிய சக்கியைப் பெற்று நிற்கும் புலிகளுடன், அரசியல் சமரசத்திற்கான ஒரு சூழலை உருவாக்க முயல்வது. இதைச் செய்யாமல் அவரால் 21ம் நூற்றாண்டுச் சவால்களைக் கொஞ்சம் கூட நகர்த்த முடியாது.

இரண்டாவதாக, வேகமாகவும், தீவிரமாகவும் வளர்ந்து வரும் சிங்கள வீரவிதான போன்ற இனவாத சக்திகளின் கையை எப்படிக் கையாள்வது என்ற விடயம். தீவிர இனவாதமும், அதற்கு ஏற்பட்டு வரும் சமூக, இராணுவ மத்தியிலான செல்வாக்கும், இன்றைய அரசின் இருப்புக்கும், அதன் எதிர்கால நடவடிக்கைகட்கும் - உடனடி அரசியல் இலாபங்களைத் தரக் கூடுமாயினும் - சாதகமானது அல்ல. தீவிர இன வெறியுடன் கூடிய வன் முறையும், இனச் சகிப்புத் தன்மையற்ற போக்கும் அரசாங்கம் தங்கி நிற்கும் திறந்த பொருளாதார, உலக வங்கிச் செயல் திட்டத்திற்கு எப்போதும் நெருக்கடியைத் தரவல்லன. இன்னொரு புறத்தில் இனச் சிக்கலைத் தீர்ப்பதிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியன.

மூன்றாவது, பெரும்பான்மைப் பலம்மிக்க ஒரு பாராளுமன்றத்தைப் பெறுவது. இது திரும்பவும், சிறுபான்மை இனங்கள் கொண்டுள்ள நம்பிக்கையுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாக இருக்கும். சந்திரிகா வெல்லும் பட்சத்தில் இருக்கும் பாராளுமன்றத்தில் கட்சி மாறிகளைப் பயன்படுத்தும் நோக்குடன் அதை நீடிக்க முயலலாம். ஆனால், ரணில் வரும் பட்சத்தில் அதற்கான சூழல் இல்லை. புதிய பாராளுமன்றம் ஒன்றிற்கான தேர்தல் நடாத்தப்பட வேண்டும். அது திரும்பவும் ஒரு தொங்கு பாராளுமன்றமாக அமைவதற்கான வாய்ப்பே அதிகமாக இருப்பதால் அது புதிய ஜனாதிபதிக்கான முக்கிய சவாலாக அமையும்.

இந்தச் சவால்களுக்கு முகம் கொடுக்க விரும்பும் எந்த ஒரு தலைவருக்கும் உண்மையான, நேர்மையான அக்கறை நாட்டின் இனப் பிரச்சினை தொடர்பாக இருக்க வேண்டும். அதைப் பற்றிய வரலாற்று ரீதியான புரிதல் வேண்டும். சிறுபான்மை இனங்களின், மன உணர்வுகளின் தன்மை விளங்க வேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அந்தப் புரிதலை மக்களிடம் விற்கவும், அதை நோக்கி முரணற்ற விதத்தில் செயற்படவும் தேவையான துணிவும் அவசியம்.

இது, இந்தத் தலைவர்களில் யாரிடம் இருக்கிறது ? சந்திரிகாவிடமா ? அல்லது ரணிலிடமா ?

கடந்த கால வரலாறு இருவரிடமும் இது இருப்பதாகக் காட்டவில்லை. ஆனால், அவர்கள் தம்மை அப்படி மாற்றிக் கொள்ள ஒன்றும் காலம் தாழ்ந்து போய் விடவில்லை.

இதைத் தீர்மானிப்பது இவர்கள் முன்னுள்ள எல்லாவற்றையும் விட முக்கியமான சவால்.

ஆம், நான்காவது சவால் !



நன்றி - நூலகத்திட்டம்



# நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத் தண்ணீர்

அரவிந்தன்

எதிர்வரும் 21ம் திகதி நடக்கப் போகிறது ஒரு பெரிய திருவிழா. ஜனநாயகத்தின் பெயரால், மக்களின் உரிமையின் பெயரால் இந்தத் திருவிழா நடக்கப் போகிறது. நாட்டில் உள்ள வாக்காளர்கள் இந்த வாக்களிப்பு ஜனநாயகத்திலோ, வாக்களிப்பிலோ நம்பிக்கை வைத்து வாக்களிக்கிறார்களோ இல்லையோ, வாக்குப் பெட்டிகள் நிரம்பப் போகின்றன. பொலிசும், இராணுவமும் 'கடமை' காக்க ஜனநாயகம் நிலைத்து நிற்பதாக வரலாறு எழுதப்படப்போகிறது.

ஆம், இலங்கையின் புத்தாயிரம் ஆண்டுக்கான புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தல் என்கிற திருவிழா, கள்ள-வாக்குகள், ஆள்மாறாட்டங்கள், அடிதடி கொலை மிரட்டல்களுடன் நடந்தேறப் போகிறது. தேர்தல் கண்காணிப்பாளர்கள் வருவதையோ, அவர்கள் தேர்தல் நடைமுறையைக் கண்காணிப்பதையோ விரும்பாத அரசாங்கம் அதற்கான நிதியுதவியை மறுத்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. தேவைக்கதிகமான வாக்குச்சீட்டுக்கள் வாக்குச் சாவடிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தேர்தலை அரசாங்கம் தான் விரும்பிய விதத்தில் நடாத்த வசதியாக அரச இயந்திரத்தின் எல்லா அணிகளையும் அரசாங்கம் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

தேர்தல் பிரச்சார மேடைகள் வெறுமனே எதிரணியை அம்பலப்படுத்துபவையாக மட்டும் அல்லாமல் திட்டமிட்ட வன்முறையைப் பரப்புபவையாவும் அமைந்துள்ளன. தேர்தலின் போது எவ்வித அச்சமுமின்றிச் செயற்படுங்கள். அப்போது உங்களுக்கு ஏதாவது நடந்தால் அதை நான் 22ம் திகதி பார்த்துக் கொள்வேன் என்று ரணில் பேசுவதும், வன்முறையை தூண்டுபவர் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் மிரட்டுவதுமாக நடைபெறும் தேர்தல் பிரச்சாரம் 21ம் திகதி நடக்கப் போகும் திருவிழாவுக்கும், ஜனநாயகத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இருக்கப் போவதில்லை என்பதை வெளிக்காட்டுகின்றன.

இந்த நிலையில் தமிழ், முஸ்லிம் மக்களை ஜனாதிபதித் தேர்தலில் தமக்குப் பிடித்த வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு கேட்கின்றன தமிழ், முஸ்லிம், மலையகத்துத் தரகுக் கட்சிகள்.

தரகர்களுக்குத் தரகுக் கூலியில் தான் கண் இருக்குமே ஒழிய, மக்கள் மீது இருக்காது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இந்தத் தரகுக் கட்சிகள் ஆதரிக்கும் பொ. ஐ. முவும், ஐ. தே. கவும் அப்படி என்ன தான் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் என்று கூறி வெளியிட்டிருக்கின்றன?

000

பொ. ஐ. முவின் சார்பாகச் சந்திரிகா பண்டாரநாயக்க வெளியிட்ட 'யுத்தம் பற்றிய ஒரு வார்த்தை' என்ற அறிக்கை அமைச்சர் மங்கள சமரவீரவால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த அறிக்கை ஆங்கிலத்திலும், தமிழிலும் முழுமையாக வெளிவந்த போதும் லேக்ஹவுஸ், சிங்களப் பத்திரிகைகளில் முழுமையாக வெளியிடப்படவில்லை. ஒருவேளை, யுத்தம் பற்றிய அந்த ஒரு வார்த்தை சிங்களப் பத்திரிகைகட்கு முக்கியமில்லை என்று சந்திரிகா கருதினாரோ என்னவோ, அவை சிங்கள வாசகர்களுக்கு, எட்டாத ஒன்றாகவே இன்றுவரை போய் விட்டிருக்கின்றன.

"யுத்தமற்ற வளமான நாட்டை நோக்கி..." என்ற தலைப்பில் 'சந்திரிகாவின் தேர்தல் விஞ்ஞாபனம்' தினகரன் பத்திரிகையில் முழுப் பக்க அளவில் வெளியிடப்பட்டிருந்தது. டெய்லி நியூஸ் ஆங்கிலப் பத்திரிகை 'யுத்தமும், தேசிய இனப் பிரச்சினையும்' என்று தலைப்பிட்டு இதை வெளியிட்டிருந்தது. சிங்களப் பத்திரிகைகள், இதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

இந்த ஒரு பக்க அறிக்கையில், இனப் பிரச்சினை தொடர்பான அதன் நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பொ. ஐ. முவின் 1994 இலிருந்து, இன்று வரையான, இனியும் இருக்கப்போகிற நிலைப்பாடு அதுதான் என்று கூறுகிறார் சந்திரிகா.

01. இலங்கையில் ஒரு இனப் பிரச்சினை உண்டு என்பதை ஏற்றுக்கொள்வது.

02. இந்தப் பிரச்சினைக்கு, ஒரு உறுதியான அரசியல் தீர்வு அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வது.

03. எந்தவகையிலும் நாடு பிளவுபடுவதை ஏற்றுக்கொள்ளாதிருத்தல்.

04. நேர்மையான, அர்த்த புஸ்டியுள்ள விதத்தில் அதிகாரங்கள் பகிரப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளல்.

05. நிரந்தரமான, நீண்டகால அடிப்படையிலான ஒரு தீர்வுக்காக நாட்டின் பூகோள ரீதியான பொருளாதார, சமூக நிலைமைகளைக் கணக்கில் எடுத்து, ஆராய்ந்து புதிய நிர்வாக அலகுகளை ஏற்படுத்தி, நீண்ட கால அடிப்படையில் நிலைத்து நிற்கக்கூடிய தீர்வொன்றைக் கொண்டுவர வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளல்.

06. இதற்காக, விடுதலைப் புலிகள் உட்பட நிரந்தரத் தீர்வொன்று வரவேண்டும் என நேர்மையாக நினைக்கிற, சகல தரப்பினருடனும் பேச வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளல்.

இந்தத் தீர்மானங்களின் அடிப்படையில் தாம் 27 நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகச் சந்திரிகா கூறுகிறார். அவற்றில் சில :-

01.புலிகளும், ஐ. தே. கவும் சேர்ந்து, தெற்கில் இனக் கலவரத்தைத் துண்ட எடுத்த முயற்சிகளைக் கடந்த கடந்த 05 ஆண்டு காலமாக முறியடித்தது.

02.சகல சிறுபான்மை இனங்களுக்கும், மதங்களுக்கும், சொந்தமான மக்களின் உரிமை அனைத்தையும் உறுதிப்படுத்தியமை.

03.புலிச் சந்தேக நபர்கள், கைது செய்து, காணாமல் போகச் செய்யும் ஐ. தே.கவின் வேலைத் திட்டத்தை நிறுத்தியமை.

04. பிரபாகரனுடன் 43 கடிதங்களைப் பரிமாறியமை.

05.சமாதானத்துக்காக, யுத்தத்தைச் சரியான வழியில் தொடர்ந்தமை.

06.புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த 80 சத வீதமான பிரதேசங்களை மீட்டெடுத்தமை.

07.புலிகளுக்குச் சார்பாகவும், அரசாங்கத்திற்கு எதிராகவும் இருந்த உலக அபிப்பிராயத்தை மாற்றியமை.

08.இனப் பிரச்சினைக்குத் தீர்வாக, அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கிற, அரசியல் தீர்வுத் திட்டத்தை உள்ளடக்கிய, புதிய அரசியல் யாப்புத் திட்டத்தை மக்கள் முன்வைத்தமை.

09.அந்தத் தீர்வுத் திட்டம் பற்றி வட கிழக்கு மக்களையும், பிரநிதித்துவப்படுத்துகிற அரசியல் கட்சிகளோடும், குழுக்களோடும் ஒரு ஒருமைப்பாட்டிற்கு வந்ததோடு, அவர்களோடு தொடர்ச்சியாக கலந்துரையாடியமை.

10.அந்தத் திட்டம் தொடர்பாக புலிகளுடன் கருத்துப் பரிமாற்றம் செய்தமை.

11.வடக்கு யுத்தத்தையும், இனப் பிரச்சினையையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்காக ஐ. தே. கவின் தலைமையில், பாராளுமன்ற எதிர்க் கட்சிகளின் ஆதரவைப் பெறத் தொடர்ந்து முயன்றமை.

12.விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களில், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக உள்ளூராட்சித் தேர்தலை நடாத்தியமை.



முழுக்க இந்த விஞ்ஞாபனம், சிறுபான்மை இன மக்கள், குறிப்பாகத் தமிழ் மக்களை நோக்கியே எழுதப்பட்டுள்ளது. சிங்கள மக்கள், நாட்டின் பிற சமூக சக்திகள், அவர்களின் தேவைகள் என்பன குறித்து இந்த விஞ்ஞாபனம் எதுவும் பேசவில்லை. இதனால் தானோ என்னவோ, தொடர்ந்து இந்த அறிக்கை சிங்கள மொழியில் வெளியிடப்படவில்லை.

ஐ. தே. கவின் சார்பில் வெளியிடப்பட்ட "மக்களுடன் எனது உடன்பாடு" என்ற 08 பக்க அளவிலான பிரசுரம், ரணிலின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

அவரது அறிக்கையின் பிரதான அம்சங்கள், "இளைஞர்களுக்கு நம்பிக்கையினை அளித்தல்", ஓர் கற்கும் சமுதாயத்தை உருவாக்கும் சுதந்திரமான தொடர்பூடகச் சூழலை உருவாக்குதல், போரினை முடிவுக்குக் கொண்டு வருதல், படையணியினைச் சீரமைத்தல். குறிப்பாகத் தேசத்தில் பல்லினத் தன்மையைப் பிரதிபலிக்கும் விதத்தில் முப்படைகளை உருவாக்குவது, பௌத்த மதம் உயர் ஸ்தானத்தில் இருக்கும் அதே சமயத்தில், ஏனைய மதங்களுக்குரிய உரிமைகளுக்கு உத்தரவாதம் தரல், குற்றச்செயல்களைத் தடுத்தல், நல்லொழுக்க நெறிகளைப் பாதுகாத்தல், வேலை வாய்ப்பின்மையின் முதுகெலும்பைத் தகர்த்தல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், போக்குவரத்தை நவீனமயப்படுத்தல், சுய நிதியத்தை அதிகரித்தல், சுற்றாடலைப் பாதுகாத்தல், விளையாட்டில் உன்னத நிலையைப் பெற ஊக்குவித்தல், கலை கலாசாரம் மீதான அரசியல் தலையீட்டை ஒழித்தல், பெண்களுக்கு எதிரான பாரபட்ச நிலையைத் தடுத்தல் போன்ற தலைப்புகளில் 'நாம் இவற்றைச் செய்வோம்' என்று ரணில் கூறுவதாக இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

சந்திரிகாவின் அறிக்கை போல் எதிராணிக் கட்சி மீதான விமர்சனமாக அல்லாமல், 'நான் விரும்பும் இலங்கை' என்பதாக அமைந்துள்ள இந்த அறிக்கை ரணில், தான் என்ன செய்ய விரும்புவதாகக் கூறுவதாக உள்ளது. சந்திரிகாவின் அறிக்கை அல்லது விஞ்ஞாபனம் முழுக்க, முழுக்க யுத்தம் பற்றியே பேசுகிறது என்றால், ரணிலின் அறிக்கை அது பற்றி மேம்போக்காகச் சொல்வதுடன் அமைந்து விடுகிறது. புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவேன் எனக் கூறியிருப்பது ஒரு முக்கியமான விடயமாக இருப்பினும், மாவீரர் தின உரையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் பிரபாகரன் விதித்துள்ள நிபந்தனைகள் குறித்து அது எதுவும் கூறவில்லை.

000

புதிய ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ள இருவரில், எவருக்கு வாக்களிப்பது என்பதைத் தீர்மானிக்கும் முகமாக மக்கள் முன் வைக்கப்பட்ட, இவ்விரு விஞ்ஞாபனங்களும், இன்றைய சூழலின் யதார்த்தத்தையும், மக்களின் தேவைகளையும் எந்தளவுக்குப் புரிந்து வைத்திருக்கின்றன என்பது ஒரு முக்கியமான கேள்வி. சந்திரிகாவின் அறிக்கை யுத்தம் பற்றியும், தனது கடந்த காலச் சாதனை பற்றியும் பேசிய போதும், அது சாதனை என்று குறிப்பிட்டவற்றில், நாம் மேலே பட்டியலிட்ட எந்த விடயங்களையும் அது முழுமையாகச் செய்யவில்லை என்பது வெளிப்படை. குறிப்பாகச் 'சகல சிறுபான்மை இனங்களுக்கும், மதங்களுக்கும் சொந்தமான மக்களின் உரிமை அனைத்தையும் உறுதிப்படுத்தியதாக' அது கூறிய போதும், உண்மையில் மதச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஆட்சியில் போலவே தொடர்ந்து தான் இருக்கின்றன. சிவராத்திரி, ஹஜ்ஜுப் பெருநாள் ஆகிய விடுமுறைகளை இரத்துச் செய்ததும் இவற்றுக்கு ஒரு சின்ன உதாரணம். ஏன் ? இப்போது நடக்கிற ஜனாதிபதித் தேர்தலை, நோன்புக் காலத்தில் வைப்பதைத் தவிர்க்கும்படி முஸ்லீம் மக்கள் தரப்பில் இருந்து எழுந்த கோரிக்கை கூடக் கணக்கில் எடுக்கப்படவில்லை.

புலிச் சந்தேக நபர்கள் எனக் கைது செய்து காணாமல் போகச் செய்யும் ஐ. தே. க. வேலைத் திட்டத்தை நிறுத்தியதாகச் சந்திரிகா சொல்கிறார். ஆனால், காணாமல் போதல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. சந்திரிகா அரசாங்க ஆட்சிக் காலத்தில், காணாமல் போனவர்களின் சடலங்கள் செம்மணியில் தோண்டி எடுக்கப்பட்டது யாருக்கும் தெரியாததல்ல. யாழ்ப்பாணக் காணாமல் போனோர் சங்கத்தினர், காணாமல் போன பல நூறு பேரின் கதைகளைக் கதை கதையாகச் சொல்லுவார்கள்.

சமாதானத்துக்காக, யுத்தத்தைச் சரியான வழியில் தொடர்வதாக அவர் கூறுகிற போதும் யுத்தம் சமாதானச் சூழ்நிலையை மேலும், மேலும் தள்ளியே வைத்துள்ளது. இன்று வரை தொடரும் யுத்தம், வடக்குக் கிழக்கு மக்களை மேலும், மேலும் அநாதைகளாகவும், அகதிகளாகவும் ஆக்கிக் கொண்டிருக்கிறதே ஒழிய சமாதானத்துக்கான சமிக்ஞையைக் கூடக் காட்டவில்லை.

அரசியல் தீர்வுத் திட்டப் பொதி தொடர்பாகப் புலிகளுடன் கலந்துரையாடியதாகக் கூறுவது, உண்மைக்குப் புறம்பான தகவல். சந்திரிகா தானே நேரடியாகத் தாம் இந்தப் பொதியைப் புலிகளுக்கு அனுப்பப் போவதில்லை என்று பல முறை தெரிவித்திருக்கிறார்.

அவரது சமாதானத் திட்டம் அரசியல் தீர்வுத் திட்டப் பொதி சம்பந்தப்பட்டதாக இருப்பதாலும், அதைச் சட்டமாக்குவதே அவருடைய செயற்பாடாக இருப்பதாகக் கூறுவதானால், அது எந்தப் பயனையாவது தருமா ? என்பது சந்தேகமே. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடனும், குழுக்களுடனும் கலந்துரையாடி, அவர்களது ஒருமைப்பாட்டிற்கு வந்ததாக அவர் கூறினாலும் அப்படி ஒருமைப்பாட்டுக்கு வந்ததாக வரதராஜப்பெருமாளைத் தவிர யாரும் அறிவிக்கவில்லை.

ஆக, சந்திரிகா முன் வைத்திருக்கிற 'யுத்தமற்ற வளமான நாட்டை' அவர் கட்டி எழுப்புவார் என்று நம்பிக்கை வைக்கக் கூடியதாக அவரது விஞ்ஞாபனம் எதையும் சொன்னதாகத் தெரியவில்லை.

'மக்களுடனான எனது உடன்படிக்கையில் ரணில் பேசுகின்ற விடயங்கள் அதிகம். ஆயினும், நாட்டின் பிரதான பிரச்சினையாகவும், நாட்டின் அனைத்து வளங்களையும் அநியாயமாக வீணடிக்கிற, பிரச்சினையாகவும் உள்ள பிரச்சினையாக அவர் இனப் பிரச்சினையை இனங் கண்டதாகத் தெரியவில்லை. புலிகளுடன் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிப்பது, போரின் உக்கிரத்தைப் படிப்படியாகக் குறைப்பது, வட கிழக்கில் ஒரு இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது என்றும் "வட கிழக்கில் உள்ள சகல மக்களுக்கும், இன வேறுபாடின்றி நியாயமான முறையில் இப் பிரச்சினையை, நான் தீர்ப்பேன் என உறுதி கூறுகிறேன்." என்றும் அவர் கூறினாலும், அந்த விடயம் அவ்வளவு தெளிவாக இல்லை. புலிகளுடன் பேசுவதும், இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது போன்றவை நல்ல விடயங்கள் தான், ஆயினும் 'மக்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதும், நடைமுறைப்படுத்தக் கூடியதுமான தீர்வினை எட்ட முதல், அரசியல் யாப்பில் 'மாற்றத்தைக் கொண்டு வரமாட்டேன்' என்று கூறுவது சந்தேகமூட்டுவதாக உள்ளது. மக்கள் அனைவரதும் ஒப்புதலைப் பெற அவர் என்ன நடவடிக்கை எடுக்க உள்ளார் என்பது பற்றி அவர் எதுவும் பேசவில்லை. சிங்கள இனவாதம், வீரவிதான போன்ற அமைப்புக்களின் வளர்ச்சி, அவை இன வெறியைத் துாண்டி, இலங்கையைச் சிங்கள இனத்திற்கு மட்டுமேயான நாடாக

மாற்றத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருதல் குறித்த சிறுபான்மை மக்களது அச்சம் தொடர்பான தெளிவு அவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அல்லது அவை பற்றிப் பேசுவதை அவர் வேண்டுமென்றே தவிர்த்திருக்க வேண்டும்.

—19

நன்றி - நூலகத்திட்டம்



# "புலிகள் உண்ணி யுத்தத்தையே நடாத்துகிறார்கள்"

## -எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க

**21ம் நூற்றாண்டை நோக்கி இந்நாட்டை அழைத்துச் செல்வதாக கூறும் நீங்கள், தற்போது பல வாக்குறுதிகளை வழங்கி வருகின்றீர்கள். கணனி தொழில்நுட்ப வளர்ச்சி உள்ளிட்ட இந்த நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த அதிக நிதிவசதிகள் தேவைப் படுகின்றன. இதற்கான நிதி வசதிகளை நீங்கள் எங்ஙனம் பெறுவீர்கள்?**

நாட்டை அபிவிருத்தி செய்யக் கட்டாயம் நிதி தேவைப்படுகின்றது. தென்கொரியா எம்மை விட வறிய நாடு. ஜப்பான் இரண்டாம் உலக மகா யுத்தத்தினால் அழிந்து போன நாடு. எனினும் அபிவிருத்தி பாதையில் செல்லும்போது நிதியினை அவற்றால் சேகரித்துக் கொள்ள முடிந்தது.

எந்தவித செலவுமின்றி செயற்படுத்தக் கூடிய துறைகள் சில எனது திட்டத்தில் அடங்கியுள்ளன. சொந்த காணியுறுதி வழங்கல், வீடுகளை வழங்குதல், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி தொடர்பூடக சுதந்திரத்தை வழங்குதல் போன்றவாறான செலவுகள் அதிகமற்ற திட்டங்களை முதன்முதலில் செயற்படுத்த இயலும். அத்துடன், செலவுகள் கூடிய சில திட்டங்களைத் தெரிவு செய்து வளர்ச்சி பெறச் செய்யலாம். விவசாயத்துறைக்கு உதவுதல் இதில் பிரதானமானது.

இன்று நம் நாட்டு பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தப் பொருளாதாரத்தை வீழ்ச்சியிலிருந்து அதனை வளர்ச்சிக்குக் கொண்டு செல்வதனால் வருமானங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருகையினால் வருமானம் கிடைக்கும். அதேபோல் யுத்தத்தை நிறுத்தி, அந்தச் செலவை கட்டம் கட்டமாகக் குறைத்துவிட்டால், அதிக பணத்தைச் சேமிக்கலாம். இவ்வாறு நாடு அபிவிருத்தி அடையும் போது, அதற்கான நிதியைச் சேகரித்துக் கொள்ளுதலும், அரசின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளுதலும் முக்கியமான விடயங்களாகும். இந்த அனைத்து விடயங்களையும் நன்கு சிந்தித்துத் தான் எனது திட்டங்களை முன்வைத்துள்ளேன்.

**நீங்கள் வாக்குறுதி அரசியலை மேற்கொள்ள மாட்டீர்கள் என கூறியிருந்தீர்கள். ஆனால் தற்போது பல வாக்குறுதிகளை முன்வைத்துள்ளீர்கள். அதாவது டீசல் வரியை நீக்குதல், நிவாரணங்களை வழங்குதல் போன்ற வாக்குறுதிகளை வழங்கியுள்ளீர்களே?**

இவை தொடர்ச்சியான நீண்ட வாக்குறுதிகள் அல்ல முழுமையான திட்டங்கள். உதாரணமாக,



இன்று எமது விவசாயத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. அந்தத் துறையை மீட்டெடுக்க வேண்டியுள்ளது. எந்தவொரு நாட்டிலும் நீண்ட காலத்திற்கு விவசாயத்துறைக்கு ஆதரவளிப்பது என்பது சாதாரணமானதொரு நடைமுறையாகும். அதற்கென நிவாரண முறைகளை ஆரம்பிப்பதும் விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்ய தேசியக் கொள்கை ஒன்றை வகுத்தலும் அவசியமாகும்.

**நீங்கள் திறந்த பொருளாதார கொள்கையை முன்வைத்துள்ளீர்கள். வெளிநாட்டு சந்தைகளை கைப்பற்றுவது பற்றி கதைக்கின்றீர்கள். இதற்கிடையில், கிழங்கு, வெங்காயம் இறக்குமதியை நிறுத்துவது பற்றியும் கதைக்கின்றீர்கள். இவை திறந்த பொருளாதார கொள்கைக்கு முரணானதல்லவா?**

திறந்த பொருளாதார முறை நிலவும் அபிவிருத்தியடைந்த ஐரோப்பிய நாடுகளிலும் கூட விவசாயத்துறையைப் பாதுகாக்க வெவ்வேறுபட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இன்று எமது விவசாயத்துறை பாதுகாக்கக் கூடிய நிலைமையில் உள்ளது. அதனை எழுச்சிபெறச் செய்ய நடவடிக்கை எடுக்காவிட்டால் முழு நாட்டினதும் பொருளாதாரமுமே வீழ்ச்சியடைந்துவிடும். கிராமத்தில், விவசாயிகளின் கையில், அதாவது கிராமிய நுகர்வோரின் கையில் பணம் இல்லாததால் உற்பத்திகளின் சந்தை வீழ்ச்சியடைந்துள்ளது. தொழிற்துறை வீழ்ச்சியடைய இதுவும் ஒரு காரணமாகும். குறிப்பாக, வரையறையின்றிய உணவுப் பொருள் இறக்குமதியினால் விவசாயப் பொருளாதாரத்திற்கு பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது.

**உணவுப் பொருட்களை வெளிநாட்டிலிருந்து கொண்டுவரும் பழக்கத்தை ஐ.தே.க அரசாங்கம் தானே முதன்முதலில் கைக்கொண்டது?**

இல்லை, அப்படியில்லை. நான் இந்தச் சந்தர்ப்பத்தில், உணவுப் பொருட்கள் இறக்குமதி தொடர்பாக தேசியக் கொள்கை ஒன்றை வகுக்கவே முயற்சிக்கின்றேன். விவசாய வருமானங்களை அதிகரிப்பதே எமது பிரதான நோக்கமாகும். அக்கொள்கை 3 வருடங்கள் வரை செயற்படும். அப்பொழுது இறக்குமதி செய்யப்படுவது ஏன் என அனைவருக்கும் விளங்கும். இதன்படி நாட்டில் இறக்குமதிக் கொள்கையில் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவோம். பின்னர் 3 வருடங்களில் அக்கொள்கையை கலைத்துவிட வேண்டும். இந்நடவடிக்கை எமது விவசாயிகளுக்கு சேலைன் வழங்குவது போன்றதாகும்.

ஒரு தசாப்தத்திற்குள் எமது விவசாய உற்பத்திகளை உலக சந்தைக்கு அனுப்புதலை நோக்காகக் கொண்டே நாம் இந்த நடவடிக்கைகள் யாவற்றையும் செயற்படுத்தல்வேண்டும். இறுதியில் விவசாயத்துறையில் திறந்த வர்த்தகக் கொள்கைக்கே நாம் வரவேண்டியுள்ளது.

**உங்களது செயற்திட்டங்களுக்கு உலக வங்கியினதும், மற்றும் சர்வதேச நிதி நிறுவனத்தினதும் ஆதரவினைப் பெற வேண்டியுள்ளது. இதனால் அவர்களது விருப்பு வெறுப்பின் பேரிலேயே திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிவரும். இவ்வாறான நிவாரண கொள்கைகளை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?**

உண்மையில், திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்படுத்தவே நான் முயற்சிக்கின்றேன். இதற்கென உயர்ந்த அபிவிருத்திக் குறிக்கோளைக் கொண்டே திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு நடைமுறைப்படுத்தும்போது உலக வங்கியோ, சர்வதேச நிதி நிறுவனமோ இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது. முன்னரும் நான் இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். எனது தொழில் கொள்கையை சமர்ப்பித்த வேளை உலக வங்கி அதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறியது. நான் உலக வங்கி ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனத் தெளிவுபடுத்தினேன். இதனால் இது எனக்கு பாரிய பிரச்சினையாகத் தோன்றவில்லை.

**உலக வர்த்தக அமைப்பு எதிர்வரும் ஆண்டுகளில் உலகம் முழுவதும் வர்த்தகங்களை விடுவிக்கப் போவதாக யோசனை தெரிவித்துள்ளது. இவ்வாறான பின்னணியில் உங்களது திட்டங்களை செயற்படுத்த முடியுமா?**

நாம் விவசாயத்துறை பற்றி மட்டுமே குறிப்பிட்டோம். உலகத்தில் எங்கிலும் விவசாயத்துறை பற்றியதான நெருக்கடிகள் நிலவுகின்றன. இன்று சியட்டல் நகரத்தில் உலக வர்த்த அமைப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது. உலகவங்கியின் இந்த தற்காலிக நடவடிக்கையானது நோயாளிக்கு சேலைன் ஏற்றுவது போன்றதாகும். நோயாளி பலம் பெற்றால் தான் தன் சுய பயணத்தை ஆரம்பிக்கலாம். எனது குறிக்கோள் 10 வருடங்களுக்குள் உலக சந்தையை கைப்பற்றும் விவசாயத்துறையை ஏற்படுத்துவதே. இதற்கு இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் விவசாயத்துறைக்கு அரசு நிவாரணங்களை வழங்க வேண்டியேற்படும். இது அதனைவிட மிகவும் கடினமான காரியம்.

**ஐ.தே.க அரசாங்கம் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பியது. தொழிலாளர்கள் மீதான சட்டங்கள் கடினமாக்கப்பட்டன. தொழிலாளர் பட்டயம் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. இவ்வாறான நடைமுறைகளைத் தான் நீங்களும் பினபற்றப் போகின்றீர்களா?**

ஐ.தே.க ஆட்சிக் காலத்தையும், பொ.ஐ.மு காலத்தையும் ஒப்பிட நான் விரும்பவில்லை. தொழிலாளர் சட்டங்கள் புதிதாக தயாரிக்கப்பட வேண்டும் என்பதை நாமும் ஏற்றுக் கொள்கின்றோம். தனியே சட்டங்களை மட்டும் பார்க்காதீர்கள். 17 வருட காலத்தில் பெரும் ஊழியர் படையை உருவாக்கவும், அவர்களது சம்பளங்களை அதிகரிக்கவும் எம்மால் முடிந்தது. குறைந்த வருமானம் பெறும் பொருளாதாரத்திலிருந்து அதிக வருமானம் பெறும் பொருளாதாரத்திற்கு செல்ல நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

**முதலாளிகளின் சார்பில் முன்வைக்கும் கோரிக்கை தான், ஊழியர்களை சேர்த்துக் கொள்வதைப் போன்று, அவர்களை விலக்கவும் சுதந்திரம் வேண்டும் என்பதாகும். அந்தச் சந்தர்ப்பத்தை முதலாளிகளுக்கு நீங்கள் வழங்குவீர்களா?**

தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்க ஒரு காரணம் இருக்க வேண்டும். சேவை நிபந்தனை மீறலோ அல்லது வேறு எந்தவொரு காரணமோ இருக்குமாயின் ஒரு சில விசேட சட்டதிட்டங்களின்படி ஊழியர்களை நீக்க வாய்ப்பு இருக்கலாம். எனினும், எந்தவித காரணமுமின்றி ஊழியர்களை நீக்க உலகத்தில் எந்தவொரு நாடும் சந்தர்ப்பம் வழங்கியிருக்கும் என நான் நினைக்கவில்லை.

இந்தப் பிரச்சினை இந்தியா, பங்களாதேஷ், போன்ற நாடுகள் குறைந்த வருமானம் கொண்ட பொருளாதாரத்துடன் உலக சந்தையுடன் போட்டியிடும் போதே ஏற்படுகின்றது. இவ்வாறான போட்டிக்கு செல்லாது அதிக வருமானம் தரும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதையே நான் யோசனையாக முன்வைக்கிறேன். இதற்காகப் புதிதாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

**போக்குவரத்து துறைக்கான அரசின் முதலீட்டினை அதிகரிக்க வேண்டுமென யோசனை தெரிவித்துள்ளீர்கள். இ.போ.ச போன்ற முறையை மீண்டும் ஏற்படுத்தலையா சூசகமாகத் தெரிவிக்கின்றீர்கள்?**

நான் புதிதாக சிந்திக்க விளைகிறேன். போக்குவரத்து பற்றி புதிதாக சிந்தித்து செயற்பட வேண்டும். இங்கு நீண்டகால குறுங்கால திட்டங்கள் காணப்படுகின்றன. தண்டவாளப் பாதைகளை அபிவிருத்தி செய்ய 5,6 வருடங்களாகின்றன. அரசாங்கமொன்றின் ஆயுள்காலத்தின் அதிக பகுதிகள் இதற்காகச் செலவாகின்றன. அதுவரை மக்களுக்கு மாற்று நிவாரணம் இருக்க வேண்டும். இதற்கு குறுங்கால நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். போக்குவரத்துக்கான நிறுவனங்கள் இன்று திறமாக செயற்படுவதில்லை. எனது முதல் நடவடிக்கை, இந்த நிறுவனங்களைத் தெரிவு செய்து சிறப்பான தொழிற்பாட்டு நிலைக்குக் கொண்டு வருதலாகும். அத்துடன் ஒழுங்கமைப்பு ஒன்றும் தேவை.

தண்டவாள மற்றும் பெருந்தெரு போக்குவரத்துக்கிடையில், பயணிகள் மற்றும் பொருள் போக்குவரத்துக்குமிடையிலான சிறந்த ஒருங்கிணைப்பான வேலைத்திட்டம் ஏற்படுத்தப்படல் வேண்டும். இதற்கென புதிதாக சிந்திக்க வேண்டியுள்ளது.

அடுத்ததாக அதிகாரப்பரவலாக்கலும், அதிகாரப்பகிர்வுமாகும். இதனால் பிரதானமான தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மாவட்டங்களுக்கு வழங்கப்படுவதனால் பல செயற்பாடுகளை அப்பிரதேசங்களிலேயே பூர்த்தி செய்ய முடியும். மாத்தறை, பொல்கஹாவலையிலிருந்து கொழும்பு வரும் அரச ஊழியர் எண்ணிக்கையை இதனால் குறைக்க இயலும். அடுத்ததாக அப்பிரதேசங்களில் தொழில்களை அபிவிருத்தி செய்வதனால் நீண்ட வீதிகளில் போக்குவரத்து செய்து காலத்தை விரயமாக்குதலை குறைத்து விடலாம்.

**வடக்கில் இடம்பெறும் யுத்தம் பற்றிப் பேசுவோம். தீர்வு ஒன்றுக்கு வரமுடியும் என நீங்கள் கருதுகின்றீர்களா?**

முதலில் யுத்தத்தின் நிலைமையைப் பாருங்கள். இப்பொழுது எவராலுமே வெற்றி கொள்ள முடியாத நிலையிலேயே அது உள்ளது. பல வருடங்களாக நாம் பல முகாம்களை இழந்து விட்டோம். முல்லைதீவு, கிளிநொச்சி, பூநகரி, மன்னார், வவுனியா வீதி, ஓமந்தையூடாக ஒட்டுசுட்டான், கிழக்குப்பகுதி என்பவற்றை நாம் இழந்து விட்டோம். மரபுரீதியான இராணுவமாக புலிகள் பலமடைந்திருந்தாலும் வவுனியா மற்றும் பிற பிரதேசங்களை கைப்பற்றக் கூடிய பலம் அவர்களுக்கு இல்லை. இராணுவத்தினால் புலிகளை அழிக்கவோ, புலிகளினால் இராணுவத்தை அழிக்கவோ ஒரு போதும் முடியாது. இங்கிருந்து பேச்சுவார்த்தை மேசைக்கு செல்லல் மட்டுமே தற்போது எஞ்சியுள்ளது. புலிகளின் சில நடவடிக்கைகள் பேச்சுவார்த்தையை நோக்கிச் செல்லும் வழியை பலப்படுத்துவதாகவே எடுக்கப்படுகின்றன எனத் தோன்றுகின்றது.

**பேச்சுவார்த்தையை யுத்தபலத்தை அதிகரிக்க எடுத்துக் கொள்ளும் ஒரு இடைவெளியாக பயன்படுத்தும் நிலை ஏற்படலாம் அல்லவா?**

இன்று உள்ள மனித வளம் தொடர்பான பிரச்சினை இரு சாரருகுமே காணப்படுகின்றது. புலிகளுக்கு உள்ள மனித வளம் பற்றிய பிரச்சினைத் தீர்க்கப்படக் கூடியதல்ல. வடக்கு - கிழக்கை நிர்வகிக்க அதிக மனித வளமும், பலமும் தேவை. இந்தப் பலத்தை 7 மாகாணங்களினால் பெறப்பட முடியாத போது இளைஞர்களில் அரைவாசிப் பேர் தப்பியோடி விட்ட வடக்கு - கிழக்கில் இருந்து புலிகள் அந்தப் பலத்தை எப்படிப் பெற்றுக் கொள்வார்கள்? அந்த மாகாணங்களில் ஒரு பகுதியினராக சிங்கள, முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள். அப்படியாயின் பலத்தை அவர்களால் எப்படி பெற்றுக் கொள்ள முடியும்?

— 19

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகம்:
# இந்திய வம்சாவழி பேரணியின் வீழ்ச்சியும், முற்போக்கு கூட்டணியின் தேவையும்.

இன்று மலையக அரசியல் களத்தில் இடம்பெறும் மாற்றங்களுக்கு முன்னாள் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் மறைவே அடிப்படைக் காரணம் எனத் தவறான காரணங்கள் பரப்பப்பட்டு வருகின்றன. இதற்கு சில ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் துணை போவது ஒன்றில், அது அவர்களின் அறியாமை அல்லது சுயநலம் என்றே கருதவேண்டியுள்ளது. இந்நிலையிலேயே மலையகத்தின் அண்மைகால அரசியல் நிகழ்வுகள்



ஓ.ஏ. ராமையா

மற்றும் எதிர்கால அரசியல் தேவை என்பன பற்றியதாக இப்பத்தி அமைகிறது. (தொண்டமான் மற்றும் அவரது அரசியல், தொழிற்சங்க செயற்பாடுகள் பற்றிய பக்கச்சார்பற்ற விமர்சன ரீதியான கண்ணோட்டத்தை பிறிதொரு சரிநிகர் பத்தியில் அவதானிப்போம்.)

மலையகத்தில் இடம்பெற்ற மிக அண்மைய அரசியல் கள மாற்றமானது இந்திய வம்சாவளி மக்கள் பேரணி (இனிமேல் இக்கட்டுரையில் பேரணி எனக் கொள்ளப்படும்)யின் வீழ்ச்சி ஆகும். ஏலவே சரிநிகர் பத்தி ஒன்றில் குறிப்பிட்டது போல் இது ஒரு தேர்தல் கால வாக்குகளைச் சுரண்டும் பேரணியாகவே இருந்துள்ளது. இப்பேரணியின் வீழ்ச்சியானது பல வரலாற்றுத் தேவைகளை நமக்கு உணர்த்திச் சென்றுள்ளது. எனவே அந்த வரலாற்றுத் தேவைகள் பற்றி ஆராய முன் இப்பேரணியின் தோற்றம், அதன் செயற்பாடுகள் பற்றி நோக்குவது அவசியமாகும்.

### பேரணியின் தோற்றம்

இப்பேரணியானது 1998 இறுதிக் காலப்பகுதியில் உருவாக்கப்பட்டாலும், அதன் உருவாக்கத்தில் பல காரணிகள் பங்களிப்பு செலுத்தியுள்ளன. குறிப்பாக மலையக மக்களின் ஒற்றுமையை வெளிக்காட்டுவதற்கும் அதன் மூலம் அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்குமே இப்பேரணி தோற்றுவிக்கப்பட்டது என்று கருதினால் அது அரசியல் அறியாமையே! அப்படியாயின் இப்பேரணியை தோற்றுவிப்பதற்கான அவசியம் ஏன் ஏற்பட்டது?

குறிப்பாக மலையகத்திலுள்ள அனைத்து அமைப்புகளும் அவற்றின் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மூலமாக முற்போக்கு தோற்றமளித்தாலும் செயற்பாட்டு ரீதியில் அனைத்துமே பிற்போக்கானவையே! எனவே பிற்போக்கு அரசியல் சக்திகளின் ஒரு கூட்டிணைவே இப்பேரணி ஆகும். இப்பேரணி அவ்சர அவசரமாக உருவாக்கப்பட்ட நிலைமைகளை அவதானிக்கும் பொழுது பல விசித்திரமான பின்னணிகள் புலப்படும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசைப் பொறுத்த வரையில் அவ்வமைப்பு பெரும்பாலும் மக்களால் நிராகரிக்கப்பட்டுக் கொண்டு வரும் ஒரு அமைப்பாகும். இந்நிலையில் இ.தொ.காவிற்கு நீண்ட கால நோக்கில் அதன் வாழ்வியல் பிரச்சினை எழுவது தவிர்க்க முடியாதது. அதேவேளை சிறிய அமைப்புக்களின் குரலை அடக்க வேண்டிய தேவையும் இ.தொ.காவிற்கு இருந்தது. மேலும் இ.தொ.காவிற்கு முன்னாள் செயலாளர் எம்.எஸ்.செல்லச்சாமியுடன் நீதிமன்றத்தின் முன் உள்ள சட்டப் பிரச்சினை காரணமாக சட்டரீதியாக ஏற்படும் சிக்கல்களை தவிர்க்கும் முகமாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக சகல அமைப்புக்களுக்கும் மக்களின் அடிப்படை உரிமைகள், தேவைகளை விடவும் தங்களின் சொந்த விருப்பு, வெறுப்புகளும், மக்கள் மத்தியில் தங்கள் இருப்பும் முக்கியமானதால் பேரணியின் தேவையும் தோற்றமும் தவிர்க்க முடியாததாகியது. கூட்டுக் கமிட்டி போன்றவை முன்னர் தோட்டங்கள் தனியார் மயமாதல் போன்றவற்றை எதிர்த்தது கூட தங்கள் பிழைப்புக்காகவே என்பது இப்பொழுது புலனாகிறது.

### பேரணி சாதித்தவையும்; சாதிக்கத் தவறியவையும்

இந்தக் குறுகிய ஒரு வருட காலத்தில் சாதித்தவை என்று ஒன்றும் கூறமுடியாவிட்டாலும் மேலோட்டமாக பட்டியலிட்டால் சாதனைகளை விட வேதனைகளே மிஞ்சும்.

**சாதனைகள்**

* பேரினவாத அரசின் நலன் காத்தல்
* இந்திய நலனைப் பாதுகாத்தல்
* மக்களின் வாக்குப்பலத்தை விற்று தங்கள் சுய/சுக நலன்களை பெற்றுக் கொண்டமை.
* அவசர காலச் சட்டத்தை முழுமையாக ஆதரித்ததன் மூலம் சொந்த தமிழ் மக்களின் அழித்தொழிப்புக்கு துணை போனமை.

**சாதிக்கத் தவறியவை/ பேரணியின் பலவீனம்**

* மலையக மக்களின் அரசியல் நிலையை உயர்த்தப்பாடுபடாமை.
* தோட்டக் கட்டமைப்பில் கம்பனிகளால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரத்துவ மாற்றங்களை எதிர்த்துப் போராடாமை.
* மக்களின் எழுச்சிகர வேலை நிறுத்தப் போராட்டங்களை சொந்த நலன் கருதி காட்டி கொடுத்தமை.
* சொந்த மக்கள் பேரினவாத கும்பல்களினால் மோசமாக தாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட வேளைகளில் சொந்த நலன் கருதி பேரினவாதிகளினதும், பேரினவாத அரசாங்கத்தினதும் நலனைப் பாதுகாத்து சொந்த மக்களைக் கைவிட்டமை. உதாரணமாக இரத்தினபுரி, பசறை குறூப் சம்பவங்களை குறிப்பிடலாம்.
* சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மற்றும் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வைப் பெற மந்தமான போக்கைக் கடைப்பிடித்ததுடன் பலவீனமாக நடந்து கொண்டு தங்கள் போலித்தனத்தை வெளிக்காட்டியமை.
* மலையகத்தில் அபிவிருத்தி என்ற பெயரில் தொடர்ந்து இடம்பெறும் திட்டமிட்ட குடியேற்றங்களைத் தடுப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுக்காமை.
* தோட்டத் தொழிலாளர்களின் காணி, வீடு என்பன சொந்தமாக்கப்படுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை.
* இலங்கை குடியுரிமையற்று மலையகத்தில் வாழும் இந்தியக் கடவுச் சீட்டு பெற்ற 84,000 குடும்பங்களின் அங்கத்தவர்களை இலங்கைப் கான நடவடிக்கைகளை மேற் கொள்ளாமை.
* அதேபோன்று பதிவுப் பிரஜைகளாக உள்ள மலையக மக்களின் குறிப்பிட்டளவினரை வம்சாவளிப் பிரஜைகளாக ஏற்க வைக்கும் நடவடிக்கைகளில் இறங்காமை.
* கல்வி, சுகாதார நிலைமைகளை திருப்திகரமாக மாற்றுவதற்கான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தாமை.
* தோட்டங்கள் தனியார் கம்பனிகளின் நிருவாகத்திற்கு மாறிய பின் வேலையிழந்த 180,000 தொழிலாளர் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை.
* ஆயிரம் கிராம உத்தியோகஸ்தர்கள் நியமிக்க நடவடிக்கை தர்கள் நியமிக்க நட்வடிக்கை எடுப்பதாக கூறி 101 நியமனங்கள் கிடைத்தவுடன் திருப்திப்பட்டவர்கள், அவர்களுக்கு மூன்று மாதம் தனிச் சிங்களத்திலேயே பயிற்சிகள் நடைபெற்ற போது அது தெரியாதவர்கள் போலிருந்தமை.
* சட்ட, நீதி, நிருவாகம் ஆகிய துறைகளில் தமிழ் மொழி அமுலாக்கல் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை.
* பேரணியின் பங்களியான இ.தொ.கா தோட்ட உள்ளகக் கட்டமைப்பு அமைச்சுப் பொறுப்பை ஏற்ற போதிலும் இதுவரையில் கோவில் திருத்த வேலைகள், பூசாரிகளுக்கு பயிற்சி அளித்தல் போன்றவை தவிர உருப்படியாக ஒன்றும் செய்யாமை.
* மலையக அப்பாவி இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் போது ஏதும் செய்ய முடியாதவர்களாக இருந்தமை.
* மலையகத்தில் பொலிஸ் நிலைய அடக்குமுறைகளுக்கு எதிராகச் செயற்படாமை.
* சிறையில் வாடும் அப்பாவி இளைஞர்களின் விடுதலை தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை.
* பேரணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக தமிழ் மக்களை அழிப்பதற்கு அதிகாரம் வழங்கும் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்றமை.



மேற்கூறப்பட்டவை மேலோட்டமானவை. மேலும் ஆராய்ந்தால் இன்னும் எத்தனையோ சம்பவங்களையும், பலவீனங்களையும் சாதிக்கத் தவறியவைகளையும் காணலாம்.

### பேரணியின் வீழ்ச்சி:

பலரும் கருதுவது போல் பேரணியின் வீழ்ச்சியானது தொண்டாவின் மரணத்தின் பின் ஏற்பட்டதல்ல. போதே பேரணி தனது இறுதிக் கட்ட வீழ்ச்சியை நோக்கிய பயணத்தில் இருந்தது.

ஆரம்பம் முதலே பேரணிக்குத் தெளிவான கொள்கையோ, வேலைத் திட்டமோ இருந்ததில்லை. அதே போன்று 171 வருட வரலாற்றைக் கொண்ட மலையகத் தமிழரை இந்தியப் பிரஜைகளாகவே வெளியுலகிற்குக் காட்டி வந்தனர். ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது பேரணியானது தேர்தல்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வாக்குகளைக் கொள்ளை அடிப்பதற்கான ஒரு அமைப்பாகவே செயற்பட்டு வந்தது. அதேவேளை இதில் பிரதான அங்கம் வகித்த இ.தொ.காவானது சட்டரீதியாக இ.தொ.காவானது சட்டரீதியாக இ.தொ.காவிற்கு வரவிருக்கும் சிக்கல்களை தவிர்ப்பதற்கும் சிறிய அமைப்புக்களை தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்குமாக இப்பேரணியைப் பயன்படுத்தி வந்தது.



ஆறுமுகம் தொண்டமான்

இந்நிலையிலேயே அமைச்சர் தொண்டமானின் மறைவை அடுத்து அவரின் அமைச்சர் பொறுப்பை அவரின் பேரன் ஆறுமுகம் தொண்டமான் ஏற்றுள்ளார். அதேவேளை இ.தொ.காவின் தலைவர் இல்லாத நிலையில் செயலாளரே அரசியல் கட்சியின் கூட்டத்தைக் கூட்டுவதற்கு அழைப்பு விடுக்க வேண்டும். இ.தொ.கா. உத்தியோகபூர்வ செயலாளர் மற்றும் அதன் சேவல் சின்னம் தொடர்பான வழக்கு நீதி மன்றத்தில் உள்ளதால் அதன் அடுத்த அரசியல் தலைவரை தெரிவு செய்வதில் சிக்கல்கள் இருப்பதால் இ.தொ.கா. பேரணியைத் தொடர்ந்து பயன்படுத்த எண்ணியது. அதன் பிரதிபலிப்பே நவ.10ம் திகதி பேரணியில் அங்கம் வகிக்கும் இ.தொ.கா. தான் தோன்றித்தனமாக ஆறுமுகம் தொண்டமானை தலைவராகவும், அவரின் நெருங்கிய சகா யோகராஜன் பா.உ. அவர்களை செயலாளராகவும் தெரிவு செய்து பேரணியை அரசியல் கட்சியாக பதிவு செய்து மீன் சின்னத்தை பேரணியின் சின்னமாக பதிவு செய்தமை ஆகும்.

இதனை அடுத்தே பேரணியிலிருந்து விலகுவதாக மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் (ஜ.தொ.கா.) மற்றும் நடேசன் தலைமையிலான தொழிற்சங்கம் என்பன முடிவு செய்தன. இருப்பினும் இவை தான் பேரணியின் வீழ்ச்சிக்கு ஆரம்பம் எனக் கொள்ள முடியாது. ஏனெனில், இ.தொ.காவிற்கு அடுத்தபடியாக பேரணியில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சக்தியாக விளங்கியது தொழிலாளர் தேசிய சங்கம் பேரணியின் வீழ்ச்சியானது அதற்கெல்லாம் முன் அதன் ஆரம்பம் முதலே தொடங்கியது எனலாம். தேர்தலில் பேரணிக்கு ஏற்பட்ட பின்னடைவு என்பன அதன் ஆரம்ப அறிகுறிகளாகும். ஆரம்பத்தில் பேரணியில் 14 அமைப்புகள் அங்கம் வகித்ததாகக் கூறப்பட்டது. இன்று அதிலிருந்து இ.தொ.கா. தவிர குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஏனைய அமைப்புகள் வெளியேறிவிட்ட நிலையில் பெயரளவிலான பல அமைப்புக்களின் சொல்லக் கூடிய ஏனைய அமைப்புகள் வெளியேறிவிட்ட நிலையில் பெயரளவிலான பல அமைப்புக்களின் கூட்டணியான பேரணியானது இன்று இ.தொ.காவின் ஒரு மாற்று வடிவமாகவே உள்ளது.

இந்நிலையில் இன்று குறிப்பாக மலையகத்தின் அனைத்து அமைப்புகளும் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்துள்ளன. (அப்படியாயின் தேர்தல்களின் போது எப்படி இவ்வமைப்புகளுக்கு மக்கள் குறிப்பிடத்தக்களவு வாக்களித்துள்ளனர் என்ற வினா எழுவது இயல்பே. இதற்கு அடிப்படையான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.)

* இன்றும் மலையகத்தின் தனிநபர் வழிபாடு முற்றாக மறையவில்லை. அதேவேளை இது ஒரு சாராரினால் தொடர்ந்து அவர்களின் சுயநலத்திற்காக வளர்க்கப்படுகின்றது.
* மலையக மக்கள் அரசியல் ரீதியாக போதிய விழிப்புணர்வு முதிர்ச்சி பெறாமை.
* அரசியல் விழிப்புணர்வானது குறிப்பிட்ட சில சக்திகளால் திட்டமிட்ட முறையில் மழுங்கடிக்கப்படல்.
* மலையக மக்கள் மத்தியில் குறிப்பிட்டு சொல்லத்தக்களவில் மாற்று அரசியல் சக்தி / அமைப்பு இன்று வரை தோற்றம் பெறாமை.

இந்நிலையில் பேரணியில் அங்கத்துவம் வகிக்காத மலையக மக்கள் முன்னணி (ம.ம.மு.), புதிய ஜனநாயகக் கட்சி (பு.ஜ.க.) என்பவற்றின் பங்களிப்புகளையும் நோக்குதல் சிறப்பானதாகும்.

மாற்றமுறும் மலையகத்தில் புதிய அரசியல் தலைமை கொடுக்கப் புறப்பட்ட புரட்சியாளர்களாகத் தங்களை வெளிக்காட்டிக் கொண்ட ம.ம.முவினர் இன்று நாற்காலி சுகத்தில் சகலதையும் மறந்து பேரினவாத ஒடுக்கு முறையை எதிர்க்க சக்தியற்றவர்களாகவும், தமிழரை அழித்தொழிக்கும் அதிகாரம் வழங்கும் அவசரகாலச் சட்டத்திற்கு மறவாமல் ஆதரவளித்து, அதன் தலைவர்கள் சிறையில் இருந்த போது ஒட்டுமொத்த இலங்கை வாழ் தமிழர்கள் சிறையிலிருந்து மீட்பதற்கு செய்தவைகளைக் கூட மறந்து அதன் தலைவர் தானும் இ.தொ.காவின் அரசியல் பாசறையில் வளர்ந்தவர் என்பதை நிரூபித்துக் கொண்டுள்ளார். இவர்களால் எந்த மக்கள் விரோத செயல்களையும் தடுக்கவும் முடியவில்லை. அதேவேளை மக்கள் நலன்

—9

நன்றி - நூலகத்திட்டம்





சார்ந்த நடவடிக்கைகளையும் பெரிதாக ஒன்றும் சாதிக்கவில்லை.

புதிய ஜனநாயகக் கட்சியைப் (பு.ஜ.க.) பொறுத்தவரை மலையக மக்கள் மத்தியில் உணர்வுகளைத் துாண்டக் கூடியவர்களாகவே உள்ள-போதும் செயற்பாட்டு ரீதியில் குறிப்பிடத்தக்கதாக எதுவும் இல்லை என்றே சொல்ல வேண்டும். மேலும், அவ்வமைப்பின் அடிமட்ட தொண்டர்-களுக்கும், தலைவர்களுக்குமிடை-யிலான இடைவெளி அதிகரித்து தனிநபர் வழிபாடு அங்கும் ஊக்குவிக்கப்படுவதாகவும், அதன் உறுப்பினர்களுடன் உரையாடிய பொழுது அறிய முடிந்தது. மேலும் தேர்தல் காலங்களில் வெளிப்படும் இவ்வமைப்பினரின் செயற்பாடுகள் ஏனைய காலங்களில் வெளிப்படு-வதில்லை என்ற குற்றச் சாட்டும் நிலவுகிறது.

இவ்வாறானதொரு நிலை-யிலேயே பேரணியின் வீழ்ச்சியும் ஏனைய அமைப்புகளின் மீது மக்களின் நம்பிக்கையின்மையும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இவ்வாறான வீழ்ச்சி தவிர்க்கமுடியாத வரலாற்றுத் தேவை ஆகும். இவ்வீழ்ச்சியானது தடுக்கப்படுமாயின் இவ்வாறான அமைப்புக்களின் வீழ்ச்சியை கட்டாயப்படுத்த வேண்டிய தேவை மலையக மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் / ஏற்படலாம்.

இவ்வாறு மலையக மக்களின் அரசியல் களத்தில் ஏற்பட்டிருக்கும்/ ஏற்படக்கூடிய தற்காலிக தளம்-பல்களை பயன்படுத்தி பேரினவாத சக்திகளும், மலையக மக்களுக்கு எதிராக செயற்படக் கூடிய ஏனைய அமைப்புகளும், தனிநபர்களும், ஏனைய தேசிய இனங்களின் குறிப்பிட்ட ஒரு சில பிரிவுகளும் மலையக மக்களை துண்டாடி அரசி-யல் இலாபம் தேட முயற்சிக்கின்றன / முயற்சிக்கலாம்.

அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்கள் இவற்றிற்கு கட்டியும் கூறுகின்றன. சிங்கள வீரவிதான அமைப்பின் செயற்பாடுகள் மலையக மக்களை அவர்களின் இருப்பிடங்-களிலிருந்து முற்றாக அகற்றிவிட அதன் தீவிர இனவாத நடவடிக்-கைகளை மலையகத்தில் ஆரம்பித்-துள்ளது. இதனைத் தடுக்கும் வல்லமை இன்றுள்ள மலையக அமைப்பு எதற்கும் இல்லை!

அதேவேளை அம்மையாரின் பேரினவாத அரசாங்கம் இவற்றை கண்டும் காணாதது போல் இருப்பத-னுாடாக இவ்வாறான நடவடிக்கை-களை மறைமுகமாக ஊக்குவிக்-கின்றது.

மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு கல்லில் இரண்டு மாங்-காய்களை அடிக்க முயற்சிக்கின்றது. அண்மையில் தொண்டமான் அவர்க-ளின் மரணத்தின் போது கொட்ட-கலைக்கு அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்த செல்லச்சாமி அவர்கள் சென்ற போது இ.தொ.கா முக்கியஸ்தர் ஒருவரின் ஆணையின் பேரில் அவர் ஆதரவாளர்களுடன் விரட்டப்பட்-டுள்ளார். இருப்பினும் பின்னர் கொழும்பில் வைத்து அவருக்கு அஞ்சலி செலுத்த வருமாறு இ.தொ.கா. துாது அனுப்பியுள்ளது. தற்பொழுது எம்.எஸ். செல்லச்சாமி அவர்களை மீண்டும் இ.தொ.கவுடன் இணைப்ப-தற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. அவரை இ.தொ.காவுடன் இணைப்-பதன் மூலம் அவர் தொடுத்துள்ள வழக்குகளை வாபஸ்பெற செய்து இ.தொ.கா. எதிர் நோக்கும் சட்டச் சிக்கல்களைத் தவிர்க்கவும், அவரை பொதுச்செயலாளராக மீண்டும் ஏற்பதன் மூலம் ஏனைய மூத்த உறுப்பினர்களிடமிருந்து அப்பதவிக்கு வரக் கூடிய போட்டியை தவிர்க்கவும் முயற்சிக்கின்றனர்.

இதேவேளை ஐ.தே.க. தொண்ட-மானின் மறைவை அடுத்து காலியாக உள்ள தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை எம்.எஸ். செல்லச்சாமிக்கு கொடுப்பதற்கு ஆலோசிப்பதாகவும் தெரியவருகிறது. இதன் ஊடாக செல்லச்சாமி அவர்கள் இ.தொ.காவிற்கு செல்வதைத் தவிர்த்து இ.தொ.காவின் சட்டச் சிக்கல்களை ஒரு புறம் தொடர வைப்பதுடன் மறுபுறம் தான் (ஐ.தே.க) மலையக மக்கள் மத்தியில் தீவிரமாக வேரூன்ற முயற்சிக்கின்றது.

இவ்வாறான நிலையில் எதிர்-வரும் ஜனாதிபதித் தேர்தலில் செல்ல-சாமியின் இலங்கைத் தேசிய தொழி-லாளர் காங்கிரஸ் (இ.தே.தொ.கா.) ஐ.தே.கவை ஆதரிக்க முடிவு செய்-துள்ளது. தொழிலாளர் தேசிய சங்கமும் ஐ.தே.கவை ஆதரிக்க, பேரணி பொதுஜன முன்னணி வேட்பாளர் சந்திரிகாவை ஆதரிக்க முடிவு செய்-துள்ளது. மலையக மக்கள் முன்னணி ஐ.தே.கவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது.

இன்றைய பிழைப்பு அரசியலின் உறுதியான கொள்கைகளோ, வேலைத் திட்டங்களோ அற்ற தளம்பலான மக்கள் நலன் கருதாத சுயநல போக்கிற்கு மாற்றாக மக்கள் நலனை முன்னி-லைப்படுத்தும் உறுதியான புதிய கூட்டணியின் தோற்றம் அவசிய தேவையாகும்.

### புதிய கூட்டணியின் தேவை

யதார்த்தபூர்வமாக சிந்தித்து மக்கள் நலன் முன்னிலைப்படுத்தி செயற்பட்க் கூடிய கூட்டணியானது சில அடிப்படை விடயங்களில் தீர்க்கமான கொள்கையையும், வேலைத்திட்டத்-தையும், கொண்டமைவது காலத்தின் தேவையாகும். இக்கூட்டணியானது முற்போக்கான புதிய சிந்தனையாளர்-களையும், செயல்வீரர்களையும் கொண்டு உருவாக்கப்படுவதுடன் மலையக மக்களின் பிரச்சினைகளை வெறும் தொழிற்சங்கப் பிரச்சினையாக மட்டும் அணுகாமல் வயிற்றுப் பிழைப்-பிற்காக அரசியல் கோரிக்கைகளை முன்னெடுக்காது உண்மையான மக்கள் உயர்வுடன் மக்களை விழிப்படையச் செய்வதுடன் அரசியல் கோரிக்கை-களை முன்னெடுக்க வேண்டும். அதேவேளை தோட்டத் தொழிலாளர் உள்ளிட்ட அனைத்து மலையக மக்களையும் உள்ளடக்கிய அரசியல், பொருளாதார, சமூக கோரிக்கைகளை உள்ளடக்கியதான பொது வேலைத்-திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும். பொது வேலைத்திட்டம் கீழ் வரும் அம்சங்களை அடிப்படையாக கொண்டு அமைவது அவசியமாகும்.

***வேலைத் திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய அடிப்படை அரசியல் அம்சங்கள்:***

- மலையக மக்களை இந்தியர் என்ற அடைமொழியைத் தவிர்த்து மலையகத் தமிழர் என்று சட்ட-ரீதியாக ஏற்க அழுத்தங்களைக் கொடுத்தல்.
- அதிகாரப் பரவலாக்கல் மூலம் பிராந்திய சபைகளை ஏற்படுத்தி சுயநிர்ணய உரிமையைப் பெறல்.
- சகல மலையகத் தமிழருக்கும் இலங்கைப் பிரஜை அந்தஸ்து வழங்கப்படல் வேண்டும்.
- சகல விடயங்களிலும் தமிழ் மொழி அமுலாக்கல் உரிய முறையில் இருத்தல் வேண்டும்.
- திட்டமிட்ட குடியேற்றங்களைத் தவிர்க்க வேண்டும்.

***வேலைத்திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய அடிப்படை பொருளாதார அம்சங்கள்***

- பெருந்தோட்ட நிருவாக கட்ட-மைப்பு தொழிலாளர்களின் பங்களிப்புடன் நடத்தக் கூடியதாக மாற்றப்படல் வேண்டும்.
- பெருந்தோட்ட வருமானத்தில் 1/3பங்கு பெருந்தோட்ட சமூக அபிவிருத்திக்கு செலவிடப்படல் வேண்டும்.
- மலையகப் பகுதிகளில் பாரியள-வில் கைத்தொழில்கள் ஆரம்பிக்-கப்படுவதுடன் அதற்கான பயிற்சி வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- ஊழியர் சேமலாபநிதி (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) என்பவற்றிலுள்ள மலையக மக்க-ளின் பங்களிப்புகள் மலையகப் பிரதேங்களிலேயே முதலீடு செய்தல் வேண்டும்.
- சகல தோட்டங்களையும் போக்கு-வரத்து, தொலைதொடர்பு வலைப்-பின்னலில் இணைத்தல் வேண்டும்.
- அனைத்து வளங்களையும் ஒன்றி-ணைத்து அபிவிருத்தியில் ஈடுப-டுத்தக் கூடியதாக மலையகத்தில் மத்திய வள மையம் ஒன்று ஏற்படுத்தப்படல் வேண்டும்.

***சமூக நல அம்சங்கள்:***

- கல்வி, சுகாதார வாய்ப்புக்களை பூரணத்துவப்படுத்தல்.
- கலாசார, பண்பாட்டு அம்சங்களை ப்ாதுகாத்தலும், மேம்படுத்தலும்.

எனவே புதிதாக உருவாகக் கூடிய கூட்டணியானது அடிப்படை நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்க கூடிய முற்போக்கு அமைப்புக்களை கொண்டதாக தொடர்ந்து மக்கள் நலன் சார்ந்து போராடவும், முன்னெடுக்கவும் தயாராக இருத்தல் வேண்டும்.

இறுதியாக நெருக்கடிமிக்க இன்றைய சூழ்நிலையில் பேரணியின் வீழ்ச்சியும் ஏனைய அமைப்புக்களின் இயலாமையும் அரசியல் ரீதியில் மலையக மக்கள் மத்தியில் ஏற்படுத்தி-யுள்ள வெற்றிடத்தை போக்க மலையகத் தமிழரின் முற்போக்கான கூட்டிணைவு தவிர்க்க முடியாத வரலாற்று தேவையாகும்.

- இடையன்

# சந்திரசேகரனின் சளாப்பல்!

*மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான சந்திரசேகரன் பொ.ஐ.முவிலிருந்து வெளியேறி ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை தேர்தலில் ஆதரிப்பதாக அறிவித்துள்ளார் என்பது தெரிந்ததே. ஐ.தே.கவின் கடந்த ஆட்சிக் காலத்தில் சிறையிலடைக்கப்பட்டிருந்த சந்திரசேகரன், ஐ.தே.க ஆட்சிக் காலத்து அநியாயங்கள் அனைத்தையும் மறந்து அக் கட்சிக்கு ஆதரவளிக்கப் போயிருப்பது தொடர்பான சண்டே டைம்ஸ் பத்திரிகை கேட்ட சில கேள்விகட்கு அளித்த பதில்களை இங்கே தருகிறோம். அவரை நாம் தொடர்பு கொள்ள முயன்ற போதும் முடியவில்லை.*



**ஏன் அரசாங்கத்திலிருந்து விலகினீர்கள்?**

தோட்டப்புற மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கட்சி என்ற முறையில் அந்த மக்களின் நலனின் அடிப்படையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நாம் முடிவு எடுக்க வேண்டியிருக்கும். தோட்டப்புற மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு நாம் சில கோரிக்கைகளை முன்வைத்தோம். தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மலையக இளைஞர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் தோட்டப்பகுதியில் தமிழை உத்தியோகபூர்வ மொழியாக்க வேண்டும் என்றும் நாம் கோரினோம். ஆனால், ஜனாதிபதி இவை தொடர்பாக அவ்வளவு அக்கறைக் காட்டாததால் நாம் பொ.ஐ.முவை விட்டு விலகினோம். ஆனால், இப்போது ஜனாதிபதி எனது கோரிக்கைகளை நிறைவேற்றத் தயாராக இருப்பதாக நாம் கேள்விப்படுகிறோம். ஆயினும், நாம் பொ.ஐ.முவுக்குத் திரும்பப் போகப் போவதில்லை. இது இன்னொரு தேர்தல் வாக்குறுதியாக இருக்கலாம். தோட்டப்பகுதி ஜனாதிபதியை ஒரு போதும் நம்பப் போவதில்லை. இன்றைய நிலையானது தேர்தலில் தோட்டப்பகுதி வாக்குகளைப் பெறுவதற்காக அரசாங்கம் எதையும் செய்யக் கூடிய நிலையாக உள்ளது. ஜனாதிபதி தோட்டப்புறப் பகுதியின் ஆதரவை இழந்துவிட்டார் என்பது வெளிப்படை.

**பொ.ஐ.மு. தோட்டப்புற மக்களுக்காக கடந்த 5 ஆண்டு காலமாக எதையும் செய்யவில்லை என்றால். நீங்கள் எதற்காக அந்தக் கட்சியுடன் இருந்தீர்கள்?**

நாம் எப்போதும் தோட்டப்புற மக்களுக்காகப் போராடினோம். நாம் எப்போதும் அவசரக் காலச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்தோம். ஆனால், கடந்த 5 ஆண்டு காலத்தில் பொ.ஐ.முவிலிருந்து வெறுமனே எமது கோரிக்கைகள் நிறைவேறவில்லை என்பதற்காக வெளியேறுவது நடைமுறைச் சாத்தியமாக இருக்கவில்லை. அப்போது காலம் சரியாக இருக்கவில்லை. நாம் பொ.ஐ.முவை விட்டு வெளியேறியிருந்தால் இரண்டொரு நாளைக்கு ஹாய், ஊய் என்று கதைத்திருப்பார்கள். பிறகு எல்லாமே மறந்து போய்விட்டிருக்கும். ஆனால், நாம் அதைச் செய்ய முடியாது. ஏனென்றால் நம் மக்களைப் பிரதிநிதித்துப்படுத்துகிறோம். அம்மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். இப்போது தேர்தல் காலமாகையால் நாம் எமது கோரிக்கையை முன்வைத்தோம், ஏனென்றால், அப்போதுதான் எமக்கு அரசாங்கம் அந்த மக்களுக்கு சேவையாற்றத் தவறியதால் தான் நாம் வெளியேறினோம் என்று காட்ட முடியும்.

**நீங்கள் எந்த அடிப்படையில் ஐ.தே.கவை ஆதரிக்கிறீர்கள்?**

நாம் எமது கோரிக்கைகளை எழுத்தில் முன்வைத்துள்ளோம். ஆனால், இதைவிடவும் ஐ.தே.கவுடன் நாம் பல கோட்பாட்டு விடயங்களில் ஒத்துப் போகின்றோம். இப்போது இந்த நாட்டின் தலைமைத்துவத்தில் மாற்றம் தேவையென நாம் கருதுகிறோம். அதை ஐ.தே.கவால் தான் சாதிக்க முடியும்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஐ.தே.க, பொ.ஐ.மு இரண்டுமே -

# தமிழ் மக்களை ஏமாற்றி விட்டன

**த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா**

*ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளான ஐ.தே.க மற்றும் பொ.ஐ.மு இரண்டுக்குமே ஆதரவளிப்பதில்லை என்ற தீர்மானத்திற்கு த.வி கூட்டணி வரக் காரணமென்ன?*

ஐ.தே.கவின் 17 வருட ஆட்சியில் இடம்பெற்ற கொடுமைகள் அவலங்கள், கொலைகள், இனவன்முறை என்பன, உதாரணமாக 77ம் ஆண்டு இனவன்முறை, 81ம் ஆண்டு யாழ் நூலகம் எரிக்கப்பட்டமை, 83ம் ஆண்டு மீண்டும் இனக்கலவரம், இந்த இன வன்முறை தொடர்பாக சன்சோனிக் கமிஷன் நியமிக்கப்பட்டும் கூட அதன் தீர்ப்பின்படி அமைய எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது தவிர மணலாறு என்ற தமிழ் குடியிருப்பிலிருந்து 15 ஆயிரம் குடும்பங்கள் திடீரென அகற்றப்பட்டு அதில் மகாவலி "எல்" திட்டத்தினை அறிமுகம் செய்து அதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏறத்தாழ ஒரு லட்ச ரூபா செலவு செய்து சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டார்கள். பெயரும் வெலி ஓயா என மாற்றப்பட்டது.

இதனை முன்னின்று செய்தவர்கள் காமினி திசாநாயக்கவும் ஜே.ஆரின் மகன் ரவி ஜெயவர்த்தனாவுமாகும். இக்குடியேற்றத்-திட்டங்களுக்கு இஸ்ரேலின் உதவி செய்யப்பட்டது உங்களுக்குத் தெரியும்.

மணலாறில் இரவோடிரவாக தமிழ் மக்களை வெளியேற்றி விட்டு 40 ஆயிரம் சிங்களக் குடும்பங்களை இராணுவத்தின் உதவியுடன் குடியேற்றுவதே அவர்களின் திட்டமாக இருந்தது. இது தமிழ் முஸ்லிம்களின் பாரம்பரிய தாயகமான வடக்கு கிழக்கு இணைப்பினைத் துண்டிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டது. இதேபோல் அம்பாறையில் 81ம் ஆண்டின் குடித்தொகை கணக்கெடுப்பின்படி 42.5 வீதமாக முஸ்லிம்களும், 37.5 வீதமாக இருந்த சிங்களவர்களும் 21.6 வீதமாக தமிழர்களும் இருந்தார்கள். ஆனால் 94ம் ஆண்டில் வாக்காளரின் எண்ணிக்கையைப் பார்த்தால் முஸ்லிம்களைவிடச் சிங்களவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இதற்குக் காரணம் அயற் கிராமங்களில் இருந்த சிங்களவர்கள் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தார்கள். இவ்வாறு ஐ.தே.க ஆட்சியில் தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட பாரிய சம்பவங்கள் எல்லாம் இடம்பெற்றன. இது தவிர தேர்தல் காலத்தில் மிக ஜனநாயக விரோதமாக நடந்து கொண்டது ஐ.தே.க. 82ம் ஆண்டில் இது பட்டவர்த்தனமாக நடைபெற்றது.

இவற்றின் காரணமாக 94ல் சந்திரிகாவை நாம் ஆதரிக்கும் நிலைக்கு வந்தோம்.

இதனிடையில் இனப்பிரச்சினை தீர்வுக்காக மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு கூடியபோது ஐ.தே.க தான் எந்தத் தீர்வுத்திட்டத்தையும் முன்வைக்கவில்லை. பதிலாக ஐ.தே.கவினரே சிறினிவாசன் என்பவரைப் பிடித்து வடக்குக் கிழக்கைப் பிரிக்கும் முகமாக ஒரு தீர்வுத்திட்டத்தை தலையில் கட்டிவிட முயன்றார்கள். இச்சந்தர்ப்பங்களின் போதெல்லாம் ரணில் எந்தவித முன் முயற்சியையும் எடுக்கவில்லை.

இச்சந்தர்ப்பத்தில் தான் சந்திரிகா ஜனாதிபதியானார். இதுவரைகாலமும் இரண்டு பிரதான கட்சிகளுமே இனப்பிரச்சினையை கையாண்ட முறை தவறு. எனவே விடுதலைப்புலிகளுடன் பேசி இதற்கு நிரந்தரத் தீர்வு காண்பேன் என்று சொன்னார். இரண்டாவதாக இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையைத் தான் ஒழிப்பேன் என்றும் தெரிவித்தார்.

ஆனால், இந்த இரண்டிலும் கடந்த ஐந்து ஆண்டுகளாக எந்தவகையான முன்னேற்றங்களையும் காண முடியவில்லை. அதற்குப் பதிலாக பரிபூரணமான இராணுவ நடவடிக்கைகளில் தான் அவர்கள் முழுமையான நாட்டத்தைக் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது, வன்னியில் நிலங்களைக் கைப்பற்றுவது என அவர்களின் நடவடிக்கை தொடர்ந்ததே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தவறிவிட்டார்.



இதற்குப் பதிலாக வடக்குக் கிழக்கில் கிடைக்கின்ற இராணுவ வெற்றிகளை தென்னிலங்கையில் தங்களுடைய வெற்றிகளுக்கான மூலதனங்களாக மாற்றியிருந்தார். இதையொரு தேசியக் கொள்கையாகவே கொண்டிருக்கிறார் என்பதுதான் எமது அபிப்பிராயம்.

சரியான தீர்வைக் காண்பதற்கு நியாயமான வேலைத்திட்டம் எதனையும் அவர்கள் முன்வைக்க வில்லை. 98 ஒகஸ்ட் 3ம் திகதி வைத்த பிரேரணைக்கும் இறுதியில் அது பெற்றிருக்கும் வடிவத்துக்குமிடையில் வேறுபாடுகள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

'இந்த அரசாங்கக் காலத்திலும் அரசியல் தீர்வுக்காக முன்வைத்த பொதி சில விடயங்களில் சிறப்பானது என்று எடுத்துக்கொண்டாலும், மொத்தத்தில் வடக்கையும் - கிழக்கையும் பிரித்து விடக்கூடிய சதி அம்சங்கள் அதில் காணப்படுவதால் நாங்கள் அந்தப் பொதியை எங்களுடைய பிரச்சினைக்குத் தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாது.

இதேவேளை திருகோணமலை உட்பட பல இடங்களில் சிங்களக் குடியேற்றங்களை பொ.ஐ.மு. அரசாங்கம் இரவோடிரவாக மேற்கொண்டுள்ளது.

வடக்கில் காங்கேசன்துறைத் தொகுதியில் ஏறத்தாழ 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் இராணுவக் குடியிருப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உயர்ந்த பாதுகாப்பு வலயம் என்ற தோரணையில் அங்கிருந்த 75 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டு அவர்கள் அகதிகளாக உள்ள நிலையில் இந்த இராணுவக் குடியிருப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டு பிரதான கட்சிகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுப்பதற்குப் பதிலாக இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் முயற்சியிலும், தமிழ் பிரதேசங்களை துண்டாடும் முயற்சியிலும் ஈடுபட்டு வந்ததால் இக்கட்சிகளில் நம்பிக்கையிழந்து அவை கொடுத்த வாக்குறுதிகளில் நம்பிக்கையிழந்து அவற்றை நாம் ஆதரிக்க முடியாதென அறிவித்தோம்.

அதேவேளை தமிழ் மக்களைத் தேர்தலில் வாக்களிக்க வேண்டாமென்று நாம் கேட்டுக்கொண்டால் அந்த வாக்குகள் தவறாகப் பயன்படுத்தப்படலாம். இதனால் வாக்களிக்கும் உரிமையை நிராகரிக்காமல் இவ்விரு கட்சிகளுக்கும் வாக்களிக்காமல் - வாசுதேவ நாணயக்கார அவர்களுக்கு வாக்களிக்கும்படி வேண்டியுள்ளோம்.

*அவர் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும், தமிழ் மக்களினதும், முஸ்லிம் மக்களினதும் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும், விடுதலைப்புலிகளுடன் பேசித் தீர்வு காண வேண்டும், வடக்கு கிழக்கு இணைந்த அதிகார அலகு வழங்கப்பட வேண்டுமென்று என்று எல்லாம் வற்புறுத்துகின்றார்.*

*இன்றைய நிலையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்முயற்சி உள்ள ஒரே ஒரு தலைவர் சந்திரிகா தான். பொ.ஐ.மு அரசினால் தான் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணமுடியும். இரண்டாவது முறையாக அவரைத் தெரிவு செய்து ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பதானது இனப்பிரச்சினையைத் தீர்க்க வழிவகுக்கும் என்று ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரான டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.ஆர்.எல்.எப் வரதராஜப்பெருமாள் போன்றோர் கூறுவதைப்பற்றி...*

அது அவர்களுடைய அபிப்பிராயம். இரண்டாவது முறை தெரிவுசெய்யப்பட்டு விட்டால் அவர் இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடுவார் என்ற நம்பிக்கை வெற்றியளிக்கும் என்று நான் சொல்லமாட்டேன்.

இந்த ஐந்தாண்டு காலத்திலும் சரி, ஜே.ஆர் 2/3 பெரும்பான்மையோடு இருந்த காலத்திலும் சரி அவர்களுக்கு கொடுத்த சந்தர்ப்பத்தை அவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை என்றே நான் எண்ணுகிறேன்.

*ஆக 94இல் நீங்கள் பொது ஜன ஐக்கிய முன்னணியை ஆதரிப்ப தாக எடுத்த தீர்மானம் தவறானது என்றா நினைக்கிறீர்கள்?*

இல்லை. நாங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி ஒரு தீர்வுப் பொதியை முன்வைத்தது. அதனை முன்தள்ளலாமா என்று தான் பார்த்தோம். அதற்காக அதனை ஏற்றுக் கொண்டோமென்று அர்த்தமல்ல. ஆனால் இந்த ஐந்து வருடங்களில் எமக்குப் புரிந்தது பொ.ஐ.மு. இனப்பிரச்சினையைத் தீர்ப்தில் உளசுத்தியாக இல்லை என்று.

*இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளுடனும் பேசி இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்ற முடிவுக்கு வந்ததன் காரணமாக 1977இல் தமிழீழத்துக்கான அங்கீகாரம் ஒன்றை மக்களிடம் கோரியிருந்தீர்கள். மக்களும் அதற்குத் தமது பூரண ஆதரவைத் தந்திருந்தார்கள். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியோ மீளவும் பழைய தடத்திலேயே சென்று 22 வருடங்களின் பின்னர் அதே இடத்துக்கு வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால் தவறா?*

இல்லை. செல்வநாயகம் அவர்கள் அதனைத் தான் சொல்லியிருக்கிறார். தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் சேர்ந்தும் வாழ முடியும். அவர்கள் விரும்பினால் பிரிந்து சென்றும் வாழலாம். இந்த அடிப்படைக் கருத்தில் எங்களுக்கு மாறுபாடு இல்லை.


தமிழ் மக்களுக்கான ஒரு சுதந்திரமான அரசை நிறுவுவதான தமிழீழத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளில் நாங்கள் பின்நிற்கப் போவதில்லை.

தமிழ் மக்களால் எற்றுக் கொள்ளக் கூடிய மாற்றுத் திட்டமொன்று இந்த அரசுகளால் முன்வைக்கப்படாத வரை நாங்கள் தமிழீழம் என்ற இலக்குக்காகத் தான் வேலை செய்ய வேண்டும். ■


நன்றி - நூலகத்திட்டம்











# மட்டக்களப்பு: தேர்தல் திருவிளையாடல்கள்

ஆண்டாண்டு காலமாக இனவாதத்தின் அடிப்படையில் அரசியலை நிலைப்படுத்திவந்த சிங்கள பேரினவாதக் கட்சிகள் மீண்டும் ஒரு தடவை தமது அரசியலின் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடிவெடுத்து அதற்கான செயற்பாடுகளில் மும்முரமாக இறங்கி இருக்கின்றன. இலங்கையின் அரசியல் வரலாற்றை எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் எந்த ஒரு கட்சி இனவாதத்தைப் பரப்புகின்றதோ அந்தக் கட்சியே அரசியலில் அமர்வது வழமை. இது பண்டாரநாயக்காவின் அரசியல் முதல் சந்திரிகாவின் அரசியல் வரை நடைமுறையில் இருந்து வருகின்றது. தற்போது நடத்தப்படுகின்ற ஜனாதிபதித் தேர்தலை நோக்கும் போது இலங்கையின் இருபெரும் கட்சிகள் தேர்தல் களத்தில் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றன. இவ்விரு கட்சிகளுமே ஒன்றை ஒன்று வெல்ல முடியாத அளவுக்கு இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால் இதன் அடிப்படையிலான வாக்குகளை பெறும் நிலை சமமாக இருப்பதால் தமது வெற்றியை அடிப்படையாக வைத்த இவ்விரு கட்சிகளும் இலங்கையின் சிறுபான்மை மக்களை நோக்கி தமது செயற்பாடுகளை விரித்திருக்கின்றார்கள். இதன் ஒரு கட்டமாகவே இவ்விரு கட்சிகளும் சமாதானம் பற்றியும் யுத்தவிளைவுகள் பற்றியும் பேசத்தலைப்பட்டிருக்கின்றன. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையின் ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிக்கும் சக்தி வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களிடையேயும் இருப்பதன் காரணத்தினால் அந்தத் தேவைகருதி அவர்கள் மத்தியில் தமிழர் உரிமை 'தமிழர் என்றும் தன்மானத்துடன் வாழ' என்பது போன்ற விடயங்களை முன்வைத்து மக்கள் முன் வந்திருக்கின்றார்கள்.

ஆனால கடந்த காலங்களை நோக்கும் போது மாகாணசபைத் தேர்தல் உள்ளூ-ராட்சித் தேர்தல் போன்றவற்றை எல்லாம் நடத்த முடியாதளவுக்கு பாதுகாப்பு இல்லாத போது ஜனாதிபதித் தேர்தலை மட்டும் நடத்த பாதுகாப்பு நிலை எவ்வாறு சாதகமாக வந்தது என்பது அனைவ-ருக்கும் புரிந்த அல்லது புரியாத விடயமே. இந்த விடயம் ஒன்றே இத்தேர்தல் ஆனது பேரி-னவாத கட்சிகள் அதிகா-ரத்தை நிலைநாட்டுவ-தற்கான ஏற்பாடே அன்றி தமிழ் மக்களுடைய பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான தேர்தல் இல்லை என்பது வெளிப்-படையானது.

ஆனால் தமது இலக்கினை அடைவதற்காக இலங்கையின் பிரதான சிங்களக் கட்சிகளான பொ.ஐ.மு, ஐ.தே.கட்சிகள் என்பன வடகிழக்கில் தமது கையாட்களை நியமித்து இருக்கின்றன. இக்கையாட்களாக தமிழ் கட்சிகள் அமைந்து விட்டமை தான் துரதிர்ஷ்டம். தமிழர்களை தலை குனிய வைக்கும் இந்த ஒரே நிகழ்வு எந்த சிங்கள அரசுக்கு எதிராக அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் போராட்டம் செய்தனவோ அவை எல்லாம் ஒவ்வொருபக்கம் சார்ந்து நின்று ரணிலாலும் சந்திரிக்காவாலும் தான் தமிழருக்கு விடுதலை தர முடியும் என்று கூறுவதில் இருந்தே இவர்கள் எத்தனை கேவலமாக இச்சிங்களக்-கட்சியின் கைக் கூலிகளாக மாறிவிட்டார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. தமிழீழம் சாத்தியப-படுமா என்றிருந்த காலகட்டத்தில் தமிழீழப் பிரகடனத்தை மேற்கொண்டு அதற்காக பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட திமிழ் இளைஞர்களை கட்டாய இராணுவத்தில் ஈடுபடுத்தி அவர்களின் உயிர்களை பறிகொ-டுத்துவட்டு ஓரிசா-வுக்கு ஓடித்தப்பிய வடகிழக்கு முன்னாள் முதல்வர் வரதராஜப்-பெருமாள் தமிழீழம் சாத்தியப்படும் என்ற ஒரு காலகட்டத்தில் தழிழீழம் சாத்தி-யப்படாது, சந்திரிக்கா அரசினால் தான் தமிழ் மக்களுக்கு தீர்வுகிடைக்குமென்று கூறிக்கொண்டு வர-தரும் சாகாக்களுமாக சந்திரிகாவின் பிரச்-சார பீரங்கிகளாக போஸ்டரும் பசை-வாளிகளுமாக திரிகின்றனர்.

ஐ.தே.கட்சியின் ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பில் தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் உயிரோடு ரயர்-போட்டு எரித்தும் காணாமற் போவ-தற்கும் சூததிர-தாரியாக இருந்த புளொட்மோகனும் சகாக்களும் இன்று அதேஆட்சியாளர்கள் மீண்டும் வர-வேண்டும் என்று-சொல்லி மட்டக்க-ளப்பில் போஸ்டர் ஒட்டித்திரிகின்றனர். போஸ்டர் ஒட்டு-பவர்கள் தாங்கள் செய்தவற்றை மறந்தாலும் இந்த சம்பவங்களால் இனறுவரைக்கும் இரத்தக்கண்ணீர் வடிப்பவர்கள் மறக்கமாட்டார்கள்.

நடைபெறப் போகின்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் மக்கள் எவ்வித அக்கறையும் இன்றி இருக்கின்ற நிலையில் இத்தமிழ்கட்சிகளே செயற்கையான மாயயை தமிழ் மக்களிடம் ஏற்படுத்த முனைகின்றன.

இதன் ஒருகட்ட-மாகவே தமிழ் பகுதி-யில் நடைபெறுகின்ற தேர்தல் பிரச்சா-ரக்கூட்டம் அமைந்து விடுகின்றன. இவற்றில் ஒன்றுதான் அண்-மையில் மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற ஐ.தே.கட்சி பிரச்சாரக் கூட்டமாகும் இக்கூட்-டத்தில் பேசிய ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தனது பேச்சில் தமிழ் மக்களின் பாதுகாப்பும் அவர்களின் சகவாழ்-வுமே தனது குறிக்கோள் என்ற தோரணையில் பேசியிருந்தார். அத்தோடு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தன்து மாவீரர் தின உரையில் தற்போதைய ஜனாதிபதி சந்தி-ரிக்காவை எதிர்க்க வேண்டும் என்று பேசி-யிருந்ததை குறிப்பிட்டு மறுபக்கத்தில் தன்னை ஆதரிக்க வேண்டும் என்பதே புலிகளினது விருப்பமாக இருக்கின்றது என்ற கூற்றினையும் கூறியிருந்தார். தமிழ் மக்களின் வாக்கு-களைப் பெற வேண்டுமானால் தங்களை விடுதலைப்புலிகள் அங்கீகரிக்கின்றது போன்ற தோற்றத்தை மக்களிடம் ஏற்படுத்துவதையே கடந்த காலங்களில் ஏனைய அரசியல் கட்சிகள் செய்து வந்த கற்பனை நாடகத்தின் ஒரு கட்டமாகவே ரணிலின் பேச்சும் அமைந்திருந்தது. அடிப்படையில் தமிழ் மக்களுடைய பிரச்சினை பற்றி எந்த ஒரு அரசியல் அறிக்கையையும் வெளியிடாத ஐ.தே கட்சி தமிழ்ப்-பகுதிகளில் மாத்திரம் தமிழ்மக்களின் பாதுகாப்பு குறித்து வாக்குகளை வழங்குவது இக்கட்சியின் கடந்தகால செயற்பாட்டையே காட்டுகின்றது. ரணில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.தே கட்சிகாலத்திலேயே தமிழ்-மக்களுடைய துயரமான சம்பவங்கள் ஆரம்பமானது.

மறுபக்கத்தில் பொ.ஐ.முன்னணி வேட்பாளரையும் தற்போதைய ஜனாதிபதி சந்திரிக்-காவையும் நோக்கும் போது இவர் தமிழ் மக்களின் பிரச்சிளையை தீர்ப்பதாக கூறி தமிழ்மக்களின் வாக்குகளை பெற்றதன் மூலம் ஜனாதிபதியானவர். ஆனால் தன்னுடைய ஆட்சிக்காலத்திலும் எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கோள்ளாதவரும் அவரேதான்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவருக்கு ஆதரவாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 94 வீதமான வாக்குகள் மட்டக்களப்பில் இருந்து அளிக்கப்பட்டது இலங்கை அரசியல் வரலாற்றில் எந்த ஒரு ஜனாதிபதியும் இத்தகையதொரு வாக்குப் பலத்தை மட்டக்களப்பில் இருந்து பெறவில்லை. ஆனால் இதற்கெல்லாம் கைமாறாகக் கிடைத்தது கொடுமையான சிறைவாழ்க்கையும் அகதிகளாக இடம்பெயர்ந்ததுமே. தமிழ்மக்கள் தமது உறவினர்களையும் நண்பர்களையும் அரசபடையினரிடம் பறிகொடுத்ததும் தான். இவ்வாறான மனவுணர்வு இன்று தமிழ் மக்களிடம் பரவலாகப் பதிந்திருக்கின்றது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இன்றய ஆட்சியா-ளர்களினால் தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடூரங்-களையும் அநியாயங்களையும் மறந்துவிட முடியாதவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர். இதன் காரணமாக சந்திரிக்கா மீதான வெறுப்பும் அதிகமாகவே காணப்படுகின்றது.

விடுதலைப் புலி-களும் ஐ.தே.க வையே ஆதரிக்கின்றது. அவர்களும் மக்களை எங்களுக்குத்தான் வாக்கிடச் சொல்லியிருக்கிறார்கள் என்ற ஐ.தே.கவின் தேர்தல் பிரச்சாரம் தொடர்பாக கிழக்கில் விடுத-லைப்புலிகளின் முக்கிய சில உறுப்பினர்களைச் சந்தித்துக் கேட்ட போது அவர்கள் தேர்தல் தொடர்பாக நாங்கள் உத்தியோக பூர்வமாக அறிக்கைகள் எதுவும் வெளியிடவில்லை. ஆனால் ஆட்சிமாற்றம் என்பதை நாங்களும் விரும்புகின்றோம். அதற்காக ஐ.தே.கவை விரும்புவதென்ற கருத்தல்ல. மக்களை நீங்கள் இந்தக்கட்சிக்குத் தான் போட வேண்டும் இதற்குப் போடக்கூடாது என்றெல்-லாம் நாங்கள் சொல்ல-வில்லை. அது எங்ளுடைய வேலையுமல்ல என்று கூறினார்கள். அதைச் செய்வது மக்கள் தான். அவர்கள் மேலும் குறிப்பி-டுகையில் ஆட்சி மாற்றத்தினால் வரும் இடைக்காலத்தில் ஏதும் மாற்றங்கள் வரலாம். அது புலிகளுக்கும் சாதகமாக அமையலாம். சந்திரி-காவை கலைப்பதற்கு ரணிலை கூட்டுப்பிடிக்க வேண்டிய தேவை எங்களுக்கு இல்லை. இந்த மண்ணில் இரத்தம் சிந்திக்-கொண்டிருப்பது சாதாரண ரணிலுக்கோ சத்தியமூர்த்திக்கோ ஆதரவாக தேர்தலில் வாக்குக் கேட்கவா? அரசியலை புனிதமானது என்று தான் கூறுவார்கள். நாங்கள் அரசியல் தெரியாதவர்கள் அல்ல இவர்கள் சொல்லுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க என்று மேலும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஐ.தே. கட்சியின் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் கருத்து தெரிவிக்கையில் ரணில் தனது பேச்சில் தான் ஆட்சிக்கு வரும் பட்சத்தில் சோதனைச்சாவடிகளையும் அதனால் தமிழ்மக்களுக்கு ஏற்படும் கஸ்டங்களையும் தீர்ப்பதாகக் கூறுகின்றார். ரணிலின் நினைப்பில் தமிழ் மக்களுடைய பிரச்சினை சோதனைச்சாவடிகளில் மக்கள் கஸ்டப்படுத்தப் படுவது என்பது மாத்திரம் தான் என்பது போல் தெரிகிறது. தமிழ்மக்களின் அடிப்படை-யான அரசியல் பிரச்சினையை மறந்து வெறுமனே சில செயற்பாடுகளில் மாற்றத்தை கொண்டு வருவதை மாத்திரம் தனது நோக்கமாக கொண்ட இவரிடமிருந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமென நினைப்பது எம்மை நாமே ஏமாற்றுவதாக இருக்கும் எனக் கூறியதோடு இவர்களுடைய நோக்கமெல்லாம் என்ன செய்தாவது பதவியைப் பிடிக்க வேண்டும் என்பதிலேயே தங்கி இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக மாணவர் ஒருவரை சந்தித்து கேட்ட போது பொ.ஐ.முன்னணியும் ஐ.தே. கட்சியும் தோற்றத்தில் தான் இரண்டு கட்சிகளே தவிர நோக்கத்திலும் செயற்பாடுகளிலும் ஒரே வேலையைத்-தான் செய்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் இரண்டு கட்சிகளும் கொழுக்கட்டையும் மோதகமும் தான். உள்ளுக்குள் இருக்கும் அடப்பம் எல்லாம் ஒன்று தான் என்று குறிப்பிட்டார்.

சித்தாண்டியை சேர்ந்த ஒருபெண் குறிப்பிடுகையில் ஐ.தே.கட்சி காலத்தில் எனது கணவனையும் உறவினர்கள் ஒன்பது பேரையும் பறிகொடுத்தேன். இதற்கான நஷ்ட ஈடாவது சந்திரிக்காவின் ஆட்சியிலாவது கிடைக்குமென எதிர் பார்த்தேன் அதுகூட இன்னமும் கிடைக்கவில்லை. மேலும் மேலும் எனது உறவினர்களை பறிகொடுத்துக் கொண்டு தான் இருக்கின்றேன். இந்த நிலையில் நாங்கள் எந்தக் கட்சிகளையும் நம்பத் தயாரில்லை.

நிலமை இவ்-வாறிருக்கின்ற போது இத்தேர்தலை பகிஸ்கரிக்கும்படியும் தேர்தலில் ஒவ்வொருவரும் வாக்குச் சீட்டுக்களை செல்லுபடியற்றதாக்குமாறு கோரியும் மட்டக்களப்பில் சுதந்திர மாணவர் முன்னணி துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. இப்பிரசுரத்தில் ஐ.தே.க, பொ.ஐ.மு என்பனவற்றின் கடந்த காலச்செயற்பாடுகள் பற்றியும் விபரிக்கப்பட்டிருந்தன.

மக்களிடம் இத்துண்டுப்பிரசுரம் பற்றி கருத்து அறிய முற்பட்டபோது இப்பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கின்ற நிலையையே தாங்களும் விரும்புவதாக தெரிவித்தனர். ஆனாலும் இவிரு கடசிகள் சார்பாக மட்டக்களப்பில் இருந்து செயற்படுகின்ற கட்சிக-ளும், பிரமுகர்களும் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்து மக்களை கவர அரும்பாடுபடுகின்றன. எல்லாவிதத்திலும் கஸ்டப் பட்டுப் போயிருக்கின்ற மக்கள் இத்தந்திரங்களில் பலியாகிப் போவார்-களோ என்பதும் கேள்விக்குறியாக இருக்கின்றது. ஆனாலும் இவை எல்லாவற்றையும் மீறி தமிழ் மக்களிடையே சிங்களப் பேரினவாத கட்சிகள் தொடர்பான தெளிவான சிந்தனை ஏற்பட்டிருப்பதையும் அறிய முடிகின்றது. இச்சிந்தனை அரசியல் ரீதியாக வளர்த்தெடுக்-கப்படுமேயானால் மாபெரும் மக்கள் சக்தியாக உருவாக முடியும் என ஒருவர் கருத்து தெரிவித்ததையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

இவ்வாறாக தேர்தல் வாக்குறுதிகள் மட்டக்களப்பில் கொடிகட்டிப்பறகின்ற இந்தவேளையில் தமிழ்பகுதிகளில் சொல்லப்படுகின்ற இந்தவிடயங்கள் தென்னிலங்கை சிங்கள மக்களுக்கும் சொல்லப்படுகின்றனவா? அந்த மக்களும் தமிழ் மக்களுக்கு சொல்லப்படுகினற விடயங்களை ஏற்றுக் கொள்கின்றனரா என்பது தான் தமிழ்மக்களுக்கு புரியாத ஒருவிடயமாக இருக்கின்றது. □

நன்றி - நூலகத்திட்டம்



யாழ்ப்பாணத்தின்
சமூக அமைப்பிறுக்கத்தைத் தொடர்ந்து
நாம் பேச வேண்டுமா என்று கேட்கக்
கூடிய அளவுக்கு நெகிழ்ச்சி
ஏற்பட்டுள்ளது உண்மையே.
ஆனால், இந்த நெகிழ்ச்சி திடீரென
ஏற்பட்ட ஒன்றல்ல. இதற்காகப் பல
போராட்டங்கள் நடத்தப் பெற்றன.
கொலைகள்
திட்டமிடப்பட்டன.
கொலைகள் நிகழ்ந்தன. இயக்கங்கள்
நடத்தப்பெற்றன. நிறுவனங்கள்
தோற்றுவிக்கப்பட்டன.

தமிழரின்
ஒற்றுமை நிலையியற் போராட்டம்
நடை பெறும் இன்றைய
காலகட்டத் தில் இந்த
ஒருமை நிலை உருவாவதற்குக்
காலாக, பசளையாக இருந்தவர்களை
நினைவு படுத்திக் கொள்ளல் அவசியம்.

யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சியில்
சமமான சமூக வாய்ப்புகள் இருத்தல்
வேண்டுமென்ற போராட்டத்தில்
முருகேசு உபாத்தியாயரின் பெயர்
முக்கியமானது.

இதுவரை எழுதப்படாத வரலாறுகள்
இனியாவது எழுதப்படட்டும்
போற்றப்படட்டும்.
கா.சிவத்தம்பி
முருகேசு ஆசிரியர், பவள விழா மலர்

நவம்பர் 26ம் திகதி தனது
தொண்ணூறாவது வயதைக்
கடந்திருக்கிறார்
அல்வாய் வடக்கைச் சேர்ந்த
முருகேசு உபாத்தியாயர்.
தனது வாழ்க்கையையே
பஞ்சமர்களின் விடுதலைக்காக
அர்ப்பணித்த
முருகேசு உபாத்தியாயர் மிகவும் எளிய
வாழ்க்கையையே வாழ்ந்து வருகிறார்.
நாம் சென்ற போது தனது குடிசைத்
திண்ணையில் சாதாரண வேட்டியுடன்
இருந்து கோழிகளுக்கும் தீனி போட்டுக்
கொண்டு காலை உணவருந்திக்
கொண்டிருந்தார். பஞ்சம மக்களுக்கு
பாடசாலை கட்டுவதற்காக தனது
காணிவீடு எல்லாவற்றையும் விற்று
விட்டு இப்போது ஓலைக் குடிசையில்
வாழ்ந்து வருகிறார்.

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம்,
புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்
என்பவற்றின் ஸ்தாபகரான முருகேசு
உபாத்தியாயர் அகில இலங்கைச்
சிறுபான்மைத் தமிழர் மகாசபையின்
உப தலைவராகவும், சைவ ஹரிசன
வாலிபர் சங்கம், வடமராட்சி சமூக
சேவா சங்கம், மக்கள் முன்னேற்ற
மன்றம், சமூக புனருத்தாரண ஐக்கிய
சங்கம், காந்தீய சேவா சங்கம், சைவ
சமய சமரச சங்கம் போன்றவற்றின்
மூலமாகவும் பெரும்
சமூகத் தொண்டாற்றியுள்ளார்.

முருகேசு உபாத்தியாயர் ஒரு
பத்திரிகையாளர் என்பதும்
குறிப்பிடத்தக்கது. யாழ் வைத்தியர்
முருகேசு நடத்தி வந்த தூதன்
பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை
ஏற்றுக் கொண்ட
முருகேசு உபாத்தியாயர் சிறிது காலம்
ஆசிரியராயிருந்து தூதன்
பத்திரிகையை நடத்தினார். தூதன்
பத்திரிகையில் தான் டானியலின் முதல்
படைப்பு பிரசுரமானது.

அல்வாயில் உள்ள அவரது
இல்லத்தில் அவரைச் சந்தித்து
உரையாடியதிலிருந்து சில பகுதிகள்.

# காணியை விற்றுப் பாடசாலையைக் கட்டினேன்!

**-முருகேசு உபாத்தியாயர்.**

**நீங்கள் எங்கு கல்வி கற்றீர்கள்?**

நான் இன்பருட்டி வெஸ்லியன் மிஷன் பாடசாலையில் எட்டாம் வகுப்பு வரை படித்தேன். நிலத்தில் தான் எழுதிப் படிப்போம். ஆறாம் வகுப்புக்கு மேல் பனை ஓலையில் எழுத்தாணியால் எழுதிப் படிப்போம். வெஸ்லியன் மிஷன் பாடசாலை கிறிஸ்தவப் பாடசாலையாக இருந்தாலும் அங்கும் எமக்கு சம அந்தஸ்து கிடையாது. உயர் சாதியினர் கதிரை மேசையில் அமர்ந்து படிப்பார்கள். நாங்கள் நிலத்தில் அமர்ந்து படிப்போம்.

**சரி. ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் நீங்கள் எவ்வாறு நடத்தப்பட்டீர்கள்?**

ஆரம்பத்தில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் எமக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. பின்னர் தெல்லிப்பழையைச் சேர்ந்த சாமுவேல் யோவேல் போல் என்பவர் (அவரும் ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்) அரசாங்கத்துடன் வாதாடி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி பெற்றுத் தந்தார். 1929ம் ஆண்டு என்னையும் சேர்த்து 80 மாணவர்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். இதனைக் கேள்விப்பட்ட உயர் சாதியினர் இராமநாதனிடம் சென்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இடம் அளிக்கக் கூடாது என முறையிட்டனர். இராமநாதனும் மகாதேசாதிபதியுடன் கதைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இடம் அளிக்கக் கூடாது என வாதாடினார். எனினும், மகா தேசாதிபதி அதற்குச் சம்மதிக்கவில்லை. இராமநாதன் அப்போது ஸ்டேட் கவுன்சில் உறுப்பினராயிருந்தார்.



ஸ்டேட் கவுன்சில் உறுப்பினர் தான் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு நிதி ஒதுக்கீடு செய்வது வழக்கம். நான் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றபோது இருபாலைச் சந்தியில் வைத்து கோப்பாய்ச் சாமிநாதன் என்பவர் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றவர்களைத் திருப்பியனுப்பிக் கொண்டிருந்தார். நான் எனது தந்தையாருடன் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றேன். அவர்கள் எங்களையும் மறித்தார்கள். எனினும், நாங்கள் அவர்களைப் பொருட்படுத்தாமல் சென்று நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினோம். நான் நாற்பத்து மூன்றாவது மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டேன். உடனே இராமநாதன் நிதி இல்லை எனக் கூறி அவ்வாண்டுக்கான அனுமதியை ஐம்பது வீதமாகக் குறைக்குமாறு உத்தரவிட்டார். அந்த ஆண்டு இதன் காரணமாக 39 உயர் சாதி மாணவர்களும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்தனர். பின்னர் நான் தெல்லிப்பழை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் எனது பயிற்சியைத் தொடர்ந்தேன். அங்கும் நாங்கள் ஏனைய மாணவர்களுடன் சமமாக உட்கார்ந்து சாப்பிட முடியாது. தனி அறை தான் வழங்கப்பட்டது. திருநீறு பூச முடியாது. எனினும், நாங்கள் இரகசியமாக திருநீறு பூசுவோம்.

**உங்களுக்கு பாடசாலை கட்டும் நோக்கம் ஏற்பட்டதன் காரணம் என்ன?**

அப்போது எமது சமூகத்தைச் சார்ந்த சூரன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட தேவரையாளி இந்துக்கல்லூரியில் மட்டும் தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வந்தது. (அப்போது தேவரையாளி சைவப் பாடசாலை என்ற பெயரில் இது இயங்கி வந்தது.)

இலங்கையில் தாழ்த்தப்பட்ட மக்களின் வரலாறு எழுதுவோர் சூரனைப் புறக்கணித்துவிட்டு எழுத முடியாது. தேவரையாளி இந்துக்கல்லூரி எமது கிராமத்திலிருந்து சுமார் ஒன்றரை இரண்டு மைல் தூரத்திலிருந்தது. இதனால் ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்குப் பெற்றோர் பெரிதும் சிரமப்பட்டனர். எனவே நான் எமது கிராமத்திலேயே ஒரு பாடசாலை கட்டுவதற்குத் தீர்மானித்தேன்.

**பாடசாலைக் கட்டுவதற்கான நிதியை எப்படித் திரட்டினீர்கள்?**

கிராம மக்களிடம் தான் திரட்டிக் கட்டினோம். எமது மக்கள் மிகவும் வறிய மக்கள். தங்களிடம் இருந்ததைத் தந்தார்கள். மிகுதிக்கு எனது பருத்தித்துறைக் காணியை விற்க வேண்டியேற்பட்டது. அத்துடன் எனக்கு நூறு ரூபா சம்பளம் கிடைக்கும். அந்தப் பணமும் பாடசாலை கட்டுவதற்குத் தான் செலவழிக்கப்பட்டது. அல்வாயில் பாடசாலை கட்டி முடிக்கப்பட்டதும், புத்தூரில் உள்ள சிறுபான்மை மக்களும் தமக்கும் ஒரு பாடசாலை கட்டித் தர வேண்டும் என்றனர். புத்தூர் பாடசாலை கட்டும் பொறுப்பை இந்து மகாசபை (இந்து போர்ட்) என்னிடம் ஒப்படைத்தது.

**இந்துப் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறதே?**

அவர்கள் சாதிக் கோட்பாடுகளைக் கடைபிடித்து வந்தாலும் சமயம் மாறுவதை அனுமதிக்கவில்லை.

**புத்தூரில் பாடசாலை கட்டும் போது உங்களுக்கு எதிர்ப்புகள் ஏதும் வரவில்லையா?**

வந்தது. புத்தூர் மழவராயரின் ஆட்களல்லவா பாடசாலை கட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். நாம் எமது காணிக்குள் பாடசாலை கட்டியபடியால் அவர்களால் ஏதும் செய்ய முடியவில்லை. புத்தூர் பகுதி மக்கள் கல்வியறிவு குறைந்தவர்கள். அவர்களுக்கு உயர் சாதியினர் தெய்வம் மாதிரி. உயர் சாதியினரின் வாக்கு வேதவாக்கு மாதிரி.

**நீங்கள் கிராம சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட போது என்ன நடந்தது?**

நான் கிராம சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு கிராம சபைக்குச் சென்றபோது, வேளாளர் என்னைத் தாக்க முற்பட்டனர். நான் எனது ஆதரவாளர்கள் புடை சூழச் சென்றபடியால் அவர்களால் ஏதுவும் செய்ய முடியவில்லை. இரண்டு தடவைகள் நான் கிராம சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டேன். மூன்றாவது தடவை இடதுசாரிகள் கணேசன் என்ற எனது உறவினரை எனக்கு எதிராகத் தேர்தலில் நிறுத்தினர். இதனால் தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகள் இரண்டாகப் பிளவுபட்டன. இதன் காரணமாக உயர் சாதியினர் ஒருவர் தேர்தலில் வெற்றி பெற முடிந்தது.

**தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தவர்கள் என்ற வகையில் டானியல். எம்.சி. சுப்பிரமணியம் போன்றோர் பேசப்படுகிற அளவுக்கு உங்களது பெயர் பிரபல மாகாமைக்குக் காரணம் என்ன?**

நாங்கள் அமைதி யான சாத்வீகமான வழியில் எந்தப் பிரச்சினையையும் அணுகுபவர்கள். பேச்சுவார்த்தை மூலம் எதையும் தீர்த்துக் கொள்ளலாம் என்பது எனது நிலைப்பாடு. டானியல், எம்.சி. போன்றோர் தீவிரவாதப் போக்கைக் கடைப்பிடித்து வந்தனர். புரட்சியாளர்களாகத் தம்மைக் காட்டிக் கொண்டவர்கள். இதனால் தான் சிறுபான்மைத் தமிழர் மகா சபைக்குள்ளும் பிளவு ஏற்பட்டது. நான் சாதியை முதன்மைப்படுத்தி எந்த இடத்திலும் கதைத்தது கிடையாது. நாங்கள் தான் முதன் முதலில் ஆலயப் பிரவேசம் மேற்கொண்டோம். 09-07-56 அன்று நானும் ஏ.எம்.செல்லத்துரை, கவிஞர் செல்லையா, சைவப் புலவர் வல்லிபுரம், நல்லைய்யா ஆகியோரும் மிக அமைதியான முறையில் தேவாரம் பாடிக் கொண்டு நல்லூர் வீதியை வலம் வந்தோம். இதே போல் தேநீர்க் கடைப் பிரவேசம் செய்த போதும் தேநீர்க் கடை முதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களது பரிபூரண ஆதரவுடன் தேநீர்க் கடைப் பிரவேசம் செய்தோம். நாம் சமாதான வழியில் போனபடியால் எமக்கு உயர் சாதியினரின் ஆதரவும் இருந்தது. பொலிஸ் எத்தனை நாளைக்குப் பாதுகாப்பு தர முடியும். நான் சமாதான வழியில் போனபடியால் நான் வேளாளன் போல நடிக்க முயல்வதாக என மீது டானியல் போன்றோர் குற்றம் சுமத்தினார்கள். உயர் சாதியினருக்கு எமது பிரச்சினைகளை உணர்த்தி அதன் மூலம் ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்தவே நாம் விரும்பினோம். ஏனென்றால், நாம் அவர்களுடன் தான் வாழப் போகிறோம். எம்மை ஆலயத்தினுள் செல்ல அனுமதிக்கவில்லை என்பதற்காக ஆலய தேருக்கு நெருப்பு வைப்பதை நியாயப்படுத்த முடியாது. இதனால் தான் நான் மாவிட்டபுர ஆலயப் பிரவேசத்தில் கலந்து கொள்ளவில்லை. எனது பேத்தி ஒரு சமயம் டானியலிடம் கேட்டாள் உங்களுக்கு இந்தச் சாதியை விட்டால் வேறொன்றும் கிடையாதா எழுதுவதற்கு என்று . எம்.சி. பிற்காலத்தில் பிராமண மற்றும் உயர் குல இளைஞர்களுக்குக் கூட அவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறி ஆசிரிய நியமனம் பெற்றுக் கொடுத்ததாக பலர் என்னிடம் முறையிட்டிருக்கிறார்கள்.

**உங்கள் கிராமத்தில் பௌத்த பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டதாகவும். அந்தப் பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்ல விரும்பிய மாணவர்களுக்கு நீங்கள் பாடசாலை விடுகைப் பத்திரம் வழங்கவில்லையெனவும் கூறப்படுகிறதே?**

ஆம். எமது கிராமத்தில் பௌத்த பாடசாலை ஒன்று நிறுவப்பட்டது. நான் எனது பாடசாலையிலிருந்து பௌத்த பாடசாலைக்கு மாறிச் செல்ல விரும்பிய மாணவர்களுக்கு பாடசாலை விடுகைப் பத்திரம் வழங்கவில்லை. இதனால் நான் கல்வி அதிகாரிகளின் பலத்த எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிட்டதுடன் பின்னர் எனக்கு சேவை நீடிப்புக் கூட வழங்கப்படவில்லை.

**தமிழர்களுக்கென தனிநாடு ஒன்று உருவானால் மீண்டும் சாதி ஒடுக்குமுறை தலை தூக்கும் எனச் சிலர் கூறுகிறார்களே. இது பற்றி....**

ஒரு போதும் இல்லை. அது முன்பு ஒரு காலத்தில் இருந்தது. இப்போது எல்லாம் அழிந்து விட்டது. எனது பேரனுக்குக் கூட முன்பு இப்படியெல்லாம் நடந்தது என்று சொன்னால் நம்ப மாட்டான்.

*சந்தித்து உரையபடியவர்*

**-பரமேஸ்வரன்**

நன்றி - நூலகத்திட்டம்



# வெசா ஆக்கரீதியாக 'வெசாஎ' யைப் பாவிக்க வேண்டும்

'வெசாஎ' (வெங்கட் சாமிநாதன் எழுதுகிறார்) என்ற தலைப்பில் வெங்கடசாமிநாதனின் எழுத்துக்களை மட்டுமே வெளிக் கொணர்வதற்குரிய நோக்கோடு, அவரின் சிந்தனைத் தளமாக இது வெளிவருகிறது. இது பற்றி 'வெசாஎ' இதழின் நிர்வாகி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"இது தனி ஒரு எழுத்துக் கலைஞனின் வெளியீட்டுத்தளம். ஒரு எழுத்தாளனின் கடிதம் ஒரு முழு பத்திரிகை இதழில் வெளிவரும் புதுமையும், எளிமையும், ஆழமும் இதன் சிறப்பு. வெங்கட் சாமிநாதன் தமது முழுப் பயனாக தமது படைப்புகளை -டுமே வெளியிட இத்தளம் அரங்காகிறது. அவரது எழுத்தும் விமர்சனமும் அவர் இனங்காட்டுகிற புதிய, பழைய எழுத்துப் படைப்புகளும், பிறரது படைப்புகளில் வெ.சா தேர்ந்தெடுக்கிற படைப்புகளும் 'வெசாஎ'-யில் இடம் பெறும். இப்படி ஒரு தனி எழுத்தாளருக்காக முழுமையும் வெளிவருவது எம்மொழி இலக்கியத்திலும் புதுமையே. ஒவ்வொரு இதழும் ஒரு கடித வடிவில் வெங்கட் சாமிநாதன் எழுதுவார் என்பதனை முக்கியத்துவப்படுத்தும் இதழாக 'வெசாஎ' இருக்கும். உங்கள் எண்ணங்களையும் கேள்விகளையும் அவருக்கு அனுப்பவும். பதிலாக அவர் தன்னைப் பிரதிபலிக்கும் மேடையாகவும் 'வெசாஎ' இருக்கும்" என்று கூறும் அவர், இப்படி ஒரு இதழ் 'வெசாஎ'வுக்காக ஏன் வெளியிட நேர்ந்தது என்பது பற்றி பின்வருமாறு விளக்குகிறார்.


"தெளிவின்மையும் பொய்யுரு புனை சுருட்டும் தாண்டவமாடும் நமது இலக்கிய உலகில், தமது எண்ணத்தை சரியாகச் சொல்ல தனியொரு சிந்தனையாளனும், இடமின்றிப்போய் விடுவதைத் தவிர்க்கவே 'வெசாஎ' வெளிவருகிறது... நண்பர்கள் சேர்ந்து பதினைந்து வருடமாய் தமிழ் இலக்கிய உலகில் தூரமாகிப் போன வெங்கட்சாமிநாதன் அவர்களை மீண்டும் அழைத்து வரவே 'வெசாஎ' என்னும் இவ்விதழ் தொடங்குகிறது."

பதினைந்து வருடகாலம் ஏன் வெசா அவர்கள் இலக்கிய உலகை விட்டுத் தூரம் போயிருந்தார்? அவரைத் தூரப் போக வைத்தவை என்ன?

இச்சந்தர்ப்பத்தில் வெ.சா பற்றிய எனது மன அனுபவ பதிவுகளை இங்கு வைப்பது அவர் பற்றிய முழுமையான சில அவதானிப்புகளுக்கு உதவலாம் என நினைக்கிறேன்.

1962ல் மு.தளையசிங்கம் 'கலைச்செல்வியில்', 'முற்போக்கு இலக்கியம்' பற்றி எழுதிக் கொண்டிருந்த போது அதைப் பாராட்டி வெ.சா. ஒரு கடிதம் போட்டிருந்தார். கூடவே அக்கடிதத்தில் 'முற்போக்கு கூட்டத்தாரை எதிர்த்து உங்களால் தனித்து நிற்க முடியுமா?' என்றும் கேட்டிருந்தார். அதன் பின்னர் மு.தவுக்கும் இவருக்கும் இடையில் கடிதப் பரிமாறல்கள் நிகழ்ந்தன. (இக்காலத்தில் தருமு சிவராமுவும், முத.வோடு கடிதத் தொடர்பு கொண்டிருந்தார்.)

இவர் எழுதி கடிதங்களில் இருந்தும், இவரது ஆரம்ப கால எழுத்துக்களில் இருந்தும் இவர்பால் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது. இவரைப் பற்றி அப்போது நான் இப்படித்



தான் நினைத்தேன்.

'இவரும் மு.தவைப் போலவே அங்குள்ள (தமிழ்நாட்டில்) மார்க்சீயவாதிகளின் வரட்டுத்தனமான கோஷங்களுக்கும் அறியாமைகளுக்கும் எதிராகக் குரல்கொடுக்கும் நேர்மையான ஆத்மசுத்தியுள்ள எழுத்தாளன்'.

இதற்கிடையில் மு.தவுடன் தொடர்புகொண்டிருந்த தருமு சிவராமு, 'உன்னுடைய பெயரை இப்படி எழுதக் கூடாது' என்று சாத்திர ரீதியாக அட்வைஸ் பண்ணியபோது, 'நான் சாத்திரங்களில் நம்பிக்கை வைப்பவனல்ல என் ஆற்றலில் தான் எனக்கு நம்பிக்கை' என்று சிறிது காட்டமாக அவர் பதில் அளித்ததோடு தருமு தனது தொடர்பை நிறுத்திக் கொண்டார்.

மு.த போர்ப்பறை வெளியிட்டார். பூரணி இதழை ஆரம்பித்து வைத்தார். இதற்குள் இறந்தும் போனார். 'மெய்யுள்' வெளிவந்தது.

இப்போதும் வெ.சா. எம்மோடு தொடர்பு கொண்டு தான் இருந்தார். அவரது 'இலக்கிய ஊழலை'ப் பார்த்தேன். அது இலக்கிய விபசாரம் செய்யும் அயோக்கிய எழுத்தாளர்களுக்கெதிரான போர்க்கொடிபோலவே பட்டது. அதை நான் பூரணி -7ல் விமர்சனம் செய்தேன்.

இக்காலகட்டத்தில் பூரணி ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்கள் இவரை மு.தவின் போர்ப்பறை, மெய்யுள் ஆகியவற்றை விமர்சிக்கும்படி கேட்டிருந்தனர். அதைத் தான் செய்வதாகவும் வெ.சா. கூறியிருந்தார்.

'பூரணி' - 8வது இதழ் வெளி வந்தது. அக்காலத்தில் இவர் எழுதிய 'மார்க்சின் கல்லறையிலிருந்து ஒரு குரல்' ஐ எமக்கு அனுப்பி வைத்தார். அதைப் 'பூரணி' மறுபிரசுரம் செய்தது.

இச்சந்தர்ப்பத்தில் தருமு சிவராமுவுக்கும், வெ.சாவுக்கும் இடையே பெரிய ஐக்கியம் ஏற்பட்டிருந்தது. தருமு சிவராமுவும், பூரணியோடு தொடர்பு கொண்டிருந்தார். தருமு பூரணிக்கு எழுதிய கடிதத்தில் Julian Huxly எதை எழுதினார் Aldous Huxly எதை எழுதினார் என்பவை தெரியாமல் தடுமாறியதை அவருக்குச் சுட்டிக் காட்டிய போது (இதை நானே பூரணி ஆசிரியர் குழு ஊடாகச் செய்தேன்) அஞ்சலட்டையில் ஒரு பாட்டம் வசைபாடிவிட்டு தொடர்பை நிறுத்திக் கொண்டார்.

தருமு சிவராமுவோடு வெ.சாவுக்கு ஏற்பட்டிருந்த அந்நியோன்னியத்தைக் கண்டு, தருமு சிவராமுவின் போக்குப் பற்றி அறிந்திருந்த நான் வெ.சாவுக்கு பூரணி ஆசிரியர் குழு ஊடாக தருமு சிவராமுவின் நம்பகத்தன்மை பற்றி எச்சரித்தேன். (நான் ஒரு போதும் வெ.சாவுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டதில்லை.) இது நடந்து சில வருடங்களுக்குப் பின்னர், தருமு சிவராமுவின் கவிதைத்தொகுதி வெளிவருகிறது. அது 'கண்ணாடியுள்ளிருந்து' என்ற தொகுதியென நினைக்கிறேன். அதற்கு வெ.சா. நீண்ட முன்னுரை எழுதியிருந்தார். அதை வாசித்த எம் நண்பர்கள், 'மு.த போர்ப்பறைக்கு எழுதிய முன்னுரை மாதிரி வெ.சா. தருமுவுக்கு எழுதியிருக்கிறாரே!' என்றனர். அதில் வெ.சா. ஆதர் சி கிளார்க், விண்வெளி யாத்திரை, Grand Tour என்று போர்ப்பறையில் பேசப்பட்ட விஷயங்கள் எல்லாம் சொல்லப் பட்டிருந்தன. இத்தனைக்கும் வெ.சா. மு.த. பற்றி அதில் பிரஸ்தாபிக்கவோ - அல்லது அவர் எழுத்துக்கள் பற்றி வேறிடத்தில் அதுவரைக்கும் எந்த விமர்சனமும் செய்யவில்லை. ஆனால், அவர் செய்யாதுவிட்ட பணியை மு.த பற்றி முன்பின் கேள்விப்படாத சு.ரா செய்தார்!

இதற்கிடையில் தருமு சிவராமுவுக்கும் வெ.சாவுக்கும் இடையே நான் கூறியதுபோல் விரிசல் ஏற்பட்டது. .

அதைத் தொடர்ந்து கசடதபற, அஃ, யாத்ரா என்று தமிழ்நாட்டில் எழுந்த சிற்றிலக்கிய சஞ்சிகைகளின் போட்டா போட்டிச் சூழலுக்குள் அகப்பட்டு வீசப்பட்டார். பின்னர் அவர் பற்றி அடிபட்ட கதைகள் - சில எழுத்தாளர்களின் நேர்காணல் ஊடாக - தெரியவந்த கதைகள் எல்லாம் சேர்ந்து அவர் என்முன்னே சிறுத்துப்போய் நின்றார்! பின்னர் அவர் எழுத்துக்களைப் படிக்கவே முடியாத நிலை ஏற்பட்டது.


எப்படி தருமு சிவராமு சிறு சிறு இலக்கிய ஆர்வலர்களைக் கொண்டு தன்னைப் பற்றி எழுதுவித்து தான் பெரிய ஒரு மகானாக காட்ட முயன்றாரோ அவ்வாறே வெ.சாவும் இன்னொரு பக்கம் செய்ய முனைந்தாரா?

இப்போ நீண்ட நாட்களுக்குப் பின் 'வெ.சா.எ' என்னும் சஞ்சிகை மூலம் இரண்டாம் முறையாக இலக்கியக் களம் புகும் வெ.சா. தன் திறமையை ஆக்கரீதியாக தன் ஆணவத்திற்கு தீனிபோடுவதற்காகப் பாவிக்காமல் ஆத்ம சுத்தியோடு பாவிக்க வேண்டும் என்பதே என் பணிவான வேண்டுகோள். இதை அவர் செய்வாரா?

-மு.பொ.

# காஷ்மீரின் தொடரும் துயரம்!

நூல்: காஷ்மீரின் தொடரும் துயரம்
தமிழாக்கம்: வெ.கோவிந்தசாமி
வெளியீடு: விடியல் பதிப்பகம்
3, மாரியம்மன் கோயில் வீதி,
உப்பிலிப்பாளையம்,
கோயம்புத்தூர் - 641015
விலை: ரூ.65/-
பக்கங்கள்: 200




புனைவுகளின் திசை திருப்பலை அறிய வைக்கும் அறிக்கை.

அண்மையில் இடம்பெற்ற கார்கில் போரை அடுத்துக் காஷ்மீர் உலக அரங்கில் ஒரு விவாதப் பொருளாகிவிட்டது. காஷ்மீரையும் கார்கிலையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு தேசிய வெறியை இந்திய அளவில் கட்டமைத்துக் கொண்டது. நடந்து முடிந்த தேர்தலில் இந்த தேசியவெறி பிரதான பாத்திரம் வகித்துள்ளது. பா.ஜ.க. ஆட்சியைத் தக்கவைப்பதில் கார்கில் முக்கிய பங்கு ஆற்றியுள்ளது.

ஆனால், காஷ்மீரப் போரின் அடிப்படைகளை விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் யாரும் குறிப்பிடும்படியான 'தேசிய'க்கடமையைச் செய்யவில்லை. உணர்ச்சி மிகுந்த தேசியவெறி எங்கும் தட்டி முட்டப்பட்டளவிற்கு காஷ்மீர் விவகாரம் குறித்த தெளிந்த பார்வைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்த யாவரும் தயங்குகின்றனர்.

இந்நிலையில் 'காஷ்மீரின் தொடரும் துயரம்' எனும் புத்தகத்தை 'விடியல் பதிப்பகம் - கோவை' காலத்தேவை கருதி வெளியிட்டுள்ளது. தமிழில் எண்பதுகளின் பின்னர் தமிழச் சிந்தனையிலும் படைப்புத் தளத்திலும் 'உருப்படியான' சில நூல்களை வெளியிட்டு வருவதன் மூலம் தமிழ்ச் சிந்தனையைப் புதிய நோக்கில் திசை திருப்பி வருகிறது.

'காஷ்மீரின் தொடரும் துயரம்' என்னும் புத்தகம் ஒரு உண்மை அறியும் குழு வெளியிட்டுள்ள முக்கியமான அறிக்கை. இதனைத் தமிழில் வெளியிடுவதன் மூலம் காஷ்மீர் போரின் அடிப்படையான சில கூறுகளை விளங்கிக் கொள்ளத்தக்கதாக அமையும்.

காஷ்மீரில் இந்திய இராணுவம் நிகழ்த்தி வரும் மனித உரிமைகள் மீறல் குறித்து விசாரிக்க இந்தியாவின் எட்டு மாநிலங்களைச் சேர்ந்த பதின்மூன்று குடியுரிமை, ஜனநாயக உரிமை இயக்கங்களின் கூட்டமைப்பு காஷ்மீருக்கு ஒரு உண்மை அறியும் குழுவை (1995 ஜூலை 30 ஓகஸ்ட் 7) அனுப்பியிருந்தது. அக்குழு வெளியிட்ட அறிக்கையின் தமிழாக்கமே இந்நூல். இதனை வெ. கோவிந்தசாமி வெறும் மொழிபெயர்ப்பாக மட்டுமல்லாமல், தமிழாக்கமாகவும் தந்துள்ளார்.

அத்துடன் இந்நூலிற்கு அ.மார்க்ஸ் ஒரு விரிவான தொகுப்புரையைத் தந்துள்ளார். நூலிற்கு இது சிறப்புச் சேர்ப்பதோடு இத்துறை சார்ந்த நோக்கில் இந்நூல் முக்கிய கவனத்திற்குரியதாகவும், மாறியுள்ளது. விரிவாக விவாதிக்கப்பட வேண்டிய பல்வேறு சிந்தனைகளை அ.மார்க்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நூல் தமிழுக்குப் புதிய வரவு மட்டுமல்ல சில முக்கிய சிந்தனைகளை நோக்கி நம்மை கவனம் கொள்ளவும் வைக்கிறது. நாம் எத்தகைய புனைவுகளில் மீண்டும் மீண்டும் திசை திருப்பப்படுகிறோம் எனும் எச்சரிக்கையையும் நமக்கு இந்நூல் சுட்டிக்காட்டுகிறது.

இதுபோன்ற நூல்களை வெளியிடும் விடியல் தமிழுக்குப் புதிய வளங்களைக் கொண்டு சேர்க்கிறது. விடியலில் முயற்சிகள் இன்னும் தொடர வேண்டும். ஏனெனில், தொடரும் துயரம் காஷ்மீர் மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ.....

தெ. மதுசூதனன்

நன்றி: ஆறாம் திணை



## காற்றில்லாமல் வாழ்தல்


குலை நடுங்கும் செய்திகளைக்
கொண்டு வரும் காற்று
சொந்த மொழி வாய்திறக்க
தெருக்கண்ணில் தீப்பிழம்பு
காவியுடை கனல் கக்கும்
காலைத் தினசரிகள்
தெருவெல்லாம் வலையமைப்பு
தருவதெல்லாம் அவமதிப்பு
பொதுப்பணியில் அதிகாரி
போடுவது வால் துண்டு
வாய் திறந்தால் வாய்திறக்க
விழித்திருக்கும் சுடுகலன்கள்
முற்றமெல்லாம் முட்கள்
சுற்றமெல்லாம் கற்கள்
கால் பெயர்க்கும் ஒரு வேளை
ஆள் பெயர்க்கும் சில வேளை

-அஷ்ரஃப் சிஹாப்தீன்

நன்றி - நூலகத்திட்டம்



# குரங்குகளின் ராஜ்ஜியத்தில்



நேரம் இரவு 11.40, வெள்ளை நிறம் பூசப்பட்ட ஜன்னல் குறுக்குக் கம்பிகளினூடாகத் தூரத்திலே தெரிந்த கேள்ஸ் ஹொஸ்டலைப் பார்க்கிறேன். இன்னும், கொஞ்ச அறைகளில் விளக்குகள் எரிந்துகொண்டிருப்பது தெரிகிறது. நிறையப்பேர் தூங்க, கொஞ்சப் பேர் விழித்திருந்து படிக்கிறார்கள் போல. எப்போதும் வாழ்க்கையில் நிறையப்பேர் நிறைய நேரங்களில் தூங்கிக் கொண்டே தான் இருக்கிறார்கள். விழித்திருக்கும் நிறையப் பேர்களின் பகுத்தறிவுக் கண்களும், ஞானக் கண்களும் மூடி சுயநினைவுகளுடன் கண்கள் திறக்க விழிப்பிலேயே நடமாட்டங்களுடன் இன்னும் தூங்கிக் கொண்டு தான் இருக்கிறார்கள். என் அறைக்கு 20 அடி முன்னாலிருந்த கறுத்த வீதியின் மெர்க்கூரி விளக்கைப் பார்க்கிறேன். இன்னும் அது எரியவில்லை. பற்றிப் பற்றி எரிந்து, அணைந்து கொண்டே இருந்தது. மீண்டும் எரியும் என்ற நம்பிக்கை மேலோங்க, எரிய முற்சித்து, எரிந்து அணைந்து கொண்டிருந்தது. இன்னும் எரியவில்லை. இன்று மட்டுமா எரியவில்லை?. நெடுங்காலமாகவே எரியவில்லை. எப்போது எரியுமோ?. எப்போது இருள் போகுமோ?. எப்போது விடிவு கிடைக்குமோ? மேசை மேல் கிடந்த அந்தக் குளக்கரை ஆங்கிலப் பத்திரிகையைப் பார்க்கிறேன்.

தேர்தல் !, தேர்தல் ! இன்னும் கொஞ்ச நாளையில், கடைசி வருடத்தின் கடைசி மாதத்தின், கடைசி வாரத்தில் தேர்தல் வருகிறதாம். மணலைக் கயிறாய்த் திரித்து, வானத்தை வில்லாய் வளைத்து, வானவில்லில் சாயம் போட்டு, நடந்து சந்தைக்குப்போகும் உரித்த கோழியின் தலையில் வைத்து, பல்லில் ஒட்டிய பொய்களுடன், வாயால் வாக்குறுதிகள் வீணியாய் வடிய வடிய, தேர்தல் வருகிறதாம். அமைதி, சமாதானம், அன்பு, உரிமை மீண்டும் வரும் என நகைச்சுவை அடித்து, அடித்துத் தேர்தல் வருகிறதாம். சிரித்து விட்டுப் பத்திரிகையைத் தூக்கி மூலைக்குள் எறிந்தேன். "வட் அ புல் ஷிற்" இலக்ஷன். எஸ். ஜானகியின், என்னிடமிருந்த மீடியம் மெலோடியாக்களில் ஒன்றைப் போட்டேன். மின்விசிறிக் காற்றோடு, மோகனமோ அல்லது கல்யாணியோ? காற்றோடு பரவி, புத்துணர்ச்சி வர, வெள்ளைப் பேப்பர் எடுத்துச் "ஷோஷல் ஹயராக்கியல் சிஸ்டம் எமங் பிறிஸ்பைற்றிஸ் என்ரலஸ் ஓர் ஹனுமான் லங்குர்", என்று தலையங்கம் இட்டு எழுதத் தொடங்கினேன். உண்மையில் "ஹயராக்கியல் சிஸ்டம்" என்பதை ஆட்சி அதிகார அந்தஸ்த்து நிரையாக்கம் எனத் தமிழ்ப் படுத்தலாமாக்கும்.

கம்பஸின் தெற்குப் பக்கத்தில், கம்பியினால் கிட்டத்தட்ட இருநூறு மீற்றருக்குக் கொடி கட்டி, வளர்க்கப்பட்ட பஷன் புறுற் அழிக்கப்பட்டிருந்தது. மாமரங்களிலிருந்து கறுத்தக் கொழும்பான், விளாட் பழங்கள், காய்கள் ஆங்காங்கே இரண்டு கடி, ஒரு கடிகளுடன் குப்பை மேல் வீசப்பட்டுக் கிடந்தன. கத்தரித் தோட்டத்தில் கத்தரிக் காய்கள் அடிக்கடி களவுகள் போகத் தொடங்கின. பப்பாசிப் பழங்கள் மாயமாய் மறைந்தன. மரவள்ளிக் கிழங்குகள் வேரோடு பிடுங்கப்பட்டு, அதன் தோல்களோ ஓடுகளில் மந்திரமாய் வந்திருந்தன. பயற்றை, வெண்டி, அவரை, பீர்க்குகளும் மறையத் தொடங்கின. காலையில் அப்போதுதான் முற்றத்தைப் பெருக்கிவிட்டுப்போக, மீண்டும் சில மணித்தியாலங்களில் வேப்பம் இலைகளும், இலைக் காம்புகள் இல்லாத கத்தா இலைகளும், பிய்த்து எறியப்பட்ட நெருப்பு வாகை, அகத்திப் பூக்களும், முறித்துப் போடப்பட்ட சவுக்கு, புங்கைக் கிளைகளும்,முன் பகுதி காரப்பட்ட குரும்பட்டிகளும் கம்பஸ் வளவு பூராக இறைந்து கிடந்தன. மழை காலம் என்றாலோ கெம்பஸ் பூராக ஒழுகத் தொடங்கின. இந்தப் பிரச்சினை எனது கவனத்திற்கு வந்தது. என்னால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் அல்லது கண்டுபிடிக்க முடியும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது என்று சொல்லி வேலையைத் தொடங்கினேன். பொறியியலாளரும், படம் வரையும் பெண்ணும் இரண்டு நாளாகச் சின்னச் சின்ன சதுரங்கள் போட்டு கீறிய யுனிவர்சிட்டி வளவுகளினதும், கட்டடங்களினதும் வரைபடத்துடன் வேலையைத் தொடங்கினேன்.

பத்தொன்பது பேர் கொண்ட இந்த ட்ரூப்பிற்கு (குழுவிற்கு) கம்பஸ் ட்ரூப் எனப் பெயரிட்டேன். விக்கி, முறுக்ஸ், வீவர் வயது வந்த மூத்த ஆண்கள். தாறா, சிறா, ஐறா வயது வந்த பெண்கள். அசி, சசி, றொபி, கொரி சிறுவர்கள். சீபா, ஜூலியா, தீபா, கைக் குழந்தைகள். இவர்களின் வீடு கே-செவன் றேஞ்ஜில், மைக்கிறோபயோலஜி லாபிற்கு அருகிலுள்ள அல்பீசியா மரம். யுனிமேல் (ஆண் தனியன்) ட்ரூப் அகிய இந்த ட்ரூபிற்குத் தலைவர் விக்கி எனத் தெரிய ஒரு வாரம் எடுத்தது. ஒரு இடத்தில் நடக்கும் அட்டகாசங்களுக்குத் தலைமைத்துவம்தான் காரணம். வால் முறிந்த, வயது வந்த, பெருத்த ஆணான விக்கியே தலைமைத்துவம். தலைமைத்துவத்தின் அட்டகாசம் தாங்க முடியவில்லை. அழிவுகள் பொறுக்க முடியவில்லை. எனவே தலைமைத்துவத்தை மாற்றத் தீர்மானித்தேன்.

ஒரு வெள்ளிக்கிழமை, பெப்ரவரி 02ம் திகதி, கம்பி வலையால் கூடு செய்து அதற்குள், அவர்களுக்கு விருப்பமான கத்தரிக்காயைப் போட்டு வைத்தோம். எங்கே முன்னேறுவதென்றாலும், தலைவரும், அவரைத் தொடர்ந்து உபதலைவரும்தான் முன்னேறுவது வழக்கம். அது போலவே விக்கி முன்னேயும், வீவர் அதைத் தொடர்ந்தும், இராணுவ வீரர்கள் போர்க்களத்தில் பதுங்கி, பதுங்கி முன்னேறுவது போல், அங்குமிங்கும் பார்த்து முன்னேறிக் கத்தரிக்காய்கள் கிடந்த கூட்டுக்குள் புக, கூட்டை நாங்கள் மூடிவிட்டோம். பின் அரை மணித்தியாலங்களுக்குப் பிறகு, உப தலைவரான வீவருக்குத் திறந்து விடுதலையளித்தோம். பின் தலைமைத்துவத்திற்கு மழைத் தண்ணி பட்டு இலகுவில் அகலக்கூடிய நீலமையினால் இரு பெரிய புள்ளடிகளும், கால்களுக்குப் பச்சை மையினால் இரு புள்ளடிகளும் இட்டு, ஒரு மணித்தியாலத்திற்குப் பிறகு திறந்து விட்டோம். பின்னர் விக்கியைப் பின் தொடர்ந்தேன். விக்கி பைன் ஆர்ட்ஸ் ஸ்ராப் ரூம் கூரையில் இருந்த தனது ட்ரூப்பை நோக்கி ஓடியது. உடனே மற்றக் குரங்குகளெல்லாம் பயந்து, விக்கியைவிட்டு விலகி ஓடின. விக்கி கூட்டத்தோடு சேருவதற்கு மிகப் பிரயத்தனம் எடுத்தது. ஆனால் மற்றவர்கள் சேர்த்துக் கொள்ளவில்லை. இரு கால்களில் நின்றும், இரு கைகளில் நின்றும், பிட்டத்தைக் காட்டியும், மீண்டும் மீண்டும் தனக்கு பயந்து ஓடவேண்டாமென்றும், மீண்டும் கூட்டதிற்கு சேர்க்குமாறும் வேண்டிக்கொண்டது. ஆனால் அவைகள் எவையும் பலிக்கவில்லை. றிஜக்ஸன் றேட் (ஏற்றுக் கொள்ளாமை வீதம்) விக்கியை விட வீவருக்கு மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் ஆரம்பத்தில், இதே நிலமை வீவருக்கு இருந்தாலும் கொஞ்ச நேரத்தில் வீவரைச் சேர்த்துக் கொண்டன. விக்கியை அதன் காதலி மட்டும் கொஞ்சம் நேரம் நெருங்கிப் பார்த்துவிட்டு, பின் விலகிக் கொண்டது. எதிரிகளிடம் எளிதில் அகப்பட்ட வீரமில்லாத ஒரு தலைமைத்துவமான நீயும் ஒரு தலைமைத்துவமா? உள்ளே என்ன ஆபத்திருக்கிறதென்று தெரியாமல் உன்னை நம்பிய கூட்டத்தையே ஆபத்தில் மாட்டப்பார்த்தாயே? நீயெல்லாம் ஒரு தலைமைத்துவமா? என்ற ஆதங்கத்தினால்தானோ விக்கியை ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருக்கும். கடன்களும், உதவிகளும், நிவாரணங்களும் கூட இப்படித்தான் கத்தரிக்காய்கள் போல இருக்கவேண்டுமாக்கும் என்று நினைக்கிறேன். ராஜ்ஜியம் போனது, பொருள் போனது, கொண்ட மனைவி போன்து, பிள்ளைகள் போனது, நம்பிக்கை போனது.

இப்போது நன்றாக அவதானித்துக் கொண்டிருந்தேன். இப்போது முருக்ஸ் பாய்ந்து, வந்து விக்கியைத் துரத்தியது. விக்கி பணிந்து விலகி ஓடியது. வீவரும் விலகியது. நான் உடனே எல்லோரையும் நேர்ககி 'நல்ல காலம் பிறந்துவிட்டது. நல்ல காலம் பிறந்துவிட்டது', 'தலைமைத்துவம் மாறிவிட்டது' என்று கூவிக்கொண்டு ஓடினேன். இனி கண்ணாடிகள் உடையாது. ஓடுகள் நொறுங்காது, கூரைகள் ஒழுகாது. பழங்கள் கிழங்குகள் களவு போகாது. பூக்கள் பிய்க்கப்படாது. கிளைகள் முறிக்கப்படாது என்று கூவிக் கூவி ஓடினேன். ஒரு ராஜ்ஜியத்தின் தலைவிதியை புள்ளடிகள்தன் தீர்மானிக்கின்றன. ஏன் புள்ளடிகள் இடவேண்டும்? என யோசிக்கிறேன். புள்ளடி என்பது கூடாது, வேண்டாம் என்பதைத்தானே குறிப்பது வழக்கம். எதை வேண்டாம் என்று புள்ளடியிடுகிறார்கள். துவேசம், அசமத்துவம்,வன்பு, கலகம், யுத்தம் வேண்டாம் என்றுதானே புள்ளடியிடுகின்றோம். ஆனால் இவைகள் மீண்டும் புள்ளடிகளுக்குப் பின் வருகிறதே. அப்படியென்றால் வேண்டாம் என்பது அர்த்தத்தை வேண்டும் என்று மாற்றிக்கொண்டதா? அல்லது வேண்டாம் என்பது வேண்டும் புள்ளடியிடுகிறார்களா? என்ன ஒரு ஒற்றுமை. தலைத்துவங்கள் மாற புள்ளடியிடுகிறோம். நிலவுகளும் நட்சத்திரங்களும் இன்னும் எறிக்காத ஒரு காரிருளில், ஒரு சின்னஞ்சிறு மின்மினிப் பூச்சியினால் தாறுமாறாய், கோடிழுத்து உமிழப்படும் அற்பாயுளுடன் காற்றிலே கரைந்து போகக் கூடிய ஒளிக் கீற்றின் நம்பிக்கையுடன், இனி பூக்கள், காய்கள். பழங்கள். ஓடுகள், மின்சார, தொலைபேசி இணைப்புக்கள் அழிவுக்குட்படாது என்று நானும் புள்ளடிகள் போட்டேன். இந்த நிகழ்வை அன்று ஜேர்மன் விஞ்ஞானிக்கு தெரிவித்தேன்.

பொழுது விடிந்தது. உதய சூரியன் தன் கிரணங்களைப் பரப்ப பொழுது விடிந்தது. நாளை நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையுடன், குயில்கள் பாட பொழுது விடிந்தது. விடியும் இந்நாள் நன்நாளாய் அமைய வேண்டும் என்ற யானையின் தும்பிக்கை நம்பிக்கையோடு சேவல்கள் கூவ பொழுது விடிந்தது.கதிரையில் இருப்பவர்கள் மாறுவார்கள் அல்லது மனம் மாறுவார்கள் என்ற நம்பிக்கையோடு கட்டியக்காரனின் பறைச் சத்தம்போன்று காகங்கள் கரைய பொழுது விடிந்தது.

பீல்ட் நோட் புக்கை எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு நாளும் அவதானங்கள் தொடங்கும் 'ட்ரான்செக்ட் லைன்' தொடக்கத்தில் சைக்கிளை சாத்திவிட்டு, கெம்பஸ் ட்ரூப் இரவில் தங்கும் கேசெவன் றேன்ஜில் இருக்கும் அல்பீசியா மரத்தடிக்கு போகிறேன். அசியும், றொபியும் துள்ளிக் குதித்து எனக்கு பல்லிளித்தன. முருக்ஸை தேடினேன். முருக்ஸ் பக்கத்திலிருந்த மாமரத்தில் பாய்ந்து கொண்டிருந்தது. பின் கறுத்தக் கொழும்பான் மாம்பழங்களை ஒரு கடி, இரு கடிகளுடன் வீசத் தொடங்கியது. பின் பக்கத்திலிருந்த விலங்கியல் ஆய்வுகூடத்தில் தனது நாற்பத்தியிரண்டு கிலோ உடம்பை தூக்கிக்கொண்டு ஓட்டின் மேல் பாய்ந்தது. நிச்சயமாக ஐந்தாறு ஓடுகளாவது உடைந்திருக்கும். பின் கெம்பஸையும் விவசாயப் பண்ணையையும் எல்லையிடும் சுவர்மேல் பாய்ந்து தனது ட்ரூப்பை நோக்கி கத்தியது. உடனே குட்டிகள் வயிற்றைப் பற்றிப் பிடித்து தொங்க மற்றக் குரங்குகள் எல்லாம், தலைமைத்துவத்திற்கு பின்னால் அணிவகுத்தன. இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று தோட்டத்து காவலாளிக்கு விளங்கிவிட்டது. அந்த காவலாளிக்கு உத்தியோகம் கொடுத்ததே விக்கியின் அரசாங்கம்தான். இந்த அரசாங்கத்தின் கண்ணுக்குத் தெரியும் முதல் அபிவிருத்தி வேலை

நன்றி - நூலகத்திட்டம்



இதுதானாக்கும். தடியெடுத்து துரத்த கிழக்குப்பக்கம் ஓடியது. கிழக்குப் பக்கம் துரத்த வேகமாக மேற்குப் பக்கம் நோக்கிய ஓடி, காவலாளியை மறுக்கிவிட்டு, தோட்டத்திற்குள் புகுந்து, விளையாட்டுக்கள் காட்டத் தொடங்கின.

உலகத்திலே எனக்குப் பிடித்தவைகள், குட்டிப் பூனையும், நாயும், குட்டி யானையும், குட்டிக் குரங்கும், குழந்தைப் பிள்ளையுமாகும். இவையெல்லாம் கடவுளின் சத்தங்களைக் கேட்கிற பலவழிகளில் சில வழிகளாகும். றிவாவும், ஜெனியும் விளைாடும்போது பதினோராயிரம் வோல்டேஜ் கரண்ட் கம்பியை, ஆபத்திருக்கிற-தென்று தெரியாமல் பிடித்து, ஒரு ஏப்ரலின் பதினான்காம் திகதி, என் கண் முன்னாலேயே கருகி இறந்து விட்டார்கள். இது என்னைப் பாதித்தது. எனது ஆய்வுப் புத்தகத்தை இந்த இரு குட்டிக் குரங்குகளுக்கும்தான் நான் சமர்ப்பணம் செய்தேன். ஜெனியின் உடலை பாடம் பண்ணி லேபில் வைத்திருக்கிறேன். போமலின் கண்ணாடித் தொட்டியில் கிடக்கும் ஜெனியை ஒவ்வொரு நாளும் நான் பார்ப்பதுண்டு. ஜெனி துள்ளிக் குதித்து விளையாடி, புரளும் பிரமைதான் என் கண்ணுக்குள் இன்னும் இருக்கிறது. குட்டிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சரித்திரம் சொல்லும். எனது மாமாக்களினதும், சிற்றப்பாக்களினதும், உறவுக்காரர்களினதும் பிள்ளைகளுக்கு பிறந்ததிலிருந்து இன்றுவரை நடந்த விடயங்கள் அனைத்தும் எனக்குத் தெரிவது போல், அந்தக் குட்டிகளினதும் சரித்திரம் எ க்குத் தெரியும். ஒவ்வொன்றும் புத்திசாதுரியம், இயல்பூக்கம் என்பனவற்றில் வேறு வேறான குட்டிகள். அவற்றின் மூக்கின் வளைவின் சிறு வெடிப்பும் கண்களின் மயிர்களின் அடர்த்தியும் வித்தியாசப்பட்டு கவிதையாய் கதைகள் பேசும். அசி, றொபி, சீபா, தீபாவெல்லாம் என் விருப்புக்குரிய குட்டிகள்தான். விரிவுரைகள் நடக்கும்போது, ஜன்னல் கண்ணாடியூடாக புதினம் பார்த்து, அமைதியாக விரிவுரைகளை கேட்டுக் கொண்டிருக்கும். சில வேளை ஜன்னல் கண்ணாடிகளை தட்டிவிட்டு சத்தத்தை உண்டாக்கிவிட்டு, பல்லிழித்து ஓடும். விரட்டினாலோ எதிர்த்து விரட்டும். நான் எடிட்டராக இருந்த சயன்ஸ் ஜேர்னல் வெளியீட்டின்போதும், அவைகளும் அழையா விருந்தாளிகளாக கலந்து கொண்டன. எல்லோரது பேச்சையும் உன்னிப்பாக கேட்டன. அவைகளுக்கு புத்தகம் கொடுத்து போட்டோவும் பிடித்து வைத்திருக்கிறேன்.


தாறாவுக்கும் சிறாவுக்கும் அசிக்கும் றொபிக்கும் மாடுகள் என்றால் ஒரே கொண்-டாட்டம். அனிமல் சயன்ஸின் மேயும் மாட்டு மந்தைகளை ஓட ஓடத் துரத்தும், நாய்க் குட்டிகள் அகப்பட்டாலோ இன்னும் அவற்றிற்கு ஒரே கொண்டாட்டம். தண்ணி பைப்புகளை திறந்து தண்ணீர் குடித்துவிட்டு மூடாமல் போகும். ஒரு வேளை அவைகளுக்கு மூடத் தெரியாமலும் இருக்கலாம். ஒரு தரம் 'அவைகள் இரு மாணவிகளை கடிக்கப் போனதாக, அந்த மாணவிகளால் என்னிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. நான் சிரித்துக் கொண்டு 'இனி அவர்கள் இப்படிச் செய்யாமல் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்லி அனுப்பினேன். பக்கத்து கிராமங்களிலிருந்தும் இவைகளின் பிரச்சினைகள் வருவதுமுண்டு. நான் அந்த இடங்களுக்கு செல்வதுமுண்டு. அல்லது கூட்டிச் செல்லப்படுவதுமுண்டு. அதுவெல்லாம் வேறு கதை. இவைகளின் பிரச்சினைகள் என்பது கிராமங்களுக்கோ அல்லது மாவட்டங்களுக்கோ மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது ஒரு சர்வதேசியப் பிரச்சினை.

இவைகள் மற்றவர்களைக் குழப்பினாலும், அவர்களின் வாழ்க்கை எவ்வளவு சீராக இருக்கின்றது. என்ன ஒரு சீர்மை. உலகத்திலே மனித வாழ்வைத் தவிர எல்லாம் ஒரே சீர்மையைத் தான் பூண்டு கொண்டிருக்கின்றன. மனிதர்களிட-மிருந்து கற்றுக் கொள்வதைவிட. இவைகளிட-மிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவைகள் நிறைய இருக்கின்றன. காலையில் ஐந்து முப்பதுக்கு எழும்பி கண் விழித்து, அல்பீசிய மரத்திலிருந்து. கத்தா மரத்திற்கு தாவி, பின் எட்டு முப்பது மணிவரை இலைக்காம்பையும், இளந் தளிர்களையும் சாப்பிட்டுவிட்டு, பின் கெமிஸ்ட்ரி லேபிற்கு பக்கத்திலிருக்கும் தொட்டியிலிருக்கும் நீரருந்தி, பின் குறுப் குறுப்பா, பிரிந்து, அடித்து, பிடித்து, கடித்து, பயந்து, பாய்ந்து, பதுங்கி, விளையாடி, சாகசம் செய்து, பின் பத்தரை மணிக்கு அல்பீசியாவிற்கு வந்து, பன்னிரண்டு மணியிலிருந்து இரண்டரை மணிவரை துாங்கி பின் ஓடிப்பிடித்து விளையாடி, பின் மாலைச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு இரவு ஆறு முப்பதிற்கு அதே மரத்திற்கு துாங்கப் போய் காலையில்ல விழிக்கும்.

என்ன ஒரு ஒழுங்கு. ஒரு கட்டுப்பாடு.

ஒரு தடவை இந்த பத்தொன்பதும், ஓட்டைக் கழற்றிவிட்டு கொம்பியூட்டர் யுனிற்றுக்குள் இறங்கிவிட்டன. குரங்குகள் விளையாட்டுக் காட்டத் தொடங்க, என்னை எல்லோரும் தேடத் தொடங்கியிருக்கின்றார்கள். பின்னர் அவை-களாகவே மனம் மாறி, வெளியே வந்து விட்டன. அன்று அந்த நூற்றுக்கணக்கான கொம்பியூட்டர்-களை அன்ரர்சீட்தான் பாதுகாத்தது. தலைமைத்-துவத்தினால்தான் ஓடுகள் கழற்றப்படுவது வழக்கம்.

அன்று ஒக்டோபர் பதிமூன்றாம் திகதி பதொலொஜி பரீட்சை முடிந்து, பரீட்சை மண்டபத்திலிருந்து இறங்கி வருகிறேன். நான்கைந்து பேர் வெளியே எனக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். எனது குரங்குகளிலொன்-றுக்கு பிரச்சினை என்று என்னை அழைத்துக்-கொண்டு போக வந்திருந் தார்கள். லைப்றறிக்கு முன்னால் சிறிய கூட்டம் சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருந்தது. நான் போக வழி விட்டார்கள். நாற்பத்தி-யிரண்டு கிலோ உடம்புடனும் ஐந்தரை-யடி உயரத்துடனும் முறுக்ஸ் அடியற்ற மரம்போல உடம்பை சாய்த்து



கிடந்தது. என்னை விழித்தது. விழித்து, கண்ணை சிமிண்டி, சிமிண்டி பார்த்தது. மூக்கினால் கொஞ்சமாக இரத்தம் வந்து நின்றிருந்தது. இவைகள் விபத்தில் மாட்டினாலும், உடனே முதலுதவிக்கு போகவியலாது. அவையெல்லாம் எம்மைச் சுற்றி எதிரியாக நினைத்தால், நாங்கள் அதே கதிதான்.

மெல்ல குரங்குக்கு கிட்ட போய் குனிந்தேன். வாலைத் தொட்டேன். எந்தவித உணர்வையும் காட்டவில்லை. இந்த மூன்று அடி வாலை வைத்துக் கொண்டு எவ்வளவு கூத்துக் காட்டியது. இந்த வாலின் சமநிலையால்தானே பூக்களைப் பிய்ப்பதற்கும், பழங்களை பறித்துக் களவெடுப்பதற்கும் ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்கோ? அல்லது ஒரு கட்டிடத்திலிருந்து இன்னொரு கட்டிடத்திற்கோ பாய்ந்து திரிந்தது. அன்று கூத்துக்கள் காட்டிய இந்த வால், இன்று அசைவற்று, உணர்வற்று கிடந்தது. கறுத்த பாதத்தில் கிச்சு கிச்சு மூட்டுகிறேன். இங்கேயும் உணர்வில்லை. எவ்வளவு அழிச்சாட்டியங்கள் செய்துவிட்டு இந்தக் காலின் உதவியினால்தானே வேகமாக பாய்ந்தும், ஓடியும் தப்பியது. மெல்ல மெல்ல தொடையைத் தட்டுகிறேன். உணர்வில்லை. ஆண்குறியை பிடித்து, பிதுக்கிப் பார்க்கிறேன். சிரிப்பு வருகிறது. அங்கேயும் உணர்வில்லை. இளம் காதலர்கள் காதல் மொழி பேசி, கனிந்து உருகி புணர்ந்து இன்பம் துய்த்துக் கொண்டி-ருக்கும்போது, அந்தக் காதலனை அடித்து-விரட்டிவிட்டு, எவ்வளவு தரம் இந்தக் குறியினால் பாலியல் வல்லுறவு செய்திருக்கும், அந்த ஆண்குறி இன்று தன் குறியிழந்து கிடக்கிறது. இப்போது நெஞ்சில் கிள்ளினேன். முறுக்ஸ் திரும்பியது. உணர்வைக் காட்டியது. ஸ்பைனல் கோட் டெமேஜ் என்று சுற்றிநின்றவர்களிடம் சொன்னேன்.

அண்ணார்ந்து பார்க்கிறேன், உயர்ந்த, பெரிய, நிறைய கிளைகளைப் பரப்பிய மருதமரம் அது. அந்த மரத்திலிருந்து இடுப்பு அடிபட விழுந்திருக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டேன். இப்போது, ஒரு கம்பை எடுத்து முருக்ஸிடம் நீட்டினேன். முருக்ஸ் தன் இரு கைகளினாலும் பற்றிக் கொண்டது. உடனே முருக்ஸை கம்பின் உதவியுடன் இழுத்துக் கொண்டு, நிழலில் படுக்க வைத்துவிட்டு, எனிமல் சயன்ஸ் டிப்பார்ட்மென்டில் உள்ள வெற்னரி சேர்ஜனிடம் போய் ஸ்பைனல் கோட் டெமேஜ் விசயத்தைச் சொன்னேன். 'நான் வந்து றீட் பண்ணுறேன். ஆனால் கடிக்காம பார்த்துக்கணும். உங்களை அதுக்கு தெரியும்தானே?' என்று சேர்ஜன் கேட்டார். நான் சிரித்துக் கொண்டு 'எனக்கு அவங்களத் தெரியும். ஆனால் அவங்களுக்கு என்னத் தெரியுமென்று உறுதியாத் தெரியாது' என்றேன். சேர்ஜனும் சிரித்தார். நான் காட்போட் மட்டையினால் அந்த நான்கரை அடி முருக்ஸின் வாயை கையினால் அமத்திப் பிடிக்க, மறுகையினால் அதன் இரு கைகளையும் பிடிக்க, சேர்ஜன், நான் முன்பு செய்தது மாதிரி, ஒவ்வொரு அங்கமாக தொட்டுப் பார்த்தார். எலும்பு முறிவுகள் ஏதாவது இருக்கிறதா? என்று சோதனை பண்ணிப் பார்த்தார். எதுவும் இல்லை. 'ஸ்பைனல் கோட் டெமேஜ்தான்' என்றார். 'இதுக்கு ட்ரீட்மென்ட் இல்ல. பெட்றெஸ்ட்தான் பெட்டர் வே' என்றார் சேர்ஜன். உண்மையில் மனிதன் என்றால் ஆறு மாதம், பெட் றெஸ்ட் எடுத்தால் போதும். ஆனால் இந்த வாய் பேச முடியாத விலங்குகள் றெஸ்ட் எடுக்க முடியாதே. மனிதன் என்றால் வாய்விட்டு எனக்கு அப்படி இருக்கிறது. இப்படி வலிக்கிறது என்றெல்லாம் சொல்லுவான். ஆனால் தாங்களே தங்களுடைய வேலையைப் பார்க்கும், சுயகௌரவம் உடைய விலங்குகளால் அப்படி முடியாதே. விலங்குகளிலேயே மனிதன் தான் மிக நீண்டகாலப் பெற்றார்ப் பராமரிப்பை உடையவன். தங்கி வாழ்பவன். ஆறு வாரங்கள் தொடக்கம் ஆறு மாதங்கள் வரை முடிவடையும் இவைகளின் பெற்றோர்ப் பராமரிப்புக்கும், அதைவிட அறுபது மடங்கு பெற்றோர்ப் பராமரிப்பு தேவைப்பட்ட எனக்கும் எவ்வளவு வித்தியாசம். அதற்கிடையில் நான் வாலில்லாத பகுத்தறிவுப் பெட்டக-மாம். பெட்டகத்தில் எதனை மூடிவைக்க? வறட்டுக் கௌரவத்தையும் பழமைக்குள் புழுதிபடிந்து மறைந்து தேய்ந்திருந்து, பின் கண்டெடுத்த இறுமாப்பையுமா? இப்பொது முறுக்ஸ் கண்களினால் நீர் வழிய என்னை அப்பாவியாய்ப் பார்த்தது. எங்கோ என் மனம் பிய்த்துக்கொண்டு அழப் பார்த்தது. பயப்படாதே நான் இருக்கிறேன். எப்படியும் உன்னைக் காப்பாற்றுவேன் என்றவாறு பார்த்தேன். மனங்கள் பேசிக்கொள்கிறபோது வார்த்தைகளுக்கென்ன வேலை.

அதன் சமூகத்தில், சாதாரண சிசுவாய் பிறந்து, முலை சப்பி பால் குடித்து பல்லிழித்து, பாய்ந்து, கிளைக்கு கிளை தாவி, சிறுவனாகி, கட்டிளம் பருவத்தினனாகி, பெண் துரத்தி, காதலித்து, புணர்ந்து, பெரியவனாகி, தலைமைக்கு பணிந்து, தலைமைவிடுத்து மற்றோர் பணித்து, வலியோர் விடுத்து எளியோர் வருத்தி, வலிமையின் கதை முடிய, வலிமையிலும் வலிமையாகி, தனிக்காட்டு ராஜாவாகி, ராஜாங்கம் நடாத்தி, அடக்கி, ஆண்டு, ஆண்டவனாகியிருந்த முறுக்ஸ், இன்று எதற்கும் நாதியற்ற ஜடமாய், தன் கூட்டத்தால் கைவிடப்பட்ட நிலையில் கிடக்கிறது. இதுக்கு என்ன பழமொழி பொருத்தமோ தெரியாது. சண்டியனுக்கு சந்தியில்தன் சாவோ? அல்லாவிட்டால், அடாது செய்வோர் விடாது கெடுவாரோ? இல்லாவிட்டால் எளியாரை வலியார் வதைக்கும் போது, அவ்வலியாரை வதைக்க வலியாரிலும் வலியார் வருவாரோ? அப்படியென்றால் வலியார் மருதமரமா? அல்லாவிட்டால் லைப்பறறிக்கு முன்னாலுள்ள கற்தரையா? இவைகளும் இல்லாவிட்டால் விதியா? என்று யோசிக்கிறேன். 'பெற்றார் இஸ் ரேகிங் எ றெஸ்ட்' என்றார் சேர்ஜன். 'தாங்ஸ் லொட்' என்று சோஜனை அனுப்பிவிட்டு யோசிக்கத் தொடங்கினேன்.

முறுக்ஸிற்கு, பெட் றெஸ்ட் எங்கே கொடுக்கலாம் என யோசித்தேன். ஏணியை வைத்து கென்ரீன் பிளேட்டில் ஏறி, கூரைக்கும் பிளேட்டுக்கும் இடையிலுள்ள இடைவெளியைப் பார்த்தேன். அது மழையாலும், வெயிலாலும் பாதிப்பு வராத பாதுகாப்பான இடம் மாதிரிப் பட்டது. உயரம் குறைந்த பணிவான நிலம் போன்ற இடங்கள் என்றால் நாய்கள், அலக்-சாண்டர் போன்ற வேட்டையாடிகள் கடித்து குதறிவிடும். இப்போது நெருப்பு வாகை இலையினால் மெத்தை செய்து, முருக்ஸை உரப்பையின் மேல் வைத்து மேலே அதனது நாற்பத்தியிரண்டு கிலோ உடம்பை துாக்கிக் கொண்டு ஏறி வாகையிலை மெத்தையில் படுக்கப் போட்டேன். அந்த மெத்தை அதற்கு சௌகரிய-மாக இருந்திருக்குமாக்கும் என்னவோ என்று நினைக்கிறேன். நீரும் கொண்டு வைத்தேன். ஆனால் குடிக்கவில்லை. இப்போது முரக்ஸ் துாங்கத் தொடங்கியது. பின்நேரம் கம்பியூட்டர் யுனிட்டுக்கு வரும்போது முருக்ஸை ஏறிப் பார்த்தேன். முருக்ஸ் கொஞ்சம் முனகிக் கொண்டிருந்தது. சாப்பிடுவதற்கு கொஞ்சம் இலைகள் போட்டேன். ஆனால் சாப்பிடவில்லை. இரவைக்கு சாப்பிடுமாக்கும் என்று நினைத்து விட்டு, இறங்கி வந்து விட்டேன்.

சனிக்கிழமை விடிந்தது. காலை ஆறு மணி. ஏணியில் ஏறிப் பார்த்தேன். கைகள் மேலே விறைத்து நிற்க, கால்கள் கீழ் நோக்கி துவண்டு கிடக்க, கண்கள் திறந்திருக்க, பற்கள் தெரிய, சிறுநீரின் மேல் முறுக்ஸ் செத்துக் கிடந்தது. பெருநீர்கள் விரவி நிறைந்து கிடந்த நிலத்தை ஆண்டு பெரு வீரனாய் இருந்த ராஜா, சிறுநீரின் மேல செத்துக் கிடந்தது. எனக்கு கவலையாகிவிட்டது. பின் முறுக்ஸை துாக்கிக் கொண்டு கீழிறங்கி, கென்ரினிலிருந்து மண்வெட்டி வாங்கி, முறுக்ஸின் எலும்புக் கூட்டை மியுசியத்திற்கு எடுப்பதற்காக, நெருப்பு வாகை மரத்திற்கு கீழ், முறுக்ஸை புதைத்து அடையாளம் இட்டேன். இரவு முழுக்க நித்திரையே வரவில்லை. முறுக்ஸ் இறந்த துக்கம் வேறு. ஆட்சி மாற்றம் பற்றிய எதிர்ப்பார்ப்பு வேறு.

ஞாயிறு விடிந்தது. ஞாயிற்றுக் கதிர்கள் நன்மைகள் கொண்டு வரும், அமைதிகள் கொண்டு வரும், எல்லோரும் இன்புற்றிருக்க மாற்றங்கள் கொண்டு வரும் என்ற நம்பிக்கையுடன் ஞாயிறு விடிந்தது.

காலை ஆறுமணி, குளிர் அடித்தது. சைக்கிளை எடுத்துக் கொண்டு, ஹொஸ்டலிலிருந்து, ஒரு கிலோ மீற்றர் தொலை-விலுள்ள கெம்பஸிற்கு, நெடிய கறுத்த வீதிக்கூடாக, யானையின் தும்பிக்கை நம்பிக்கையுடன், கதிரைகளின் மாற்றம் நலம் தரும் என்ற நம்பிக்கையுடன், குளிருக்கூடாக போகிறேன்.

விவசாயப் பண்ணைக்குள் நுழைந்தேன். காய்கள் பரந்து கிடந்தன. இலைகள் கிழிந்து கிடந்தன. கெம்பஸ் முற்றம் எங்கும், இலைகளும், பூக்களும் சிதறிக் கிடந்தன. தாவரவியல் திணைக்களத்தின் ஓடுகள் இரண்டு விழுந்து கிடந்தன. மொழித்துறைக்கு முன்னிருந்த திராட்சைக் கொடிகள் பியந்து கிடந்தன. பௌதிகவியல் திணைக்கள ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து கிடந்தன. அப்போது கெம்பஸ் ட்ரூப் டீன்ஸ் சயன்ஸில் அல்லோல கல்லோலப் படுவதைக் கேட்க முடிந்தது. தள்ளிநின்று பார்க்கிறேன். ஒரு பெரிய தடித்த குரங்கு. ஒரு சிறிய குரங்கை கதற கதற புணர்ந்து கொண்டிருந்தது. வீவருக்கு ஜயவேவா...

இராமன் ஆண்டாலென்ன?

இராவணன் ஆண்டாலென்ன?

இடையில் வந்துதித்த குரங்கு ஆண்டாலென்ன?

விக்கி ஆண்டாலென்ன?

முறுக்ஸ் ஆண்டாலென்ன?

வீவர் ஆண்டாலென்ன?

நேரம் நள்ளிரவு 2.30 மணி. மீண்டும் வெள்ளைநிறம் பூசப்பட்ட ஜன்னலின் கம்பிகளினுாடாக துாரத்தேயிருந்த பெண்கள் விடுதியைப் பார்க்கிறேன். எல்லா அறைகளினதும் வெளிச்சங்கள் அணைக்கப்பட்டிருந்தன. மெர்க்குரி விளக்குகூட எரிய முயற்சித்து, மீண்டும் அணைந்து கொண்டேயிருந்தது. ஒளிர முயன்று தோற்றுக் கொண்டே இருந்தது. இன்னும் ஒளிரவேயில்லை. எப்போது ஒளிருமோ, எப்போது இருள் போகுமோ? எப்போது விடிவு கிடைக்குமோ? நிலவுகளும் நட்சத்திரங்களும் இன்னும் எறிக்காத ஒரு காரிருளில், ஒரு சின்னஞ்சிறு மின்மினிப் பூச்சியினால் தாறுமாறாய், கோடிழுத்து உமிழப்படும் அற்பாயுளுடன் காற்றிலே கரைந்து போகக் கூடிய ஒளிக் கீற்றின் நம்பிக்கையுடன். 'தி என்ட்' என்று முடித்து விட்டு, எழுதிய கட்டுரையை பைலுக்குள் போட்டுவிட்டு, துாங்கச் செல்கிறேன்.

நன்றி - நூலகத்திட்டம்





# "ஓவியங்களைத் தீட்டியிருக்காவிடில்; டாலி ஒரு பைத்தியக்காரனாக இருந்திருப்பார்"

ஆரம்பத்தில் 'கனரூப' ஓவியராக இருந்தவர், 1929இல் 'சர்ரியலிஸ' ஓவியர் குழுவில் அங்கத்தவரானார். இந்த ஆண்டில் பாரிஸில் உள்ள 'Camille Goemans' ஓவியக்கூடத்தில் தனது தனி மனித ஓவியக்காட்சியை நடத்தினார். இவர் காட்சிக்கு வைத்த ஓவியங்கள் பற்றிய ஒரு சிறு குறிப்பை இக்குழுவின் தலைவரான அன்டிரிப் பிரிட்டன் (Andre Breton) என்பவர் எழுதினார்.


'Christ of St John of the Cross'


ஸ்பானியாவின் வடகிழக்குத் திசையில் உள்ள மாகாணமாகிய கதலோனியா (Catalonia) ல் உள்ள சிறு ஊரான Figuers ல் 1904 - 05 - 11ல் இவர் பிறந்தார். டாலியின் தந்தையார் அவ்வூரின் புகழ்பெற்ற நொத்தாரிஸ். அத்துடன் அரசியற் செல்வாக்கும் அறிஞர்கள் பலருடன் தொடர்பும் உள்ளவர். கடவுள் நம்பிக்கை அற்றவர். ஆனால், தாயாரோ கத்தோலிக்க சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். 7 வயதளவில் டாலி ஊரில் உள்ள அரசாங்கப் பாடசாலைக்குக் கல்வி கற்கச் சென்றார். பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்ட உடையுடனும், வாசனை பூசிய தலைமுடியுடனும் பாடசாலைக்குச் செல்வது, அங்கு கல்வி கற்கும் ஏனைய வறிய மாணவர்கள் மத்தியில் ஒரு வித்தியாச கோலங்கொண்டவராக இவரைக் காட்டியது. ஒரு வருடத்தின் பின் தந்தையார் இவரை தனியார் பாடசாலை ஒன்றிற் சேர்த்தார். இப்பாடசாலை கிறிஸ்தவப் பாதிரிமார்களால் நடத்தப்பட்டுவந்தது. இங்கு மத்திய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களே கல்வி கற்று வந்தார்கள். இங்கு கற்கும்போது தனது மனதில் நன்கு பதிந்த, யன்னல் ஊடாகத் தெரியும் சைப்பிரஸ் மரங்கள் வகுப்பறை நடைபாதையில் தொங்கிக் கொண்டிருக்கும் 'Millet's the Angelus' என்ற ஓவியத்தின் மறுபிரதி, வகுப்பறையில் உள்ள கறுப்பு நிறச் சிலுவையில் அறைந்துள்ள மஞ்சள் நிற எனாமல் பூசப்பட்ட இயேசுவின் சிலை ஆகியன பிற்கால இவரது ஓவியங்களில் காட்சிப் பொருட்களாக வந்ததை அவதானிக்கலாம்.

ஆரம்பத்தில் இவரின் கலைப்பணி தொய்வுறாமல் இருப்பதற்கு ஊக்கமளித்தவர் இவரின் தந்தையாரின் நண்பரான பதிவு நவீர்ச் ஓவியர் Ramon Pitchot ஆகும்.

இவர் மரபு வழிவந்த ஓவியர்களின் ஓவியங்கள் பலவற்றைப் பார்த்தார். அவற்றினால் பாதிப்பும் அடைந்தார். பாதிப்புற்றார் எனக் கூறுவது அவர் நவீன ஓவியத்துக்கு எதிரானவர் என்ற கருத்தாகாது. 50ன் பிற்கூறுகளில் அமெரிக்க ஓவியரான De Kooning ன் ஓவியங்களாலும் பாதிப்புற்றார். புதிய வடிவங்களைக் கண்டு பிடிப்பதிலும் புதிய கருத்துக்களை வெளியிடுவதிலும் மிகுந்த வேட்கை உள்ளவராக இருந்தார். சமய சம்பந்தமான ஓவியங்களை வரையும் போது கூடப் பார்வையாளரை அதிர்ச்சிப்படுத்தும் விருப்பிலிருந்து அவர் விடுபடவில்லை. இதற்கு உதாரணமாக 'Christ of St John of the Cross' என்ற ஓவியத்தைக் கூறலாம். வழமையாக இயேசு சிலுவையில் அறையப்பட்ட காட்சி, முற்பக்கப் பார்வை கொண்டதாகவோ அல்லது பக்கப் பார்வை கொண்டதாகவோ அமையும். ஆனால்,டாலி இவ் ஓவியத்தை சிலுவையின் மேல் இருந்து நிலைக்குத்துடன் சிறுசாய்வாக தான் பார்ப்பது போல் வரைந்துள்ளார். இச்சிலுவையின் கீழ்ப்புறத்தே தெரியும் அடிவானம், மலைகள், கடல், ஓடம், மனிதர்கள், பாறை என்பன தரையில் இருந்து பார்க்கும்போது எப்படி இருக்குமோ அவ்வாறே உள்ளன. ஒரே நேரத்தில் நிலைக்குத்துப் பரிமாணத்தையும் கிடைப் பரிமாணத்தையும் காட்டியுள்ளார். இரண்டும் முகில்களால் பிரிக்கப்பட்டாலும் பிரிக்கப்படவில்லை என்ற உணர்வே எழுகிறது. இவ் ஓவியத்தைப் பார்க்கும் போது இப்பெரு வெளியில் மிகப் பிரமாண்டமான உருவுடன் இயேசு வியாபித்திருக்கும் உணர்வே ஏற்படுகிறது.

சிலுவையும், இயேசுவின் உடலும் போகப் போக ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் சிறுத்துப்போதல் அதாவது 'சித்திர எறியம்' (Perspective) என்பது சரியான முறையில் கவனிக்கப்பட்டுள்ளது. ஒளி, நிழற்படுத்துவதில் டாலிக்கு உள்ள கைத்திறன் இதில் நன்கு தெளிவாகின்றது. இவற்றிற்கு உதாரணமாக வலது கை நிழல் சிலுவையில் விழுவதும், கழுத்துக்கும் முதுகிற்கும் இடையேயுள்ள தசை மடிப்புகளும் தோள் மூட்டில் உள்ள திரட்சியும் ஆகும். தலைக்கும் கால், விரல்களுக்கும் இடையேயுள்ள தூரம் ஓவியத்தில் மிகக்குறைவு ஆகும். ஆனால், இத்தூரம் மிகவும் அதிகம் இருப்பது போல் தோற்றம் அளிக்கின்றது.

ஓவியங்களைக் கையால் வரைந்தாலும் கையால் வரைந்தது எனக் காட்ட விரும்பாமல் அவை புகைப்படங்கள் போல் காணப்படவேண்டுமென்பது இவரின் பெரு விருப்பம். இதுவும் பார்வையாளரை அதிர்ச்சிப்படுத்தும் மற்றோர் விடயம். புகைப்படங்கள் போல் இருக்க வேண்டுமென்ற காரணத்தால் தூரிகையின் அடையாளங்களை மறைப்பதில் கவனம் செலுத்தினார். வர்ணங்கள் ஒப்பரவாகவும் வழுவழுப்பாகவும் இருப்பதினால் இவரின் ஓவியங்களைப் பார்க்கும்போது அவை புகைப்படங்கள் தான் என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. புகைப்படங்கள் போல் இருத்தல் எனக் கூறுவது புகைப்படக்கருவி என்ன செய்கின்றதோ அதையே அவரும் செய்கின்றார் என்ற கருத்தாகாது. அப்படிக் கூறினால் ஆக்கத்திறன் மிக்க இக்கலைஞனைக் கொச்சைப்படுத்துவதாக அமைந்துவிடும். தனது கருத்தை வெளிப்படுத்தக் குறியீடுகளாகப் பயன்படுத்தும் பல பொருட்கள் ஒரே ஓவியத்தில் வருகின்றன. வெளிப்படையாக நோக்குமிடத்து இப்பொருட்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றனவாக இருந்தாலும் உள்ளார்த்தமாகத் தொடர்புடையனவே. இப்பொருட்களையே அவை இயல்பாக எப்படி உள்ளனவோ அவ்வாறு சில பொருட்களைச் சிதைவுபடுத்தியும் வரைந்துள்ளார். The Persistence of Memory என்ற இவரின் ஓவியத்தைக் 'கையால் வரைந்த புகைப்படம்' எனக் கூறலாம். இவ் ஓவியத்தில் காட்டப்பட்டுள்ள தூரத்தே தெரியும் தட்டையான சிறுபாறை தத்ரூபமாகவுள்ளது. தரையில் இருக்கும் ஓவியரின் மூக்கும், கண்ணும் இறந்த ஒரு விலங்கின் உடல்போல் காட்சியளிக்கின்றது. இவ்வுடல் நித்திரை செய்வது போலவும் தீட்டப்பட்டுள்ளது. இவ்வுடலின் மீதும், உடலுக்கு அருகில் இருக்கும் கனவுருவின் மீதும், கனவுருவுக்கும் மேல் இருக்கும் சிறுமரக் கொப்பின் மீதும் மென்மையான கடிகாரங்கள் வைக்கப்பட்டுள்ளன. கடிகாரங்கள் தமது இயல்பான வடிவில் இருந்து விடுபட்டு வெண்ணெயைப் போல உருகுகின்றன. கடிகாரத்தின் உருவம் மாற்றமடைந்தாலும், கடிகார முட்களும் இலக்கங்களும் தத்ரூபமாக உள்ளன. இக்கடிகாரங்கள் காலத்தினதும், வெளியினதும் அகவயமான ஓர் குறியீடாகும். "வெண்ணெயின் நிலையில் காலமும் வெளியும்" என டாலி இவ் ஓவியம் பற்றிக் கூறினார். காலம் தாக்கத்திற்கு உட்பட்டு உருகுகின்றது.


The Persistence of Memory

1936ஆம் ஆண்டின் முடிவில் 'Autumn Cannibalism'' என்ற ஓவியத்தைத் திரட்டினார். அசிங்கமான உடலமைப்புகளைக் கொண்ட தம்பதிகள் அருகருகே இருந்து கொண்டு இருவரும் ஒருவரை ஒருவர், கடும் பசியுடன் (தசையை) அங்கலாய்ப்புடன் உண்பது போல் காட்டப்பட்டுள்ளது. இருவரும் அருகருகே தோளின் பின்புறமாகக் கைபோட்டுள்ளார்கள். கைகளில் முள்ளுக் கரண்டியும், கத்தியும் உள்ளன. இருவர் முகங்களும் உருத் தெரியாமல் சேர்ந்துள்ளன. தசை மடிப்புகள், தசையின் திரட்சி ஆகியன ஒளி நிழற்படுத்திக் காட்டப்பட்டுள்ளன. ஒரு மேசையின் மீதே இவ்வுடல்கள் உள்ளன. உடலில் இருந்து தொங்கும் ஒரு தசைப்பகுதி, ஆணியால் மேசையுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஸ்பானியாவில் நடைபெற்ற சிவில் யுத்தக் கொடுமைகளையே இவ் ஓவியம் வெளிப்படுத்துகின்றது. வழமையாக ஏற்படும் சரித்திர நிகழ்வு தான் சிவில் யுத்தம் என டாலி கூறியுள்ளார். ஆனால், "பிக்காஸோ" சிவில் யுத்தம் அரசியல் உணர்வு மிக்க ஒன்று எனக் கூறியுள்ளார். உடல்களின் பின்னால் மலைகளும், இடிந்த கட்டிடமும் இரத்தக் கறை படிந்த தரையும் காணப்படுகின்றன.


சல்வடோர் டாலி தனது மனைவியுடன்

"சர்ரியலிசத்துக்கு'' முக்கியத்துவம் வழங்கியவர் டாலி எனக் கூறலாம். இவரின் ஓவியங்களில் காரணத்துடன் தொடர்புபடாத சிந்தனையின் வெளிப்பாடு இரண்டு வழிகளில் விரிவாகின்றது. ஒன்று முழுமையான வினோதம், மற்றையது கனவு உலகம் ஒன்றை வெளிக் கொணர்தல் என்பனவாகும். முழுமையான வினோதம் என்பதற்கு எழுமாற்றாக எடுக்கப்பட்ட ஒரு பொருளோ அல்லது பொருட்கூட்டங்களோ குறியீடுகள் ஆகின்றன. கனவு உலகம் ஒன்றை வெளிக் கொணர்தல் என்பதற்கு, அரூப உருவங்களோ அல்லது சிதைவடைந்த உருவங்களோ அல்லது சுயாதீனமான கற்பனை வடிவங்களோ அல்லது முப்பரிமாண வடிவங்களோ குறியீடுகள் ஆகின்றன. ஓவியங்களை எவ்வளவுக்கெவ்வளவு வரைந்தாரோ அவ்வாறே அவர் எழுதினார். திறமைக்கும் மேதாவித் தனத்துக்குமிடையேயும் நல்லதிற்கும் கெட்டதிற்கும் இடையேயும் இடர்ப்பட்டுக் கொண்டிருந்தார்.

O

கோ.கைலாசநாதன்

நன்றி - நூலகத்திட்டம்



# இரண்டாம் பிறப்பு (அல்லது) சென்னைக் கண்கள்

உயிர்களில் ஆண், பெண் என இருவகைப் படைப்புக்கள் உண்டு. ஆண்பால் பற்றியே பெரும்பாலான இலக்கியங்கள் பேசுகின்றன. பெண் நிலை பற்றிய படைப்புக்கள் மிகவும் குறைவுதான். பெண் - ஒரு புதிர் என்று பரவலாகவும் ஏளனமாகவும் பேசுவதுண்டு.

ஆண், பெண் தவிர மூன்றாவது பாலும் (Third Genter) இருக்கிறது. அலிகள் என்று கொச்சையாகவும், அரவானிகள் என்று உயர்ந்த பண்பாளர்களாலும் அழைக்கப்படுகிறார்கள்.

தமிழ் இலக்கியத்தில் சித்தர்கள் ஆணாகி, பெண்ணாகி அலியாகி என்று பாடுகின்றனர். சிவன் ஆண், பெண் இணைந்த அர்த்தநாரீஸ்வரராகக் காட்சியளிக்கிறார்.

இலக்கியத்தில் இவர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டாலும், இவர்கள் வாழ்க்கை சோகமானது. கொடுமையானது, ரகசியமானது.

இவர்கள் பிறவியிலேயே அரவானிகளாகப் பிறப்பவர்கள். ஆனால், இந்தப்பிறப்பின் ரகசியத்தை இவர்கள் உணரத்தொடங்குவதோ தங்கள் பத்து வயதுக்கு மேல்தான். தங்கள் உடலில் ஏற்படும் வினோதமான மாற்றங்கள், உணர்வுகளால் வெளியே சொல்ல முடியாமலும் மறைக்க முடியாமலும் அவதிப்படுபவர்கள்.

ஆனால், சமூகம் இவர்களை அங்கீகரிப்பதில்லை. குறிப்பாகத் தமிழ்நாட்டில் இவர்கள் வாழ்க்கை, சமூக விரோதிகளால் சீரழிக்கப்படுகிறது.

சமீப காலமாக அரவானிகள் மீது சமூகவியலாளர்கள் பார்வை திரும்பியிருப்பது ஆரோக்கிய மான ஒரு திருப்பம். அதிலும் இத்தாலியைச் சேர்ந்த ஒரு பெண்மணி தமிழ்நாட்டு அரவானிகள் வாழ்க்கை பற்றி ஒரு திரைப்படம் எடுக்கத் துணிந்திருப்பது பாராட்டுக்குரிய நிகழ்வு.

இத்தாலியப் பெண் இயக்குநரான இலாரியா பிரஸ்ஸியா (Elariya Berssiya) அரவானிகளைப் பற்றிய 85-நிமிடக் கதைப் படத்தைத் தயாரித்துள்ளார். அரவானிகள் பற்றிய பல அரிய தகவல்களைத் தந்து, திரைக்கதை அமைத்து, அரவானிகள் பற்றி திரைப்படம் எடுப்பவராக முக்கிய பாத்திரத்திலும் நடித்து இப்படத்திற்கு உயிர் சேர்த்திருப்பவர் ஒளிப்பதிவாளரும், இயக்குநருமான அருண்மொழி.

இத்திரைப்படம் சமீபத்தில் சென்னை மாக்ஸ் முல்லர் பவனில் திரையிட்டுக் காண்பிக்கப்பட்டது. அரவானிகள் அரவானிகளாகவே நடித்துள்ள, சிறிதும் விரசமில்லாத, அரவானிகள் வாழ்க்கைக்கு மதிப்பேற்றக்கூடிய அருமையான திரைக்கதையமைப்பு.



பிறப்பால் ஆணாகத் தெரிந்து சரவணன் என்று பெயரிடப்பட்டு, பின் சாரதாவாக மாறுகிறார். அரவானிகளைப் பற்றிய ஆய்வில் இறங்கும் அருண்மொழி, ஒரு உணவகத்தில் கை தட்டிக் காசு வாங்கும் சாரதா என்ற அரவானியைத் தற்காலிகமாகச் சந்திக்கிறார். அவரோடு அன்பாகப் பேசி, உணவு வாங்கிக்கொடுத்து, பணம் கொடுத்து, அவரோடு பழகுகிறார். தனது அறைக்கு அழைத்துச் சென்று அவரைப் பற்றிய தகவல்களைச் சொல்லச் சொல்ல எழுதுகிறார்.

கரூர் பக்கத்தில் ஒரு கிராமத்தில் பிறந்த சரவணன், அடிக்கடி கோயில்களுக்குச் சென்று, பிராமணர்கள் கூறும் சமஸ்கிருத மந்திரங்களைக் கற்கிறார். பின்பு அருகில் உள்ள அய்யனார் கோயிலில் பூசாரியாக இருக்கிறார். பின்பு 20வயதில் தனது உடலில் மாற்றங்கள் ஏற்படுவதை உணர்கிறார்.

இதன் பிறகு, தற்செயலாக யாகூப் என்பவரைச் சந்திக்கிறார். அரவானியான யாகூப் சமூக



விரோதிகளால் விபச்சாரத்தில் ஈடுபட்டு தாக்கப்பட்டு சாலையில் விழும் போது சரவணன் அவரைக் காப்பாற்றி, அரவானிகள் இருப்பிடத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறார். அங்கு சேவியர் என்பவரைச் சந்திக்கிறார். அங்கு அரவானிகள் பலர் ஜமாத் என்ற பெயரில் குடும்பமாக இணைந்து வாழ்வதைக் கவனிக்கிறார். அதன் பிறகே தாமும் ஒரு அரவானி என்பதை முழுமையாக உணர்கிறார். மேலும் ஜரினா போன்ற அரவானிகளும் அந்த ஜமாத்தில் இருக்கின்றனர்.

ஒரு நாள் சரவணனுக்கு ஒரு வினோதமான கனவு வருகிறது. விதவிதமான சேவல்கள் சரவணனைச் சூழ்ந்து கொள்கின்றன. அங்கு அவனது அம்மாவும் இருக்கிறாள். ஒரு தட்டில் மாமிசத்தை வைத்து உண்ண அழைக்கிறாள். திடுக்கிட்டு விழிக்கும் சரவணன் சேவியரிடம் கூறுகிறான். சேவல், பொட்டைகளின் (அரவானிகள்) தெய்வம் என்றும், மாதாவே தாய் ரூபத்தில் வந்துள்ளார் என்றும், நீயும் பொட்டையாகி ஜமாத்தில் சேரலாம் என்றும் சேவியர், சரவணனிடம் கூறுகிறார்.

மகாபாரதத் தெருக்கூத்தில் அர்ஜுனன் அலியாக மாற சபிக்கப்படும் காட்சியைப் பார்த்த சரவணன் மனதில் அதன் பாதிப்பு ஏற்கெனவே இருக்கின்றது.

சரவணன் ஜமாத்தில் சேர்ந்து அரவானியாகிறார். அதற்கான சடங்குகள் முறைப்படி நடைபெறுகிறது. சேவியர் மற்றும் நானி (பாட்டி) ஆகியோர் சரவணனுக்கு சாரதா எனப் பெயர் சூட்டி மகளாகத் தத்து எடுக்கிறார். பின், 'நிர்வாண' சிகிச்சை அளிக்கப்பட்டு சாரதா முழுமையான 'பொட்டை" ஆகிறாள்.

சாரதா தனது கதையைக் கூறுவதுபோல காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. இதற்காக சாரதாவுடன் பல இடங்களுக்கும் அருண்மொழி செல்கிறார். இடையில் சாரதா காணாமல் போய்விடுகிறார். சாரதா இல்லாத வெறுமையால், அவளைத் தேடி அவளது சொந்த ஊருக்குச் செல்கிறார். பொங்கல் பண்டிகை என்பதால் தன்னுடைய வீட்டுக்கு வந்துவிட்டதாக சாரதா கூறுகிறார். அங்கு சாரதாவின் தாயாரைச் சந்தித்து, அருண்மொழி பேசுகிறார். பெண் உருவமாக மாறிய பின்னரும் சாரதாவை அவரது தாயார், சரவணன் என்றே அழைக்கிறார். "அவன் பொறக்கும் போது பையனாகத் தான் பொறந்தான். எனக்கு இப்பவும் அவன் சரவணனாகத் தான் தெரிகிறான். நான் அவனை அப்படித்தான் கூப்பிடுவேன்." என்று கூறுகிறார். அவர் அப்படிக் கூறுவது மனதுக்கு நிறைவையும், மகிழ்வையும் ஒரு சேர அளிக்கிறது. பெரும்பாலான அரவானிகள் வீட்டை விட்டே விரட்டியடிக்கப்படும் நிலைதான் அதிகமாகத் தமிழகத்தில் நிலவுகிறது.

அவலமும், சோகமும் நிறைந்த வாழ்வுக்குப் பின்னாலும் அவர்களால் ஆடல், பாடல் போன்ற பொழுது-



போக்குகளில் மகிழ்வோடும், மன நிறைவோடும் ஈடுபட முடிகிறது. ஜரினா என்ற முருகேஸ்வரி மிகப் பிரமாதமாக ஆடி அரச வைக்கிறார்.

இந்தக் கதையினூடாக அரவானிகளின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்ட முயன்றிருக்கிறார்கள். பதாய் செல்லுதல் - கடை வீதிக்குச் சென்று கடை கடையாக ஏறி இறங்கிக் கைதட்டி வசூல் செய்வதை அரவானிகள் பதாய் வாங்குவது என்று குறிப்பிடுகின்றனர். திருமணங்களுக்குச் சென்று ஆடல், பாலில் ஈடுபடுவது, தம்பதிகளை ஆசீர்வதிப்பது, விபச்சாரத்தில் ஈடுபடுவது என பல நிலைகளில் கழிகிறது இவர்களின் வாழ்க்கை. சமூகத்தின் கண்களுக்கு எப்படித் தெரிந்தாலும் அவர்கள் ஒரு குடும்பமாக வாழ்வதும், அவர்களுக்குள் கட்டுப்பாடான ஒழுங்குகள் இருப்பதும் இப்படத்தின் மூலம் தெரிய வருகிறது.

'ஜமாத்' குடும்பத்துத் தலைவியான சேவியர் ஒப்பாரி பாடுகிறார். இந்திரா காந்தி மறைவைத் தொடர்ந்து இவர் ஒப்பாரி பாடி வருகிறாராம். இவர் திண்டுக்கல் அருகே வசிக்கிறார். இப்படத்தின் பல காட்சிகள் இப்பகுதியிலேயே படமாக்கப்பட்டுள்ளன என்கிறார் இதன் திரைக்கதை அமைப்பாளர் அருண்மொழி.

இப்படம் 'லைவ் சவுண்ட்' முறையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நவீன உத்தியில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட முதல் தமிழ்ப்படமும் இதுவே. புனே திரைப்படக் கல்லூரியில் பயின்ற ஆர். இளங்கே இப்படத்தின் ஒலிப்பதிவாளர். இதன் தயாரிப்பாளர்கள் ஈவ். எம். சில்வேஸ்டர், ஒளிப்பதிவு என்ரிக்கோ ஜியோன்.

**- திருவுடையான்**

நன்றி: ஆறாம் திணை

## விலங்கிடப்பட இருந்த நாளொன்றில் எழுதிய அஞ்சலிக் குறிப்பு


நீ துப்பாக்கியை இழுத்துக் கொண்டு நடந்து வருகிறாய்
உனது தோள்களில்
தோட்டாக்கோர்வைகளும் பதவிப்பட்டிகளும் தொங்கிக் கொண்டிருக்கின்றன
கண்மூடித்தனமாய்.
உன்னை நான் எப்படி வர்ணிப்பது
என்னிலிருந்து அஞ்சித்தெறிக்கின்றன சொற்கள்.
மழிக்கப்பட்ட உனது முகத்தில்
ஈ கூட உட்கார அஞ்சுகிறது.
உனது வரவைக்குறித்து
யாரும் மதுக்கிண்ணங்களை உயர்த்தவில்லையாயினும்
துப்பாக்கியை இழுத்துக் கொண்டு நடந்து வருகிறாய்
நீயே உனது வெற்றியைச் சொல்லியபடி.
00
இருண்ட காலத்தின் இதேகுரலில் பாடிய
துரதிஷ்டம் மிக்க பாடல்களனைத்தையும்
மணல் மூடிற்று - நேற்றிரவு அதில் கோரைப்புற்களின் மிகச்சிறிய
முளைகளை நான் கண்டேன்.
நெஞ்சில் மிதித்தபடியாய் பீரங்கி வண்டிகள் நகர்கின்றன
கிராமங்களையும் சிதைத்தழிக்கப்பட்ட
பழைய நகரங்களையும் நோக்கி.
எனது விரல்கள், எப்போதும் நடுக்கமுறாத எனது விரல்கள்
உனது விழியில் நடுங்குகின்றன,
நீயோ சொற்களாலும் துப்பாக்கியாலும்
எனது மனிதர்களின் நெஞ்சுக்கூட்டில் ஓங்கி அடிக்கிறாய்.
என்னிடமோ
உனது நெஞ்சு வெடித்துச் சிதறும்படியாய்
அடித்துச் சாய்ப்பதற்கு எதுவுமே இல்லை
எனினும்
துடிக்கும் எனது கைகளால் ஓங்கி ஒரு அறை விடவே விரும்புகிறேன்
உனது கன்னத்தில்.
விலங்கிடப்பட்ட எனது கணத்தில், நீ துப்பாக்கி இழுத்துக்கொண்டு
நடந்து வருகிறாய்.
உ
யாரோ சொன்னார்கள்
'அவனிடமிருந்து துப்பாக்கியை பிடுங்கி எறி
பதவிகளால் தொங்கிக்கொண்டிருக்கும்
சீருடையைக் கிழித்து வீசு
ஒரு தந்தையாய்,குழந்தையின் நிலவு நாளொன்றின் தயார்ப்படுத்தலுக்காக
உழைக்கவும்
தாய் தந்தையரின் எதிர்பார்ப்புக்காக துயருறவும் கூடிய
மிகச் சாதாரணமான மனிதனாய்
உன்னைப்போலவே மாற்று அவனை:
அல்லது நானுனக்கு சொல்கிறேன்
அவனது துப்பாக்கி
உன்னை நோக்கியிருக்காத தருணத்தில்
அந்தச் சனியனை
கணத்தில் அவனை எதிர்பார்க்காத கணத்தில்
அவனை நோக்கித் திருப்பு,
உனக்கு முன்னரே அவனது குடலில் புதையும் அவனது உயிர்.
நீ அஞ்சாதே.
உன்னை அவர்கள் கொல்வார்கள்.
நிச்சயமாக நீயே அதை உணர்வாய்:
அப்பரிசு
நிச்சயமற்ற உனது காலத்தில்
எப்போதாவது உனக்குக் கிடைக்கத்தான் போகிறது.
வசத்தால், நீ தந்தை என்பதை அவர்கள் மறுத்ததைப் போலவே
நீ ஒரு பெண்ணை நேசிக்கியாய் என்பதையும், அவள் உனக்காகவே
வாழ்கிறாள் என்பதையும்
அவர்கள் மறுத்ததைப் போலவே
உனது தாயின் கண்ணீரை, அவர்கள் துப்பாக்கியின் நெருப்பில்
காய்ச்சியதைப் போலவே,
நீயும் அவனிலிருந்து எல்லாவற்றையும் மறு, சாகும் தருணத்தில்'
00
நான் நினைக்கிறேன்
இந்த யுகத்தின், சிறையில் இருப்பதும்
செத்துப் போவதும் ஒன்றுதான்.
3
உழுத வயல்களே
முளைக்கப் போடப்படாத தானியங்களே
வாழ்வளித்தப் பன்நெடுங்காலத்தின் நிழலே
சொல்,
துப்பாக்கியின் செதுக்கப்பட்ட சிற்பங்களை
உன்னில் நட்டுவைத்தது யார்
நட்டுவைத்தது யார்?
அவர்களை நோக்கி
விரல்களை நீட்டவில்லை எங்களில் யாருமே:
மூடிக் கட்டிய பச்சை வண்டிகளில்
யாரையும் விலங்கிட்டுச் செல்லவில்லை துப்பாக்கியின் முனை மழுங்க,
எங்களின் குதிரைகளைக் கொன்று
அவர்களின் தேவதைகளை கடத்திவரப் போனதேயில்லை எப்போதும்.
00
அவர்களோ சிலுவைகளையும் முள் முடிகளையும் எறிந்தார்கள்
நாங்கள் எழுதிய கவிதைகளில் தீப்பந்தங்களை செருகினார்கள்
எமது விழிகள் வரைந்த ஓவியங்களோ
இரவின் காட்சிகளாய் ஒளிமங்கிப்போயின
அவர்கள் தமது குதிரைகளோடு எமது தேர்ப்பாதைகளெங்கும்
வெறிபிடித்தலைந்தார்கள்
கிளம்பிப் படர்ந்த புழுதியில் நேற்றைய எமது ஒளியை
நாங்கள் இழந்தோம்.
4
தெருவின் இருளை இடரும்குடிகாரப் பெண்ணொருத்தியின்
பேச்சில் கிறங்கி
இன்னொரு கூட்டம்
இதே தெருவில் துணி அவிழக்கிடக்கிறது,
வெட்கித் தலைகுனியும் நீ
போய்விடு:
புழுதியில் செத்த ஒளியின் சிறகுகளைத் தேடியாவது
நீ போய்விடு.

- போஸ் நிஹாலே
18.11.1999

நன்றி - நூலகத்திட்டம்



# அக்கினிக் குஞ்சாய் உயிர்த்தெழு!




பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான செயல்வாதத்தை சமீபகாலமாக, பெண்கள் அமைப்புக்கள் முன்னெடுத்து வருகின்றன. இதில் மட்டக்களப்பில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், இச்செயல் திட்டங்களில் ஈடுபட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. இந்த வகையில் பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான செயல்வாதங்களுக்குரிய அடையாள நாட்களாக நவம்பர் 25 தொடக்கம் டிசெம்பர் 10 வரை கொள்ளப்பட்டன.

இத்தினத்தினை அனுஷ்டிக்கும் முகமாக சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரால் 10.12.99 சார்ள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள் பற்றிய மதீப்பீடாக இக்கட்டுரை அமைகிறது. இதனைக் கலை நிகழச்சிகள் என்று கூறுவதைவிட, கவிதை, பாடல், நாடகம் மண்டபத்ினுள் வைக்கப்பட் சுவரொட்டிகள் முதலாக இவையனைத்தும் தொகுக்கப்பட்ட ஒரு தனிக்கலை ஆற்றுகையாக அமைந்திருந்தது என்பதே பொருத்தமானது.

சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் கலாசாரக் குழுவினரால் மேற்படி ஆற்றுகை நிகழ்த்தப்பட்டிருந்தது. அதில் பங்குபற்றியோர் கிட்டத்தட்ட 15பேர் கொண்ட குழு என்று குறிப்பிடலாம்.

இந்நிகழ்ச்சி அளிக்கை

**"கரங்களை இணைத்துப் பெண்களைக்**
**காக்க**
**ஏற்ற வழி அமைப்போம்**
**துயரம் என்றே ஒன்று இல்லை என்றே — நாம்**
**கூவி அழைத்திடுவோம்**

— — — — — — — —

**வீட்டினுள்ளே நாம் முடங்கி இராமல்**
**வெளியுலகைக் காண்போம்**
**விழிப்புடனே என்றும் இருந்து விட்டால்—புது**
**உலகையே கண்டிடுவோம்...."**

எனத் தொடங்கும் பாடலுடன் ஆரம்பமாகியது. மேடையில் மூன்று பெண்கள் நின்று பாடலைப் பாட ஏனையோர் பார்வையாளர்களுள் இருந்து சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் அப்பாடலைப் பாடிக்கொண்டு மேடையில் சங்கமமாயினர். அச்சுலோக அட்டைகளில்,

1. வீதிகளில் பெண்கள் மீதான கேலிகளை நிறுத்து

2. பெண் உரிமைகளும் மனித உரிமைகளே

3. சிறுமிகள் மீதான பலாத்காரத்தை நிறுத்து

போன்ற கோஷங்கள் எழுதப்பட்டிருந்தன.

ஆற்றுகையின் அடுத்த தொடர்நிகழ்வாக "ஒரு பிஞ்சு உள்ளத்தின் சோகக்குரல் எழுந்தது. ஆண் ஆதிக்கத்தின் கொடுமையை பிஞ்சு வயதில் அனுபவித்ததன் வெளிப்பாடு அது.

சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்யும் கொடுமைக்கு எதிராக ஒலிக்கும் பாடலான..

**"பாரினிலே வாழுகின்ற மானிடர்களே — இந்தப்**
**பிஞ்சு உள்ளம் சொல்வதைத் தான்**
**கேட்க வாங்களேன்.**
**உலகத்தையே அறியாத சின்னப்பிள்ளை நான்**
**பெண் என்று அறியாத குட்டிப்பிள்ளை நான்**
**ஆணைக் கண்டால் எட்டித்தூர ஓடத்தோனுதே**
**— ஐயோ**
**பயத்தில் எந்தன் உடம்பெல்லாம் பதறவாகுதே..."**

என வரும் பாடல் விஜிகலா என்பவரால் உண்மையான உள்ளார்ந்த அர்த்தத்தோடு உருக்கமான முறையில் பாடப்பட்டது.

தொடர்ந்து கவிதா நிகழ்வு இடம்பெற்றது. இக்கவிதா நிகழ்வின்போது ஒவ்வொருவரும் தமக்கு கொடுக்கப்பட்ட கவிதை வரிகளை மிகுந்த அவதானத்துடனும், உணர்வுபூர்வமான முறையிலும் வெளிப்படுத்தினர் என்று கூறினால் மிகையாகாது. ஒவ்வொருவரும் தனித்தனியாக ஒழுங்குமுறை தவறாமல் தமது நிகழ்வினை நிகழ்த்திக் காட்டினர். அக்கவிதை வரிகளில் சில...

**"சிறிய மலராய் விரிந்து மலரும்**
**என் மகளுக்கு**
**எப்படிக் காட்டுவேன்**
**இந்த உலகை**

— — — — — — — —

**பெண்ணென்று பிறந்ததிற்காய்**
**பெருமைப்படவேண்டுமென்று**
**கனவுகளில் திளைத்திருந்த**
**என் தாய்மை!**

**சிறகொடிக்கப்பட்ட ஒரு**
**ஒற்றைத் தும்பியாய்**
**திகைத்துப் போய் மிரண்டு கிடக்கிறது**

**வக்கிரம் நிறைந்த விலங்குணர்வின்**
**குரூரம் நிறைந்த கயமையின் முன்னால்**
**சிதறிப் போயிற்று சில்லம் பில்லமாய்**

**மூன்று வயதிலும்**
**பால்முலையருந்தும். பவளவாய் குருத்துக்கள்**
**கொஞ்சிக்குலாவி நிலாக்காட்டி சிரிக்கும்**
**சின்ன வயதிலும்**

**ஆண்குறிகளால் துளைக்கப்படுவதை**
**எப்படிக் காட்டுவேன்**

**உன்னை மீறிய எந்தக் குறியும்**
**உன் உடலைத் தீண்டாதவாறு**
**அக்கினிக் குஞ்சாய்**
**உயிர்த்தெழு!**

மேற்படி கவிதைக்குச் சொந்தக்காரி கவிஞை ஔவை விக்னேஸ்வரன் ஆவார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த கிருஸ்டி எனும் இயற்பெயரினை உடைய சுபத்திரா என்பவரால் இயற்றப்பட்ட,



**"பத்து மாசம் சுமந்து பெத்தோம் —**
**—ஏலேலங்கடி ஏலோ**
**இதில் ஆணு என்ன பொண்ணு என்ன —**
**—ஏலேலங்கடி ஏலோ**
**ஆணப் பெத்த ஆட்ட மென்ன ஏலேலங்கடிலோ**
**இதில் பொண்ணப் பெத்தா**
**கலக்கம் என்ன ஏலேலங்கடி ஏலோ..."**

எனத் தொடங்கும் பாடலாகும். பத்து மாதம் சுமந்து தான் பெண்ணையோ, ஆணையோ பெறுகிறாள். ஆணைப்பெற்றால் ஆட்டம், பெண்ணைப் பெற்றால் கலக்கம். பெண்ணை ரவுடிக்கும்பல் வழிமறிக்கும், போகப்பொருளாய் குறைத்து வைக்கும். இதிலிருந்து விடுதலைபெற மார்க்கம் என்ன? அடிமைத்தனத்தைக் கேள்வி கேட்போம். அலைகடலாய் பொங்கி எழுவோம் என்று வீறுடன் பாடினர்.

இங்கு மிக முக்கியமாக அவதானிக்க வேண்டியது என்னவெனில் பாடல்களுக்கு கையாளப்பட்ட வாத்தியங்கள் அனைத்தும் கலாசாரக் குழுவினராலே கையாளப்பட்டன. இதற்கென எந்தத் துணை வாத்தியக் கலைஞர்களையும், பயன்படுத்தவில்லை. இவர்கள் தாளம் மரக்காஸ், ரபானம், பேரிகை போன்ற வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தினர். இங்கு எந்தப் பிசகலுமின்றி சுருதியும் லயமும் ஒருங்கு சேர்ந்து இருந்தன. கலாசாரக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள பயிற்சி முறைமையினையே இது எடுத்துக் காட்டுகின்றது.



அடுத்து "நிசப்த இரைச்சல்" எனும் நாடகம் தொடர்ந்தது. வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவங்களை தாம் நேரில் கண்டதையும், பிறர் கூறிய உண்மையான அனுபவங்களையும் கேட்டு அதனைத்தொகுத்து தாம் அதனை உள்வாங்கி கவிதைபோலவும், கதைபோன்றும் எனப் பல்வேறு உத்திமுறைகளைக் கையாண்டு இதனை நிகழ்த்திக் காட்டியமை மிகவும் பாராட்டுக்குரிய விடயமே ஆகும். ஏனெனில், தயங்கும் விடயங்களை மிகவும் சாதாரண முறையில் அவர்கள் எடுத்துக் கூறியமை அவர்கள் மீது ஒரு மரியாதையையே ஏற்படுத்தியது. இந்நாடகத்தின் மையக்கரு எந்த விதத்திலும் சிதைந்து போகாமலும் அன்றைய நாளினை நினைவு படுத்தும் முகமாகவும் நாடகம் அளிக்கை செய்யப்பட்டதோடு மாத்திரமல்லாமல் அந்நாடகத்தில் ஒவ்வொரு சம்பவத்தை எடுத்துக் கூறும்போதும் அதன் முடிவில் எல்லோரும் சேர்ந்து "சமுதாயத்தின் நிசப்தமோ பயங்கர இரைச்சலாய் என் மன நிம்மதியைக் கெடுக்கிறது" எனும் வரிகளை நாடகத்தின் கரு இசை போல் நகர்த்திச் சென்றமை நாடக வாக்கத்தினை நன்கு வெளிப்படுத்துவதாகக் காணப்படுகின்றது.

மேடையின் மையத்தில் பெண்களை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தும் அதிகாரச் சின்னமானது ஒட்டுச்சித்திரங்களின் காட்சி வெளிப்படாகத் தோற்றமளித்திருந்தது. இத்துடன் ஆற்றுகை செய்வோர் ஒவ்வொருவரும் வெவ்வேறு நிலைகளில் காட்சி அளித்தனர். ஒவ்வொரு கதைகளைக் கூறும் போதும் அவர்களுக்கேற்பட்ட உணர்வு வெளிப்பாடுகளைப் புலப்படுத்துவனவாக அந்நிலைகள் அமைந்திருந்தன. நீண்டசீலைகளை தோள்களில் தாங்கி இழுத்து வருவதனைக் குறிப்பதாக அமைந்திருந்த[illegible] இவ்வாறாக இவர்கள் பெண்களுக்[illegible] இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கூறி இவைகளுக்கு எதிராகப் போராடத்துணிந்தவர்கள் என்பதையும், யுகங்களின் மௌனத்தைக் கலைப்போம். அடக்கி அடக்கி பெண்ணை ஒடுக்கும் சிந்தனையை சிதறடிப்போம். மூடிக்கிடந்த கதவுகள் முற்றுகை தகர, ஆக்கப்பாதை ஒன்றுதேடி புயலாகப் புறப்படுவோம் எனக் குரலெடுத்து,

**"மூடிக்கிடந்த கதவுகள் முற்றுகை தகர்ந்தது**
**தேடித்தேடி அலுத்த வாழ்வில்**
**—பாதை ஒன்று தெரியுது."**

எனும் பாடலினைப் பாடி தமது நிகழ்வினை பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான செயல்வாதத்தினை முதன்மைப்படுத்தும் வகையில் நடாத்தி முடித்தனர்.

இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவெனில் இக்கலாசாரக் குழுவில் பங்குபற்றிய பெண்கள் பெரும்பாலானோர் மேற்படி எந்தத் துறையிலும் கல்வி பயிலாதவர்கள். செயற்பாடுகளினூடாக தங்களைப் புடம் போட்டுக் கொண்டவர்கள். வரன்முறையான பயிற்சியினைப் பெறாதவர்கள். மேலும் இவர்கள் அனைவரும் கிராமப்புற யுவதிகள் அதேபோன்று பார்வையாளர்களில் பெரும்பாலானோர் கிராமப்புற மக்களே என்பதும் மிகவும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.


ஆற்றுகையை ஓர் ஒழுங்கு முறைமையுடன் இணைத்து புத்தெழுச்சியை எல்லோர் மனதிலும் ஏற்படுத்தினர் என்றே கூறலாம்.

த.கீதாதேவி

□

நன்றி - நூலகத்திட்டம்






## மாயைகள் மற்றும் பிழைப்புவாதம் குறித்து

### -சில குறிப்புகள்

உங்களுடைய பத்திரிகையின் நீண்டகால வாசகர்களில் நானும் ஒருவன் அறிவுத் தாகமும் புதுமைத் தேடலும் உள்ளவர்களுக்கு உங்களுடைய இதழ்கள் சிந்தனைச் சோலையாகவே அமைகின்றன. எனினும் அவ்வப்போது விசனந்தரக் கூடிய சில விஷயங்களும் இடம் பெற்று விடுகின்றன.

சாதியமைப்பு, தலித்தியம், பாராளுமன்ற அரசியலில் பெண்கள் போன்ற பல அற்புதமான விஷயங்களை ஒரு நல்ல சமூக வரலாற்றாசிரியனாக நின்று எழுதி வருபவர் என்.சரவணன். அவருடைய சிங்கள சாதியமைப்பு சில குறிப்புகள் என்ற சென்ற இதழ்கள் கட்டுரையில் (சரிநிகர் நவ.25 - டிசெ 08) கரையார் சமூகம் போர்க் குணம் மிக்கது என்ற விக்டர் ஐவனின் கருத்தை அப்படியே பிரதிபலித்திருந்தார். அது சரியன்று. ஒவ்வொரு சாதியும், ஏன் ஒவ்வொரு இனமும் தனது பெருமை பேசுவதற்காகவும் சாதியமைப்புப் படிநிலையில் மேனிலையாக்கம் பெறுவதற்கும் இத்தகைய ஐதீகங்களையும் புனைகதைகளையும் உருவாக்கி வருகின்றன. எம்.டி.ராகவன், மைக்கேல் றொபேட்ஸ் போன்ற மானுடவியலாளர்கள் கரையார் சமூகத்தில் எப்படி இத்தகைய மாயைகள் இருக்கின்றன என்பதைப் பற்றி நீண்ட காலத்துக்கு முன்பே எழுதியுள்ளனர். இத்தகைய கட்டுக்கதைகள் அபாயகரமான வகைமாதிரிகளுக்கே (Stereo types) வழிவகுக்கும். கரையார்களைப் பற்றி மட்டுமல்ல பள்ளர்கள், பறையர்கள், வேளாளர் பற்றியும் இத்தகைய வகைமாதிரிகள் (Stereo types) ஆபத்தானவை தான். எனவே இவை பற்றி விமர்சனபூர்வமாகவும் எச்சரிக்கையாகவும் இருப்பது பயனுள்ளது.

அதே இதழில் கண்ணாடியும் கல்லும் பெண்கள் அமைப்புக்களும் என்ற தலைப்பில் செல்வி திருச்சந்திரன் எழுதியிருப்பது சிரிப்பையும் அவர் மீது அனுதாபத்தையும் தான் கிளப்புகிறது. 'களத்தில் இருந்து வேலை செய்வதாக' தன்னுடைய இருப்பிடத்தை (Location) ஐ ஒரு கவசமாக வலுவாகப் பயன்படுத்திக் கொண்டு இவர் உதிர்க்கும் மணிமொழிகளைப் பார்க்க வேண்டி இருக்கிறது.

1. 'பெண்கள் அமைப்புகள் வேறு பெண்கள் இயக்கங்கள் வேறு' என்று அவர் குறிப்பிடுவது வேடிக்கையானது. பெண்ணிய இயக்கங்களைப் பொறுத்த வரை அமைப்புக்கும், இயங்கங்களுக்கு மிடையேயான ஒரு சேதனாபூர்வமான இணைப்பை அவை வலியுறுத்திச் செயல்பட்டு வருகின்றன. NGOக்களைப் பொறுத்தவரை அவை ஆரம்பத்தில் இயக்கங்களாகத் (Movement) தொடங்கி பிறகு அமைப்புக்களாக (Organization) மட்டுமே குறுகி விட்டன. அமைப்பு, இயக்கம் என்று பிரிப்பது செல்விக்கு வசதி தான். ஏனெனில் அவரே கூறுவது போல - 'சந்தர்ப்பத்துக்கும் அவரவர் கொள்கைக்கும் ஏற்ப' - வசதிக்கேற்ப முகமூடிகளை மாற்றிக் கொள்ளலாம்.

2. சமூக முன்னேற்றம் பேசுவோர் என்ற வரிசையில் புரொன்ட் லைன் (Front Line) ஐயும் இந்தியா ருடே (India Today) ஐயும் அவர் சேர்த்திருப்பது என்ன அடிப்படையில் என்று தெரியவில்லை. இந்தியா ருடே இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சிக்கும் இந்து பாஸிஸத்துக்கும் மிகுந்த ஆதரவாக செயல்படுகிற ஒரு பத்திரிகை. பெண்ணியத்திலும் தலித்தியத்திலும் அதற்கு எவ்வகையான அக்கறையும் இல்லை. பத்திரிகை விற்க வேண்டும் என்பதற்காக 'மோஸ்தராக' உள்ளவற்றை இடையிடை அவர்கள் எழுதி விடுகிறார்கள் என்பதற்காக அது எப்படிச் சமூக முன்னேற்ற அக்கறையாகி விடும்? புரொன்ட்லைனோவெனில் இன்னும் அபச்சாரம்! பார்ப்பனியத்தையும் இந்தி - இந்துத் தேசியத்தையும் எந்தக் காலத்துக்கும் உரியதாக உயர்த்திப் பிடித்து வருகிற பத்திரிகை. இந்திய ராணுவத்தால் இலங்கைப் பெண்கள் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட போது அதனை மூடி மறைத்தவை மட்டுமல்ல - இலங்கைப் பெண்கள் நமது பேச்சுவழக்கில் Promiscuous. (மொழிபெயர்ப்பதானால் ஆட்டக்காரிகள்!) எனவே அவர்களாகவே வல்லுறவை வரவழைத்துக் கொண்டனர் என்று எழுதிய பத்திரிகை. இதே கருத்தில் தான் இந்தியா ருடே வாஸந்தியும் முன்பு குறிப்பிட்டிருந்தார். செல்வியினுடைய Humanist Feminism (மனிதாபிமானப் பெண்ணியம்!) என்ற வகுப்பில் இவையெல்லாம் அடங்குமோ என்னவோ? Economic and Political Weekly, Commualism Combat சஞ்சிகைகளின் தரத்தோடும் அவற்றின் முற்போக்கு அரசியலோடும் புரொன்ட்லைனையும் இந்தியா ருடேயையும் இணைப்பது செல்வியின் குறும் பார்வையைக் காட்டுகிறதா? அல்லது அதிகாரத்தில் உள்ள, அதிகாரத்துக்கு ஆலவட்டம் பிடிக்கிற பெரும் பத்திரிகைகள் மீது அவருடைய மோகத்தைக் காட்டுகிறதா என்பது தெரியவில்லை.

3. அவருடைய குறிப்பிலுள்ள மிகப்பெரிய அவல நகைச்சுவை என்னவென்றால் 'ரூபவாஹினியில் நான் பணிப்பாளராக இருந்த பொழுது சில பலவிடயங்களில் தீவிரமாகச் செயற்பட்டு இதில் திருப்தியும் அடைந்தேன்' என்று அவர் எழுதுவது. அது என்ன 'சில பல விடயங்கள்'? ரூபவாஹினிக்குள் அப்படி என்ன தீவிரமாகச் செயற்பட்டவர்? ரூபவாஹினி ஒரு பெருந்தேசியவாதத்தின் சிங்களக் குரல் என்பதை அவர் எவ்வாறு மாற்றி விட்டார்? ரூபவாஹினியின் அடிப்படையைத் தான் மாற்ற முடியவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். குறைந்த பட்சம் தமிழ் நிகழ்ச்சிகளையாவது 0.01 வீதம் அதிகரித்துள்ளாரா இந்தப் பணிப்பாளர்?

சும்மா போங்க அம்மணி. பெண்ணிலைவாதம், செயற்பாட்டுவாதம் எல்லாம் இப்போது பலருக்கு வெறும் பிழைப்பு வாதமாகப் போய் விட்டது!

**எஸ். சிவகணேசன்,** மட்டக்களப்பு.

## கைலாசபதியின் தகுதியும் ஆட்சியாளரின் திருப்தியும்

சரிநிகர் 184வது இதழில் வெளிவந்துள்ள பேராசிரியர் என். சண்முகரத்தினத்தின் கட்டுரை தொடர்பாகவே இந்தக் குறிப்பு. திருகோணமலையிலோ யாழ்ப்பாணத்திலோ பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்ற கோரிக்கை ஐம்பதுகளின் நடுக்கூற்றிலிருந்து தமிழர்களால் எழுப்பப்பட்டு வந்துள்ள போதிலும், 1974ன் நடுப்பகுதியில் திடீரென- தமிழர்கள் எதிர்பாராத வகையில்- அது அமைக்கப்பட்டதற்கு அரசியல் அக்கறை தான் காரணம். 1974 ஜனவரியில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த விடாது தடுக்க முயன்று தோற்ற ஐக்கிய முன்னணி அரசாங்கம், மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வில் தனது பொலிஸ்படை மூலம் தமிழ் மக்கள் மீது தாக்குதல் தொடுத்து ஒன்பது உயிர்களைப் பறித்தது. இதனால் தமிழ்மக்களின் வெறுப்பைச் சம்பாதித்து அவர்களிடமிருந்து மேலும், அந்நியப்பட்டது. உண்மையில் இந்தக் கசப்பான சூழலை மாற்றும் ஓர் அதிரடி நடவடிக்கையாகவே யாழ் பல்கலைக்கழக வளாகம் அமைக்கப்பட்டது.

".... இறுதியில் பல்கலைக்கழக வளாகம் (அப்போது எல்லாம் பல்கலைக்கழகங்களும் வளாகங்களாகவே இயங்கின.) அமைக்கப்பட்ட போது பேராசிரியர் கைலாசபதி அதன் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் ஒரு உயர் கல்வி நிறுவனத்திற்குத் தலைமை அளிப்பதற்கு அவர் பொருத்தமானவர் என்ற கருத்து கல்வியாளர்களிடம் காணப்பட்டதால் அந்நியமனம் வரவேற்கப்பட்டது..." என்று சண்முகரத்தினம் கூறுகிறார். கைலாசபதியிடம் தகுதி இருந்தது உண்மை தான். ஆயினும், அவரைப் போல் தகுதிபொருந்திய கல்வியாளர் பலர் தமிழர் மத்தியில் இருந்தும் (அவர்களிற் பலர் கல்வித்துறையில் கைலாசபதியை விடவும் முதுநிலை - சீனியோறிற்றி - உள்ளவர்கள்) அவர்கள் புறந்தள்ளப்பட்டுக் கைலாசபதிக்குப் பதவி வழங்கப்பட்டமைக்கும் அரசியற் பின்னணிதான் காரணம். 'பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும்' என்ற நூலில் (பக்.84) உள்ள சுபைர் இளங்கீரன் பின்வரும் வரிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

"நாங்கள் கைலாசின் பெயரை மிக ரகசியமாக வைத்துக்கொண்டதோடு, நியமனத்திற்கான முயற்சிகளையும் அந்தரங்கமாகவே செய்தோம். பிரதமருடன் சுனீத்திராவும், குமார் ரூபசிங்கவும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பேசினர். கல்வியமைச்சர் பதியுதீனுக்கு நெருக்கமானவரான எம்.சி.றஹூப்பும் கைலாஸ் மீது பெருமதிப்புள்ளவர்) நானும் கல்வியமைச்சரைச் சந்தித்தோம். சுருங்கச் சொன்னால் நாங்கள் எடுத்த முயற்சி வெற்றியடைந்தது. பேராசிரியர் கைலாசபதி யாழ். வளாகத் தலைவரானார்"

இதனைவிட யாழ்ப்பாணத்தில் நடந்த 'உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ளாது அதனைப் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் பகிஷ்கரித்திருந்தமையும் ஆட்சியாளருக்குத் திருப்தியை ஏற்படுத்தியிருக்கும்.

*கா. நடராஜன் கொழும்பு*

## நாய்க்கு நடுக்கடலிலும்...

—6

இலங்கையை, ஒரு சிங்கப்பூராக, ஹொங் கொங்காக மாற்ற விரும்பும் அவரது விருப்பம், எழுபதுகளில் ஜே. ஆர். ஜெயவர்தனவால் தெரிவிக்கப்பட்ட விருப்பம் தான். அதை நடைமுறைப்படுத்த, அவர் நாட்டை உலக வங்கியிடம், அடகு வைத்ததுடன், தாராள மூலதன இறக்குமதிக்கும், தரகு முதலாளித்துவ வளர்ச்சிக்கும் வழியைத் திறந்து விட்டார். இது நாட்டில் இருந்த சுய பொருளாதாரத்தை மோசமாகப் பாதித்ததுடன், இலங்கையை ஒரு உலகச் சந்தையின் பின்னிணைப்பாக மாற்றியது. இந்த நிலைமையை ரணிலின் கோட்பாடு தொடரும் என்பதனை அவரது அறிக்கை உறுதி செய்கிறது.

ரணிலின், மக்களுடனான உடன்படிக்கை, நாட்டைப் பீடித்துள்ள பிரதான பிரச்சினையைத் தீவிரமாகக் கணக்கிலெடுக்காததால், சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்த ஆரம்பக் காலம் போல, ஒரு இடைக்கால அமைதி நிலவினாலும், இனப் பிரச்சினை தீரும் என்பதற்கு உறுதியான சான்றுகள் எதையும் காண முடியவில்லை.

ஆக, தமிழ், முஸ்லீம் மக்களுக்கு, ஐ. தே. க. ஆட்சி புதிதாக எதைத் தரப் போகிறது என்பதை, அவருக்குத் தரகு வேலை செய்யத் தயாராகி உள்ள ரெலோ, ஸ்ரீ லங்கா முஸ்லீம் கட்சி தவிர, வேறு யாருக்கும் புரியவில்லை. அவர்களும் எதையும் தெளிவாகச் சொல்லவில்லை.

மொத்தத்தில், இந்த ஜனாதிபதித் தேர்தல் வழங்கப்போவது, வெற்று ஆட்சி மாற்றம் ஒன்றாகவே - குறிப்பாகத் தமிழ், முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரை - இருக்கும் என்று தோன்றுகிறது.

ஆக, திருவிழாவின் முடிவு எதுவாக இருந்தாலும், அது, 'நாய்க்கு நடுக் கடலுக்குப் போனாலும் நக்குத் தண்ணிதான்' என்ற நிலையைத் தான் தமிழ், முஸ்லீம் மக்களுக்குத் தரப் போகின்றது.

நமது தமிழ், முஸ்லீம் கட்சிகள், பந்தம் காவிகளாக இருக்கும் வரை, தமிழ், முஸ்லீம் மக்களின் தலை விதிக்கு மாற்று இருப்பதாகத் தெரியவில்லை.

## புலிகள்...

**புலிகளால் இந்த யுத்தத்தை வெற்றி கொள்ள முடியாதென்றா கூறுகின்றீர்கள்?**

புலிகளினால் முகாம்களை கைப்பற்றிக் கொள்ள முடியும். எனினும், வடக்கு - கிழக்கை முழுவதுமாக கைப்பற்றவோ, நிர்வாகிக்கவோ முடியாது. யத்த த்தை நீடித்துக் கொண்டு பொருளாதார, சமூக பிரச்சினையை ஏற்படுத்தவே அவர்கள் பார்க்கின்றனர். இதற்கு ஆங்கிலத்தில் "War of the flea" என்று கூறுவார்கள். அதாவது உண்ணி யுத்தம். உண்ணியானது நாயை பலவீனமாக்குவதைப் போன்றதொரு யுத்தி. வடக்கு - கிழக்கை கைப்பற்றிக் கொண்டு இலங்கை இராணுவத்தின் தாக்குதலுக்கு முகம் கொடுக்கத் தேவையான பலத்தை புலிகள் பெற்றுக் கொள்வார்கள் என நான் ஒரு போதும் எண்ண மாட்டேன். இதன்படி சமாதானத்திற்கே அதிக வாய்ப்பு காணப்படுகின்றது.

**பிராந்திய அரசாங்க முறை வரையான பலதரப்பட்ட தீர்வுகள் புலிகளுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் இவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தனி அரசுக்கான ஒரு மாற்றை தான் கோருகின்றார்கள். இதற்கு உங்களது தீர்வு என்ன?**

புலிகள் தற்போது திம்பு தீர்வுத் திட்டம் பற்றிக் கதைக்கின்றார்கள். திம்பு யோசனைகளில் பல பகுதிகள் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வடக்கு — கிழக்கு தமிழர் தாயகத்தை ஏற்றுக்கொள்வதைப் பற்றி....**

இலங்கை -இந்திய ஒப்பந்தத்தில், வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக பிற மக்களுடன் வாழ்ந்து வந்தனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. இது, அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நிலைமை.

**இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை புலிகள் ஏற்கவில்லையே?**

ஏற்றுக் கொண்டனர். அதில் கைச்சாத்திட்டனர். அவர்கள் வேறொரு பிரச்சினை காரணமாகவே ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறினர்.

**ஒற்றையாட்சி அரசு கோட்பாட்டில் இருந்து கொண்டு. புலிகளுக்கு பொருந்தக் கூடிய தீர்வினை முன்வைக்க முடியுமா?**

ஒற்றையாட்சி அரசாங்க முறை மற்றும் சமஷ்டி அரசாங்க முறை என்ற வகையில் முன்பு பாரிய பிரிவினை காணப்பட்டது. சமஷ்டி முறையில் இறைமை உள்ள அரசுகள் காணப்பட்டன. நாடுகள் பலவற்றை இணைக்கும் முறையாகவே அது கருதப்பட்டது.

எனினும், இன்று ஒற்றையாட்சி கோட்பாடு மாற்றமடைந்துள்ளது. ஒற்றையாட்சிக்கு உதாரணமாக ஐக்கிய இராச்சியம் கருதப்பட்டது. இன்று அதுகூட மாற்றமடைந்துள்ளது. இன்று அங்கு வட அயர்லாந்துக்கும், ஸ்கொட்லாந்துக்கும் என பாராளுமன்றம் உள்ளது. வேல்ஸ் பிரதேசத்திற்கு தனியான சபை உள்ளது. ஸ்பெய்னில் பாடக் போன்ற பிரதேசத்திற்கு தனித்த ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தென்னாபிரிக் காவில் வேறான முறை செயற்படு கின்றது. சீனாவில் ஒற்றை யாப்பின் கீழ் மாகாணங்களுக்கு பாரியளவில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இதன்படி ஒற்றை யாப்பின் கீழ் அதிகாரத்தை பகிர முடியாதென கூறும் கருத்துக்களை இன்று ஏற்க முடியாது. ஒற்றை யாப்பின் கீழ் நாட்டைப் பிரிக்காது, அதிகாரத்தை பிரிக்கக் கூடிய நிலைமை இன்று தோன்றியுள்ளது.

**பேச்சுவார்த்தைக்கான அடிப்படை நிபந்தனை வடக்கு — கிழக்கிலிருந்து அரச படைகள் வாபஸ் பெறப்படல் வேண்டும் என்பதாகும். நீங்கள் இதனை ஏற்க தயாரா?**

இது நம்பிக்கை தொடர்பான பிரச்சினை. முதலில் யுத்தத்தை நிறுத்துவது பற்றியே யோசிக்க வேண்டும். இதற்கு பேச்சுவார்த்தை நடாத்தி நம்பிக்கையையும், இணக்கத்தையும் ஏற்படுத்தல் வேண்டும்.

**தீர்வு ஒன்றை முன்வைக்கும் போது யாப்பு திருத்தம் தேவைப்படும். அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பலம் மற்றும் மக்கள் தீர்ப்பினாலான அனுமதி தேவை. உங்களால் இவற்றை பெற முடியுமா?**

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இதனை நான் தனியாகச் செய்யப் போவதில்லை. எனவே எதிர்க்கட்சி ஆதரவை நான் எதிர்பார்க்கிறேன்.

**எமது நாட்டின் எதிர்க்கட்சிகள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆதரவு தரமாட்டா. நீங்களும் உத்தேச தீர்வு யோசனைகளுக்கு ஆதரவு தரவில்லை அல்லவா?**

நான் அதற்கு எதிராக வீதிக்கு இறங்கவில்லையே. மக்களுடன் கலந்துரையாடி குறைகளை கவனத்தில் எடுத்து அந்த யோசனைகளை திருத்த வேண்டும் எனக் குறிப்பிட்டேன். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. இதனால் அதனை செயற்படுத்த முடியவில்லை. இந்தப் பொறுப்பு அரசாங்கத்திற்குரியது. வேறு யாருக்கும் உரியதல்ல.

நன்றி: யுக்திய

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## கைப் புண்ணும் கண்ணாடியும்

கைப் புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா? என்று கேட்பார்கள்.

வேண்டும் என்கிறது உயர் நீதிமன்றம்.

தேர்தல் திகதியை முன்கூட்டியே அறிவித்தது சட்ட விரோதமானதும் உள்நோக்கம் கொண்டதும் என்று கூறி சரிநிகர் ஆசிரியரால் தொடுக்கப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு 'தகுந்த ஆதாரங்கள்' அற்றது என்று கூறி நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்குக்கு தகுந்த ஆதாரங்களை ஜனாதிபதியின் அறிக்கைகள் பத்திரிகைச் செய்திகள், வர்த்தமானி அறிக்கைகள் என்பவற்றிலிருந்து எடுத்துக் காட்டி சரிநிகர் ஆசிரியரால் தொடுக்கப்பட்ட வழக்கில் தெரிவிக்கப்பட்ட ஆதாரங்கள் போதாது என்று கூறி இவ்வழக்கைப் பரிசீலனை செய்த பிரதம நீதியரசர் சரத் டி சில்வா, நீதியரசர் பிரியந்த பெரேரா, நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க ஆகியோர் இதனைத் தள்ளுபடி செய்துள்ளனர்.

ஜனாதிபதியின் காலத்துக்கு முந்திய தேர்தல் அறிவிப்பும் அதற்கு அவர் தெரிவித்த காரணங்களும் வெளிப்படையானவை. மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப் பலம் இன்மையே தனது ஜனாதிபதி தேர்தல் அறிவிப்புக்கான காரணம் என்று அவர் திரும்பத் திரும்பச் சொன்னார். ஏன் சென்ற வாரம் உத்தியோகபூர்வமாக அமைச்சர் மங்கள சமரவீரவால் வெளியிட்டு வைக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கான பொ.ஐ.முவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூட அதை அவர் தெரிவிக்கத் தவறவில்லை.

தேர்தல் ஆணையாளர் நியமனம் கூட சந்தேகத்தை ஏற்படுத்தும் விதமாக அமைந்திருந்தது.

ஆனால், இவையெல்லாம் உயர் நீதிமன்றின் கண்களுக்குப் புலப்படவில்லை.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மேல் முறையீட்டு வாய்ப்பு இல்லாததால் கதை இந்தளவுடன் முடிந்துவிடுகிறது.

உயர் நிதீமன்றம் ஆட்சியாளர்களின் தேவைகளையும் நலன்களையும் பிரதிபலித்த காலங்கள் இலங்கையின் வரலாற்றில் முன்பு இருந்ததாக குறிப்பிடப்படுகின்ற போதும், பல காலங்களில் அது ஆட்சியாளருக்கு எதிராக, நியாயத்தின் பக்கம் நின்று செயற்பட்டிருக்கிறது.

உயர்நிதீமன்ற நீதியரசர்கள் கைப்புண்ணைப் பார்க்கக் கண்ணாடி கேட்டு ஒரு வெளிப்படையான சட்டவிரோத நடவடிக்கையை சட்டபூர்வமாக்கி விட்டிருக்கின்றார்கள்.

நீதிமன்ற விதிகளுக்கும், எல்லைப்பாடுகட்கும் மத்தியில் இந்த முடிவுகள் நியாயமானவையாகப் போய் விடலாம்.

அந்தச் சட்டங்கள் இம்முடிவை சட்டபூர்வமான முடிவாக ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், மக்களின் கண்முன் இவை தெளிவாகப் பதிவாகியுள்ளன.

அவர்களது தீர்ப்பு மட்டுமே இறுதியானது.

மக்கள் சட்டவிரோத நடவடிக்கையைக் கூட நியாயமானது என்று ஏற்பார்களா இல்லையா என்பதை அவர்களது தீர்ப்பில் அறிவிப்பார்கள்.

அதிலும், கைவைத்து அரசாங்கம் 'கள்ளவாக்கு' நிலைக்கு இறங்காவிட்டால்.

கள்ளவாக்கு அரசியல், ஆள்மாறாட்ட ஜனநாயகம், வன்முறை அதிகாரம் எல்லாம், மக்களை தீவிரமான வன்முறை அரசியலுக்கு இட்டுச்செல்லும் காரணிகள்.

அரசாங்கம் எதை விரும்புகிறது என்பதைப் பொறுத்தது அது!

## ஜனநாயக வன்முறை

நவம்பர் 4ம் திகதி இலங்கையில் அவசர ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என அரசாங்கத்தால் பிரகடனம் செய்யப்பட்டது. அத்துடன் டிசெம்பர் 21ம் திகதி தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் பி.பி. தசநாயக்கா அறிக்கை விடுத்தார். அறிக்கை விடுத்தலுடன் ஆரம்பமான தேர்தல் விழா வன்முறைகள் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ஜனநாயகத்தைப் பற்றியும், வன்முறையற்ற அரசியல் பற்றியும், பேசிக்கொண்டு 1994ல் ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசாங்கம் தனது புனிதத்தன்மையை வடமேல் மாகாண சபைத் தேர்தலிலும் பத்திரிகையாளர்களுக்கெதிரான ஒடுக்குமுறை மூலமாகவும் வெளிக்காட்டியிருந்தது தெரிந்ததே. இத்தன்மையை மேலும் வலியுறுத்தும் வகையில் முதலாவது தேர்தல் வன்முறை நவம்பர் 14ம் திகதி எப்பாவெலையில் ஐ.தே.கவுக்கெதிராக உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் இவ் வன்முறை இரு உயிர்களைப் பலியெடுத்திருந்தது. தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் குழுவின் நாளாந்த அறிக்கையின்படி 13ம் திகதி வரையில் 707 வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வடமேல் மாகாண சபைத் தேர்தலில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடாத்துவதாக உறுதி பூண்டிருந்த சந்திரிகா அரசாங்கம், ஐ.தே.கவுக்கு சளைக்காத வகையில் மேற்கொண்டிருந்த காடைத்தனங்கள் நன்கு அரங்கேறியிருந்தன.

இப்பொழுது இன்னொரு தேர்தல். வன்முறையாளர்களும், வேட்பாளர்களைப் போன்று களத்தில் குதித்து விட்டனர். வாக்குகளை துஷ்பிரயோகம் செய்ய, தமக்கு எதிரான கட்சிகளைச் சேர்ந்தவர்களைத் தாக்க, பயமுறுத்த, பெண்களின் துகிலுரியவென இவர்கள் களத்தில் நிற்கின்றனர்.

உண்மையில், வன்முறைகள் என்பது இலங்கை அரசியல் கலாசாரத்தின் ஒரு அங்கமாகிவிட்டது. இரண்டாவதாக வடக்கின் யுத்தமும் 89,90 காலகட்டத்தில் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சி காரணமாகவும் சமூகம் ஆயுதங்களுக்கு பழக்கப்பட்டு விட்டது. மூன்றாவதாக, இந்த வன்முறைகளுக்கு எதிராக நிலவும் மக்கள் அபிப்பிராயம் மிகவும் உதாசீனத் தன்மையைக் கொண்டுள்ளதென தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் குழுவினைச் சேர்ந்த பாக்கியசோதி சரவணமுத்து அவர்கள் தெரிவிக்கிறார்.

"வன்முறைகளினால் 3 மரணங்கள் இடம் பெற்று விட்டன. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 75. இந்த நிலைமையில் டிசெம்பர் 21ம் திகதி நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்றை நடாத்த முடியுமா என்பதை நினைத்துப் பார்க்க முடியாதென்கிறார் நீதியானதும் சுதந்திரமானதும் தேர்தலுக்கான மக்கள் அமைப்பினைச் சேர்ந்த கிங்ஸ்லி ரொட்றிகோ.

டிசெம்பர் 10ம் திகதி வரையில் தேர்தல் வன்முறைகள் காரணமாக எப்பாவெலை, பிபிலையில் இடம்பெற்ற சம்பவங்கள் காரணமாக 5 கொலைகள் நடைபெற்றுள்ளன. இக்கொலைகளின் சந்தேக நபர்களாக பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதைத் தவிர 2 கொலை முயற்சிகள், 57 காயமடைந்த சம்பவங்கள், 135 கடத்தல் சம்பவங்கள், 48 பயமுறுத்தல்கள், 8 திருட்டுச் சம்பவங்கள் என்ற வகையில் 267 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பொ.ஐ.மு 154 சம்பவங்களுக்கும், ஐ.தே.க 70 சம்பவங்களுக்கும், இனந்தெரியாதோரால் 43 சம்பவங்களுக்கும் பொறுப்புச் செல்ல வேண்டியுள்ளனர்.

கடந்த 16ம் திகதி ஐ.தே.க காரியாலயங்கள் மூன்று தாக்கப்பட்டு 25 பேர் காயமடைந்துள்ளனர். வேட்புமனு தாக்கல் செய்ய சில மணித்தியாலங்கள் எஞ்சியிருந்த வேளை பொரல்லை, வெலிகட, மிரிஹான போன்ற பிரதேசங்களில் அமைந்திருந்த ஐ.தே.க காரியாலயங்கள் மீது வன்முறையாளர்கள் மேற்கொண்ட வன்முறைகளினால் 25 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவங்களை மேற்கொள்ள ஜனாதிபதி பாதுகாப்புச் செயலகப்பிரிவு சமூகளித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 20ம் திகதி கெக்கிராவையில் நடைபெற்ற ஐ.தேக. பிரச்சார கூட்டத்திற்கு கெக்கிராவை பிரதேச சபையைச் சேர்ந்த தலைவரும், அவரது தொண்டர்களும் டயரை எரித்து இடையூறு செய்துள்ளனர். இதேபோல் காமினி அத்துகோரள அவர்களின் பாதுகாப்பு அதிகாரிகள் தாக்கப்பட்டுள்ளனர். 22ம் திகதி விடியற்காலை 3.30 மணியளவில் பா.உ. ரவி கருணாரத்ன அவர்களின் அலுவலகம் இரண்டாவது முறையும் தாக்கப்பட்டுள்ளது. இதுவரையில் சட்டவிரோதமான ஆயுதங்கள் 15,000 பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸ் தகவல் வட்டாரங்கள் கூறுகின்றன.

அத்துடன் கடந்த ஞாயின்று ஐ.தே.க. சார்பு சுவரொட்டிகள் அச்சடிக்கப்பட்ட அச்சகங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளன. பிட்டக்கோட்டே பங்களா ஹந்தியவில் அமைந்துள்ள விதுரவி அச்சகம் மற்றும், நாவல வெலிபார வீதியில் அமைந்துள்ள சமனல கிராபிக்ஸ் அச்சகம் என்பன ஒரே நேரத்தில் இரு வன்முறைக் கும்பல்களினால் தாக்கப்பட்டுள்ளன. இதனால் கோடிக்கணக்கான பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன என உரிமையாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இரண்டு வான்களிலும், ஒரு காரிலும் வந்த ஆயுதந்தாங்கிய 30 பேர் இந்தத் தாக்குதலை நடாத்தியதாக தெரியவருகின்றது.

அதேபோல் ஜே.வி.பி கட்சி பிரச்சாரக் கூட்டத்திற்காக சுவரொட்டிகள் ஒட்டிக் கொண்டிருந்த ஜே.வி.பி ஆதரவாளர்கள் நால்வர் பொ.ஐ.மு. ஆதரவாளர்களினால் மனிதாபிமானமற்ற முறையில் தாக்கப்பட்டு, நகங்கள் பிய்த்தெடுக்கப்பட்டு சித்திரவதைப்படுத்தப்பட்டுள்ளனர்.

டி - 56 ரக துப்பாக்கிகள், ஆயுதங்கள் என்பவற்றுடன் வந்து இவர்கள் இத்தாக்குதலை நிகழ்த்தியுள்ளனர்.

இதற்கிடையில் வடமேல் மாகாண சபை தேர்தலின் பின் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கள்ளவாக்கு செயற்பாடுகளை தடுக்கும் வகையிலான செயற்பாடுகள், புதிய தேர்தல் ஆணையாளரினால் சற்று தளர்த்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நடைமுறையின் படி இறந்தவர்களின் பெயர்ப்பட்டியலை தயாரித்து அவற்றை வாக்களிப்பு நிலையத்திற்கு பொறுப்பாக உள்ளவருக்கு வழங்குதல் வேண்டும். இந்த இறந்தவர்களின் வாக்குகளை இட வருபவர்கள் பட்டியலின் படி சரி பார்க்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பன இந்த செயற்பாடுகளாகும். எனினும், இறந்தவர்களின் பெயரில் வாக்கை பயன்படுத்த வருபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற செயற்பாடு புதிய ஆணையாளரினால் நீக்கப்பட்டுள்ளது எனவும் தெரிய வருகின்றது.

இவையெலாம் நீதியான சுதந்திரமான தேர்தல் பற்றி ஐயத்தை ஏற்படுத்துகின்றன எனலாம்.

### பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
### மலிவு விற்பனை

இலக்கம் 58, தர்மாராம வீதி (சவோய் சினிமா எதிரில்) கொழும்பு 06 இல் அமைந்துள்ள பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் எதிர்வரும் மார்கழி 27, 28ந் திகதிகளில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 04.30 மணி வரை தனது தமிழ், சிங்கள, ஆங்கில புத்தக வெளியீடுகளை மலிவு விற்பனையாக 50% தள்ளுபடியில் விற்பனை செய்ய உள்ளதை வாசகர்கட்கு அறியத் தருகின்றது.




மு.பொவின்

நோயில் இருத்தல்

(நாவல்)

வெளியீடு

26.12.1999 ஞாயிறு

மாலை 4.00 மணிக்கு

இராமகிருஷ்ண மிஷன்

(சிறிய) மண்டபத்தில்

வெளியிடுபவர்: ச.பாலகிருஷ்ணன், இல.18/02, அலோசாலை, கொழும்பு 03, அச்சுப்பதிவு:பிறின்ற்இன், இல.07,கெகட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 17.12.1999